THEN *and* NOW



அன்று ஹர்ஷர் சபையிலிருந்த சரகர் என்ற வைத்தியர் காலத் திரையிலே மங்கலாகத் தெரியும் அந்த நாட்களிலேயே மீன் எண்ணெயின் சக்தியை அறிந்து, அதனை பலவித வியாதிகளையும் குணப்படுத்த உபயோகித்து வந்தார். பழங்கால சீன எகிப்திய வைத்தியர்கள்கூட மீன் எண்ணெயை நோயாளிகளுக்குக் கொடுத்து வந்தார்கள்.

இன்று வைத்தியர்கள் சத்துக் குறைவின் பலரூபங்களைச் சரிப்படுத்தவும், சீரிய தேகாரோக்கியத்தை அமைத்துக் காப்பாற்றவும், எம் ஜி பி ஷார்க்லிவர் எண்ணெயையாவது அடமினையாவது (அடமின் சுறு மீன் எண்ணெயின் திடரூபம்) உபயோகிக்கிறார்கள்.

ஏனெனில்

★ அது தேகாரோக்கியத்துக்கு அத்யாவசியமான விடமின்கள் A. D இவைகளை அபரிமிதமாகக் கொண்டிருக்கிறது.

★ அது. இறக்குமதியாகும் எல்லா காட்லிவர் எண்ணெய்களை விட சக்தி வாய்ந்தது.

★ அது உண்மையான 'உணவு-மதிப்பு' பெற்றிருக்கிறது.



MGB

SHARK LIVER OIL

and **Adamin**

HIGH POTENCY VITAMIN OIL



GOVERNMENT OIL FACTORY, CALICUT.

ADS.

சென்னை பாரகன் & பிராட்வேயில்

மற்றும் மாகாணமெங்கும் 40 முக்கிய தியேட்டர்களிலும்
பொங்கல் முதல் நடைபெறுகிறது.



டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:

சென்னை நகர உரிமைகள்: ஸ்ரீ ரத்னா பிக்சர்ஸ், 83, பூந்தமல்லி ஹைரோட், மதராஸ் - 10
திருவாங்கூருக்கு: தி பிலிம் டிஸ்ட்ரிப்யூடிங் கம்பெனி, எர்ணாகுளம்
கொச்சின் மலபாருக்கு: அசோசியேடட் பிக்சர்ஸ் லிமிடெட், எர்ணாகுளம்
மைசூர் பிராந்தியத்திற்கு: ஸ்ரீ எல். எஸ். அய்யர், சாரதா பிலிம்ஸ், 174, காந்தி நகர், பெங்களூர் - 2
கோயமுத்தூர் நீலகிரிக்கு: கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்
தென் ஆற்காடு, வட ஆற்காடு செங்கற்பட்டு சித்தூர் ஆகிய ஜில்லாக்களுக்கு:
ஸ்ரீ எ. கிருஷ்ணஸ்வாமி, பிலிம் டிஸ்ட்ரிபியூட்டர், 14, பெங்களூர் ரோடு, வேலூர்
இலங்கைக்கு: வெல்லிங்டன் டாக்கி சர்க்யூட், 117, புது செட்டி வீதி, கொழும்பு
சேலத்திற்கு: அசோகா பிக்சர்ஸ், குகை, சேலம்
ஆந்திரா ஸீடட் ஜில்லாக்களுக்கும், நைஜாம் சமஸ்தானத்திற்கும்: சரஸ்வதி டாக்கீஸ் லிமிடெட், விஜயவாடா
திருச்சி, தஞ்சாவூர் ஜில்லாக்களுக்கு: முத்து மாணிக்கம் கம்பெனி, சிதம்பரம்

கல்கி
பொருளடக்கம்

மலர் 8, இதழ் 26 | ஜனவரி 23 | சர்வதாரி ௵ தை 10

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 26

என்ன சேதி?

பாதக தந்திரம்


தென்னாப்பிரிக்காவிலிருந்து சென்ற வாரத்தில் வந்த கோரமான செய்திகள் நம் நேயர்களைப் பயங்கரத்தில் ஆழ்த்தியிருக்கும். இந்தியாவில் பிரிட்டிஷார் பன்னெடுங்காலம் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டார்கள் என்பதை நாம் அறிவோம். அந்தப் பாதக தந்திரத்தைத் தென்னாப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியர் மிகக் கொடிய முறையில் கையாளுகிறார்கள் என்பதற்கு மேற்படி பயங்கரச் செய்திகள் அறிகுறியாகும். தென்னாப்பிரிக்கா சுதேசிகளின் நாட்டையும் நிலத்தையும் இயற்கைச் செல்வங்களையும் கவர்ந்து கொண்டவர்கள் ஐரோப்பியர்கள். அந்த ஐரோப்பியர்களிடம் கூலிக்கு உழைக்கச் சென்று சொல்லொணாத கஷ்டப்பட்டவர்கள் இந்தியர்கள். இன்னமும் அவர்களுடைய கஷ்டங்களுக்கு முடிவு ஏற்பட்டபாடாக இல்லை. இத்தகைய நிலைமையில் தென்னாப்பிரிக்கா சுதேசிகள் இந்தியர்களின் பேரில் கோபவெறி கொள்வானேன்? கொள்ளை, கொலை முதலிய கோர பாதகங்களில் இறங்குவானேன்?

வெள்ளை நிறத்தவர்களின் தனி உடைமையாகத் தென்னாப்பிரிக்கா இருக்க வேண்டும் என்பதும், வேறு நிறத்தவரை அடியோடு அழித்துவிட வேண்டுமென்பதும் மாலன் சர்க்காரின் நோக்கம். இந்த நோக்கம் நிறைவேறுவதற்குச் சாதனமாகக் காட்டுமிராண்டி ஜுலுக்களை இந்தியர்கள்மீது ஏவி விட்டிருக்கிறார்கள் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. பிரித்தாளும் தந்திரத்தைப் 'பிரித்து அழிக்கும் பாதகம்' என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கையாண்டிருக்கிறார்கள். இதனுடைய விளைவு இந்தியர்கள் அடைந்த கஷ்டத்தோடு போய்விடாது என்றும் உலகத்தையே அழிக்கக்கூடிய பெரிய நெருப்பாக மூண்டு விடுமென்றும் தளபதி ஸ்மட்ஸ் எச்சரித்திருக்கிறார். இந்த எச்சரிக்கை ஐக்ய நாடுகளின் சபையிலுள்ள இராஜ தந்திரிகளின் செவியில் விழுந்திருக்குமென்று நம்புகிறோம். தென்னாப்பிரிக்காவில் தாண்டவமாடும் நிறவெறிப் பேயை அடக்கி, இந்தியர்களின் உயிருக்கும் உடைமைக்கும் உரிமைகளுக்கும் பந்தோபஸ்து செய்து தர வேண்டியது ஐக்யதேச சபையின் முதற் கடமையாகும். அந்தக் கடமையை ஐக்யதேச சபை நிறைவேற்றாவிட்டால் உலகத்தில் நிற வேற்றுமையை அடிப்படையாகக் கொண்ட பெரும் யுத்தத்துக்கு வரவேற்புக் கூறியதாக முடியும்.

தலைவருக்கு உபசாரம்

காங்கிரஸ் அக்கிராசனர் டாக்டர் பட்டாபி சீதாராமையா அவர்களுக்குச் சென்ற வாரத்தில் சென்னை நகரம் உற்சாகமான வரவேற்பு அளித்து உபசரித்தது. இது மிகவும் பொருத்தமான காரியம் என்பதில் சந்தேகம் இல்லை. உபசாரங்களுக்குப் பதில் அளிக்கையில் காங்கிரஸ் திட்டங்களை நிறைவேற்றுவது பற்றி டாக்டர் பட்டாபி சீதாராமையா பேசியிருக்கிறார். அத்துடன் நின்றிருந்தால் நலமாயிருந்திருக்கும். "சென்னை நகரத்தைத் தனி மாகாணமாக்கவேண்டும்" என்ற அபிப்பிராயத்தை வெளியிட்டு வீண் விவாதத்தை உண்டாக்கியது வருந்தத்தக்கது. சென்னை நகரத்தைத் தனி மாகாணமாக்கும் யோசனையைத் தமிழர் யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. அது நியாயத்துக்கோ நேர்மைக்கோ உகந்ததல்ல. சரித்திர பூர்வமான தமிழகத்தின் எல்லைக்குள் சென்னை அடங்கியிருக்கிறது. சென்னை வாசிகளில் மிகப் பெரும்பாலோர் தமிழர்கள். இந்த இரண்டு காரணங்களும் சென்னையைத் தமிழ் நாட்டில் சேர்ப்பதற்குப் போதாவென்றால், இந்த மாதிரி பிரச்னைகளில் உலகமெல்லாம் கையாளப்படும் முறை ஒன்று இருக்கவே இருக்கிறது. அதுதான் பொதுஜன வாக்கெடுப்பு முறை. காஷ்மீரத்தில் இவ்வளவு காலம் யுத்தம் நடத்தி, இவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து, உயிர்களையும் பலி கொடுத்த பிறகு, காஷ்மீர் இந்தியாவில்

தள்ளிப் போங்கோ!




சேர்வதா பாகிஸ்தானில் சேர்வதா என்னும் பிரச்னையைத் தீர்க்கப் பொதுஜன வாக்கு எடுப்பதற்கு நாம் சம்மதித்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது சென்னை நகரத்தின் வருங்காலத்தைப் பற்றித் தீர்மானிப்பதற்குச் சென்னை நகரவாசிகளின் அபிப்பிராயத்தைக் கேட்பதில் என்ன ஆட்சேபம் இருக்க முடியும்?

மலையாள மாகாணம்

சென்ற வாரத்தில் சென்னையில் மலையாளிகளின் மாபெரும் கூட்டம் ஒன்று நடந்தது. கொச்சி முதன் மந்திரி, திருவாங்கூர் முதன் மந்திரி, நமது மலையாள மந்திரி ஸ்ரீ கே. மாதவ மேனன் முதலிய மலையாளப் பிரமுகர்கள் பலர் "மலையாள மாகாணம் உடனே ஏற்பட்டாக வேண்டும்" என்று வற்புறுத்திப் பேசினார்கள். தனி மலையாள மாகாணம் ஏற்படுவதில் தமிழர்களுக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லை. அதில் பல சௌகரியங்களும் இருக்கின்றன. உணவுப் பொருள் பற்றாக்குறைப் பிரதேசங்களில் மலையாளம் முதன்மையானது. மலையாளத்துக்கு உணவுப் பொருள் தருவித்துக் கொடுக்கும் பொறுப்பு நம்மிடமிருந்து சென்றால் சந்தோஷப்பட வேண்டியது தானே? திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களின் மன்னர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு அந்தப் பிரதேசங்களை மலையாளத்தில் சேர்த்துக் கொள்வதிலும் நமக்கு ஒன்றும் ஆட்சேபமில்லை. ஆனால் திருவாங்கூரை அப்படிச் சேர்க்கும்போது காஞ்சில் நாட்டுப் பிரதேசத்தைப் பிரித்துத் தமிழ் நாட்டோடு சேர்த்து விடுவதுதான் தர்ம நியாயமாகும். காஞ்சில் நாட்டில் மிக மிகப் பெரும்பாலோர் தமிழர்கள். அதோடு காஞ்சில் நாடு திருநெல்வேலி ஜில்லாவை யொட்டிய பிரதேசமும் ஆகும். எனினும் காஞ்சில் நாட்டை அவ்விதம் பிரித்துத் தமிழ்நாட்டுடன் சேரும்படிவிட முடியாது என்று திருவாங்கூர் முதன் மந்திரி கூறியிருக்கிறார். "காஞ்சில் நாடு நெடுங்காலமாகத் திருவாங்கூரோடு சேர்ந்திருந்தது" என்று காரணமும் சொல்லுகிறார். அழகான காரணம் அல்லவா? அப்படிப் பார்த்தால் வெகுகாலமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் சேர்ந்திருந்த இந்தியா இனியும் சேர்ந்திருக்க வேண்டியதுதான். வெகு காலமாகப் பிரஞ்சு ஆட்சியின் கீழிருந்த புதுச்சேரி இனி எப்போதும் பிரஞ்சு சாம்ராஜ்யத்தில் அடங்கி யிருக்க வேண்டியதுதான். திருவாங்கூர் மன்னர் குடும்பத்தின் அரசுரிமையே அற்றுப் போகும்போது, காஞ்சில் நாட்டுக்கும் திருவாங்கூருக்கும் உள்ள தொடர்பு எப்படிச் சிரஞ்சீவித்வம் பெற்றிருக்கும்?

ஆசியாவின் ஜோதி!



பண்டித ஜவாஹர்லால் நேருவின் அழைப்புக் கிணங்க நிகழும் ஜனவரி 20-உ. புது டில்லியில் பத்தொன்பது கீழ்த்திசை நாடுகளின் மகாநாடு கூடியிருக்கிறது.

பத்திரிகை தர்மம்

காந்தி மகாத்மா உலகத்தில் ஒப்பற்ற பத்திரிகாசிரியராக விளங்கினார். அவருடைய புதல்வர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி இன்று இந்தியாவின் தலைசிறந்த பத்திரிகாசிரியர்களில் ஒருவராக விளங்குகிறார். புது டில்லியில் வெளியாகும் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" என்னும் செல்வாக்கு வாய்ந்த தினப் பத்திரிகையின் ஆசிரியர் அவர். சென்ற இரண்டு வருஷ காலமாக அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மகா நாட்டின் தலைவர் பதவியை வகித்து வருகிறார்.

பத்திரிகாசிரியர் தலைவர் ஸ்ரீ தேவதாஸ் காந்தி சென்ற வாரத்தில் சென்னைமாநகருக்கு விஜயம் செய்திருந்தார். அது சமயம் பத்திரிகைக்காரர் கூட்டமொன்றில் ஓர் அரிய பிரசங்கம் செய்தார். பத்திரிகைகளின் சுதந்திரம்பற்றிப் பேசினார். பத்திரிகைத் தொழிலாளிகளின் நலன்களைப் பற்றிப் பேசினார். அத்துடன் நின்றுவிடவில்லை. பத்திரிகாசிரியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பத்திரிகை தர்மத்தைப் பற்றியும் பேசினார். தற்சமயம் பத்திரிகை உலகத்துக்கு அவசியம் வேண்டிய பேச்சு அது; தமிழ் நாட்டுக்கு மிக முக்கியமான பேச்சு அது.

• • •

தமிழ் நாடு பண்பாட்டில் சிறந்த நாடு. தமிழ் மக்கள் பண்பாட்டில் சிறந்த மக்கள். பண்பாடு என்றால் என்ன? ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டு உயர்வை எதிலிருந்து அறியலாம்? அவர்களுடைய பேச்சின் தரத்திலிருந்து அறியலாம்; அவர்களது எழுத்தின் ரகத்திலிருந்து அறியலாம்.

யாரைப் பற்றியும் வீண் அவதூறு பேசாமலிருப்பது பண்பாட்டுக்கு அடையாளம். எதிரியைப் பற்றிப் பேசும்போது கூட மரியாதையுடன் பேசுவது பண்பாட்டுக்கு அடையாளம். ஆபாசமான வார்த்தை எதையும் பேசக் கூசுவது பண்பாட்டிற்கு அறிகுறி. அஸங்கியமான விஷயம் எதையும் எழுதுவதற்கு அடியோடு மறுப்பது உயர்ந்த பண்பாட்டின் அறிகுறி.

தமிழர்கள் சிறந்த பண்பாட்டுக்கு உதாரணமானவர்கள். பேச்சிலும் எழுத்திலும் தூய்மையைக் கடைப்பிடித்து ஆபாசத்தை வெறுப்பவர்கள். எதிரிகள் விஷயத்திலும் மரியாதையுடன் நடந்து கொள்கிறவர்கள்.

நாலு பேர் உள்ள இடத்தில் ஸ்திரீ புருஷ சம்பந்தத்தைப் பற்றிப் பேசுவதற்குத் தயங்குவார்கள். பேச அவசியம் நேர்ந்தாலும் மிக நாஸூக்காகப் பேசுவார்கள். ஸ்திரீகள் உள்ள இடத்தில் அசந்தர்ப்பமாக ஒருவன் ஏதாவது பேசி விட்டால், அதைக் காட்டிலும் அவனுக்கு அவமானம் வேண்டியதில்லை. இது தமிழர்களுடைய பண்பாடு; தமிழர்களுடைய மேன்மை; தமிழர்களுடன் பிறந்த இயற்கைக் குணம்.

ஆனால் சில காலமாகத் தமிழ் மக்களுடைய பண்பாட்டுக்கும் இயற்கைக் குணத்துக்கும் முற்றும் மாறான காரியங்கள் சில நடந்துகொண்டு வருகின்றன. தமிழ் டாக்கிகளில் ஆபாசமான காட்சிகள் வருகின்றன. ஆபாசமான வார்த்தைகள் பேசப்படுகின்றன. தெய்வங்களைக் கூட ஆபாசங்களுக்கு உட்படுத்தி விடுகிறார்கள். இந்த மாதிரி காட்சிகளை ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் உட்கார்ந்து சினிமாக் கொட்டகைகளில் பார்க்கிறார்கள். ஆபாச வார்த்தைகளைக் கேட்டுச் சிரிக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கெல்லாம் அந்த மாதிரி காட்சிகளும் பேச்சுகளும் சகஜமாகி விடுகின்றன; தமிழரின் பண்பாடு ஊனம் அடைகிறது.

ஆபாச டாக்கியினால் தமிழர்களின் பண்பாட்டுக்குக் கேடு வந்தது. அதைவிட அதிகமாக ஆபாசப் பத்திரிகைகளின் மூலமாக வந்தது. சினிமாக்காரர்களின் 'சொந்த வாழ்க்கை'களை ஆதாரமாகக் கொண்டு முதலில் அத்தகைய ஆபாசப் பத்திரிகைகள் எழுந்தன. பிரபலஸ்தர்களைப் பற்றிய நல்ல விஷயமானாலும், கெட்ட விஷயமானாலும் அதைத் தெரிந்து கொள்ள ஆவல் கொள்வது மனித இயற்கை. அந்த மனித இயற்கையையொட்டி ஆபாசப் பத்திரிகைகளுக்குக் கிராக்கி ஏற்பட்டது.

ஒரு மனிதன், — சினிமாக்காரனாயினும் வேறு யாராயினும் ஒழுக்கக் கேடு அடைந்தால், அதற்குரிய தண்டனை அவனை வெகு சீக்கிரத்தில் வந்து

அடைகிறது. இது புருஷனுக்கும் சரிதான்; ஸ்திரீக்கும் சரிதான். அவரவர்களுடைய துன்மார்க்கத்தின் பலனை அவரவர்களே சீக்கிரத்தில் அநுபவிக்கிறார்கள். துன்மார்க்கமும் அதன் தீய பலனும் அவர்களுடனே போய்த் தொலைகின்றன.

ஆனால் ஒரு மனிதனுடைய துன்மார்க்கத்தைக் கண்டுபிடித்து வெளிப்படுத்துவதாகச் சொல்லிப் பத்திரிகையில் வெளியிடுவதன் பயன் என்ன? பிரபலஸ்தர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆசையினால் அதை ஆயிரக்கணக்கானவர்கள் படிக்கிறார்கள். ஸ்திரீகள் படிக்கிறார்கள்; இளம் பிள்ளைகள் படிக்கிறார்கள். எல்லாருடைய மனங்களும் அசுத்தமாகின்றன.

ஆபாசப் பத்திரிகைக்காரர்கள் ஸினிமாக்காரர்களின் சொந்த வாழ்க்கை விவரங்களோடு விடுவார்களா?

அந்த விஷயம் பழசாய்ப் போய் விட்டால், அதாவது ஸினிமாக்காரர்களின் அந்தரங்க வாழ்க்கையில் ஜனங்களுக்குச் சிரத்தை குன்றி விட்டால், அடுத்தபடி தேசத் தலைவர்களைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் தெய்வமெனப் போற்றும் மகான்களைக் குறித்து ஆபாசமான பொய்களை எழுதுகிறார்கள்!

இன்னும் சில பத்திரிகையாளர் வேறு ஒரு நவீன முறையைக் கையாளுகிறார்கள். உண்மைக் கதை என்று சொல்லிக் கொண்டு பொய்க் கதைகளை ஆபாசமான விவரங்களுடனும், வர்ணனைகளுடனும் எழுதுகிறார்கள்.

உண்மைக் கதையாக இருந்தால் என்ன? கட்டுக் கதையாயிருந்தால் என்ன? ஆபாசம் ஆபாசமேயல்லவா?

பத்திரிகைத் தொழிலைப் பிடித்த இந்தப் பெருந் தீமை வட இந்தியாவில் ஓரளவு பரவியிருக்கிறது.

பண்பாட்டிற் சிறந்த தமிழ் நாட்டிலும் அவ்வப்போது மேற்படி தீமை தலைகாட்டுகிறது; சிற்சில சமயம் ஓங்கி வளர்கிறது என்று கூடச் சொல்லலாம்.


சிறு பிள்ளைகள் வாலிபப் பருவத்தை அடையும் சமயத்தில் அவர்களுடைய மனம் ஸ்திரீ புருஷ சம்பந்தம் பற்றிய விவரங்களில் செல்லுவது சகஜம். அப்படிச் செல்லாமல் தடுத்து வாலிபர்களுடைய கவனத்தை உடற்பயிற்சி, கலை உணர்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி, சமூகத் தொண்டு ஆகியவற்றில் செலுத்தும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அத்தகைய வாலிபர்கள் தீர புருஷர்களாக வளர்ந்து வாழ்க்கையில் அரும் பெரும் செயல்களைச் செய்யக் கூடியவர்களாவார்கள்.

ஆனால் ஆபாசப் பத்திரிகைகளும் பிரசுரங்களும் வாலிபர்களுடைய கவனத்தை மிகக் கீழான காரியங்களில் இழுத்து அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடை செய்கின்றன. மேற்படி தீமையினால் அதல பாதாளத்தில் விழுந்து நாசமடைகிறவர்களும் உண்டு. பண்பாட்டுக்கு விளையும் கேட்டைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

* * *

ஸ்ரீ தேவதாஸ் காந்தி பத்திரிகைக்காரர்களுக்குச் செய்த பிரசங்கத்தில் ஆபாசப் பத்திரிகைகளைப் பற்றித் தீவிரமாக எச்சரிக்கை செய்தார். அவை வளரவிடாமல் தடுக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். இது விஷயத்தில் ''பத்திரிகைக்காரர்களுக்கும் கடமை உண்டு; பொது மக்களுக்கும் கடமை உண்டு'' என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டினார்.

ஆபாசப் பத்திரிகைகள் எவ்வளவு தூரத்துக்குப் போகும் என்பதற்கு ஒரு பயங்கரமான உதாரணத்தையும் ஸ்ரீ தேவதாஸ் எடுத்துச் சொன்னார். ''பண்டித ஜவஹர்லால் குடித்துவிட்டுக் கூத்தாடினார்'' என்று ஒரு பத்திரிகையில் எழுதியிருந்ததாம்! இத்தகைய பத்திரிகை வெளியான கௌரவம் நமது தமிழ் நாட்டைச் சேர்ந்தது தானாம்!



ஸ்ரீ தேவதாஸ் காந்தி

''பத்திரிகைச் சுதந்திரம் வேண்டும் என்று கேட்கும் நாம் இம்மாதிரி ஆபாச அவதூறுகளைத் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டாமா? நாமும் தடுக்க மாட்டோம், சர்க்காரும் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சொன்னால், போகும் வழி என்ன? பண்டித

ஜவாஹர்லால் நேரு இந்த ஆபாசப் பத்திரிகைக்காரர் மீது அவதூறு வழக்குத் தொடருவதா? அல்லது எப்பேர்ப்பட்ட பக்திக்குரிய தேசத் தலைவரைப் பற்றியும் என்ன ஆபாச அவதூறு வேணுமானாலும் எழுதி அச்சிடலாம் என்று விட்டு விட்டிருப்பதா?'' என்று ஸ்ரீ தேவதாஸ் கேட்டார். அப்படி விட்டு விட்டால் பத்திரிகை உலகத்துக்கே அவமானமும் அழிவும் தேடிக்கொண்டதாகும் என்று எச்சரிக்கை செய்தார்.

* * *

பேசுகிற வார்த்தைக்கு ஜனங்கள் கொடுக்கிற மதிப்பைக் காட்டிலும் அச்சு எழுத்துக்கு அதிக மதிப்புக் கொடுக்கிறார்கள். பத்திரிகையில் அச்சிட்டு வந்தால் அது உண்மையாகத்தான் இருக்கும் என்று நம்புகிறார்கள்.

ஆனால் பத்திரிகைக்காரர்கள் பத்திரிகை தர்மத்தை மறந்து வரம்பு கடந்து செல்லும்போது பத்திரிகைகளிடம் ஜனங்களின் மரியாதையும் நம்பிக்கையும் குறைந்து போய்விடுகின்றன.

சமீபத்தில் அமெரிக்காவில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் வரம்பு மீறிய பத்திரிகைகளுக்குப் பொது ஜனங்கள் ஒரு பாடம் கற்பித்தார்கள்.

இருபது லட்சம் முதல் நாற்பது லட்சம் வரையில் விற்பனையாகும் பெரிய பெரிய அமெரிக்கப் பத்திரிகைகள் எல்லாம் ஜனாதிபதி தேர்தலில் ட்யூயி என்பவரை ஆதரித்தன. ஆதரித்ததோடு நிற்கவில்லை; ட்யூயி தான் வெற்றியடைவார் என்று உறுதி கூறின.

ஆனால் அத்தகைய பத்திரிகைகளுக்கெல்லாம் அமெரிக்கப் பொதுஜனங்கள் நாமத்தைப் போட்டுவிட்டு ட்ருமனை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

அமெரிக்கப் பத்திரிகைகள் எல்லாம் தங்களுடைய தவறை ஒப்புக்கொண்டு ''செய்த தவறுக்காகத் தோப்புக்கரணம் போடத்தயார்'' என்று வாசகர்களுக்குத் தெரியப்படுத்தின.

கடைசியாக இந்தியாவுக்கு வந்திருக்கும் 'லைப்' பத்திரிகையின் தலையங்கம் ''அமெரிக்காவில் 100-க்கு 90 பத்திரிகைகள் செய்த தவறை நாமும் செய்ததாக ஒப்புக்கொள்கிறோம்; அதற்காக மன்னிப்புக் கோருகிறோம்'' என்று ஆரம்பமாகிறது.

பத்திரிகைகள் தங்களுடைய மதிப்பையும் மரியாதையையும் எப்படிக் குறைத்துக் கொள்ளலாம் என்பதற்கு அமெரிக்கப் பத்திரிகைகள் ஜனாதிபதி தேர்தலில் அடைந்த அநுபவம் நல்ல உதாரணம் ஆயிற்று.

* * *

அமெரிக்காவில் உள்ளதைக் காட்டிலும் இந்தியாவிலே பத்திரிகைகளுக்கு அதிக மதிப்பு இருக்கிறது; இன்னமும் இருந்துவருகிறது.

பத்து லட்சம் பிரதி விற்பனையாகும் அமெரிக்கப் பத்திரிகையைக் காட்டிலும் பத்தாயிரம் பிரதி விற்பனையாகும் இந்தியப் பத்திரிகைக்கு அதிகமான செல்வாக்கு உண்டு.

ஆனால் அந்தச் செல்வாக்கு எவ்வளவு காலம் நிலைத்து நிற்கும் என்னும் கேள்வி இப்போது எழுந்திருக்கிறது.

ஆபாசக் குப்பைப் பத்திரிகைகள் ஜனங்களிடையே பரவப் பரவ, எல்லாப் பத்திரிகைகளின் மதிப்பும் செல்வாக்கும் குறையத்தான் செய்யும்.

''பத்திரிகையில் வந்தால் புளுகாகத்தான் இருக்கும்'' என்றும், ''பத்திரிகைக்காரனுக்கு வியவஸ்தை கிடையாது'' என்றும் நாளடைவில் பொது மக்கள் பேசிக்கொள்ள ஏதுவாகும்.

ஆகையினாலேயே, பத்திரிகைச் சுதந்திரம் கோரும் பத்திரிகைக்காரர்கள் ஆபாசக் குப்பைப் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த வழி கண்டுபிடிக்க வேண்டும் என்று ஸ்ரீ தேவதாஸ் கூறுகிறார்.

பத்திரிகைக்காரர்களால் ஒன்றும் செய்ய முடியாவிட்டால் சர்க்காரை நடவடிக்கை எடுக்கும்படி கேட்பதைத் தவிர வேறு வழி என்ன? அப்போது பத்திரிகைச் சுதந்திரம் ஓரளவு பாதிக்கப்பட்டுத்தானே தீரும்?

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இவ்விதம் சர்க்கார் நடவடிக்கை எடுப்பதற்கு அவசியமில்லாமற் போகும்படி பார்த்துக்கொள்ளுமாறு பத்திரிகாசிரியர்களையும் தொழிலாளர் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அகில இந்திய பத்திரிகாசிரியர் தலைவரான ஸ்ரீ தேவதாஸ் காந்தியின் எச்சரிக்கையை மனதிற்கொண்டு, அவருடைய வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கும்படி கோருகிறோம்.

எல்லாரும் ஒத்துழைத்து, ''தமிழ்ப் பத்திரிகை'' என்றாலே ''உயர்தரப் பத்திரிகை'' என்ற பொருள் ஏற்படுமாறு செய்தால், தமிழ் நாட்டுக்கு எவ்வளவு கௌரவமாயிருக்கும்!

அலை ஓசை

கல்கி

பதினான்காம் அத்தியாயம்

இருண்ட மண்டபம்

மறுநாள் மாலை நேரத்தில் சூரியா மீண்டும் வெள்ளி வீதியின் வழியாகப் போய்க் கொண்டிருந்தான். அவன் உள்ளம் பெரிதும் கலக்க மடைந்திருந்தது. முதல் நாள் இரவு உறக்கம் இல்லாமையும் மனதில் அமைதி இல்லாமையும் முகத்தில் நன்றாகத் தெரிந்தன.

அன்று காலை பதினொரு மணிக்குச் சூரியா சீதாவுக்கு டெலிபோன் செய்தான். இரண்டு தடவை டெலிபோனில் வேறு யாரோ பேசிக் கொண்டிருந்தபடியால் கிடைக்கவில்லை. மூன்றாவது தடவை சீதாவின் குரல் கேட்டது. "சூரியா! சற்று முன்னால் நீ என்னைக் கூப்பிட்டுப் பேசினாயா?" என்றாள் சீதா. "இரண்டு தடவை கூப்பிட்டேன்; ஆனால் நீ கிடைக்கவில்லையே?" என்றான் சூரியா.

"அரை மணிக்கு முன்னால் டெலிபோன் மணி அடித்தது. நீயாகத்தான் இருக்கும் என்று எடுத்தேன். ஆனாலும் முன் ஜாக்கிரதையாக 'யார்?' என்று கேட்டேன். 'நான்தான் சூரியா! எப்போது சந்திக்கலாம்?' என்று ஒரு குரல் கேட்டது. அது உன் குரல் இல்லையென்று சந்தேகித்து டெலிபோனை வைத்துவிட்டேன். இதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்றாள் சீதா. "ஆச்சரியமாக இருக்கிறதே! அப்படி யார் கேட்டிருப்பார்கள்? எதற்காக? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே? ஒருவேளை உன் அகத்துக்காரர்தானோ என்னமோ?" என்றான் சூரியா. "இல்லை; என் அகத்துக்காரர் குரல் இல்லை. இருந்தால் எனக்கு உடனே தெரிந்திருக்கும். அதுபோனால் போகட்டும். நான் இன்றைக்கு உன்னை அவசியம் சந்திக்க வேண்டும். எங்கே எப்போது சந்திக்கலாம்?" என்று சீதா பரபரப்புடன் கேட்டாள்.

"எங்கே சந்திக்கிறது? சந்தித்தால் உன் வீட்டில்தான் சந்திக்கவேண்டும். இரண்டு நாள் கழித்து வருகிறேனே, சீதா!" என்றான் சூரியா.

"முடியாது! முடியாது! இன்றைக்கு என்னைப் பார்க்காவிட்டால் அப்புறம் என்னை உயிரோடு பார்க்கமாட்டாய். இங்கே நீ வரவேண்டியதும் இல்லை. வந்தால் பெரிய ஆபத்தாக முடியும். நான் பழைய டில்லிக்கு வந்து உன்னைப் பார்க்கிறேன். எங்கே பார்க்கலாம்?"

"இது என்ன யோசனை, சீதா! நீ தனியாகப் புறப்பட்டு வருவாயா? அவருக்குத் தெரியாமல் இருக்குமா? அப்படித் தெரிந்தால் ஏற்கெனவே வீண் சந்தேகப் படுகிறவர்..."

"யார் என்ன சந்தேகப் பட்டாலும் சரிதான். இன்று சாயங்காலம் உன்னை நான் பார்த்தேயாக வேண்டும். இவருக்கு இன்றைக்கும் பார்ட்டி இருக்கிறது. நேரங் கழித்துத்தான் வருவார். அதற்குள் உன்னைப் பார்த்து விட்டுத் திரும்பி விடுவேன்."

"அப்படியானால் நானே அவ்விடம் வந்து விடுகிறேனே."

"கூடவே கூடாது. இந்த வீட்டுப் பக்கமே நீ இனிமேல் வரக்கூடாது. சாயங்காலம் ஆறு மணிக்கு நான் பழைய டில்லி வந்து சேருகிறேன். எனக்குப் பயம் ஒன்றுமில்லை. உன்னை எங்கே பார்க்கிறது?"

சூரியாவுக்கு டவுன் ஹாலுக்குப் பின்னால் உள்ள மைதானந்தான் உடனே நினைவுக்கு வந்தது. அங்கே வரும்படியாகச் சொன்னான். சீதாவும் சரியென்று சொல்லி டெலிபோனைக் கீழே வைத்து விட்டாள்.

அது முதல் சூரியாவின் உள்ளம் "சீதாவிடம் ஏன் அப்படிச் சொன்

னும்,—பிடிவாதமாக வரக்கூடாது என்று சொல்லாமற் போனேமே,— இதனால் சீதாவுக்கு மேலும் என்ன கஷ்டம் நேருமோ என்னமோ?" என்று கவலைப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் நேற்று ஏற்பாடு செய்திருந்தபடி தாரிணியையும் புரட்சி இயக்க நண்பர்களையும் பார்த்தாக வேண்டும். அதற்காகத்தான் இப்போது சூரியா வெள்ளி வீதியில் போய்க்கொண்டிருந்தான். தாரிணியைப் பற்றி எண்ணியதும் முதல் நாள் மூன்றுபேர் தாரிணியைப் பிடித்துக் கொடுத்தால் லட்சம் ரூபாய் தருவதாகக் கூறியது நினைவு வந்தது. இந்த ஞாபகம் சூரியாவின் மனக் குழப்பத்தை மேலும் அதிகமாக்கியது.

'இரத்த வாசல்' என்று பெயர் பெற்ற பயங்கர சரித்திர சம்பவங்கள் நடந்த இடத்தைத் தாண்டிச் சென்றதும், ஆஜானுபாகுவான முஸ்லிம் லீக் தொண்டர் ஒருவர்—பச்சைச் சட்டைக்காரர் — சூரியாவின் பேரில் மோதிக்கொண்டு, "மாப் கிஜியே! குவாஜெ ஆஜம் ஜிந்தாபாத்!" என்றார். அந்த ஆசாமி வேண்டுமென்றே தன் பேரில் மோதிக்கொண்டு விஷமத்துக்காக மன்னிப்புக் கோருகிறார் என்று எண்ணிய சூரியா கோபத்துடன் நிமிர்ந்து பார்த்தான். ஆசாமியின் கண் சிமிட்டலைக் கண்டதும் நேற்றுப் போலீஸ் உடையில் காட்சி தந்தவரே தான் என்று அறிந்து, "இதென்ன இன்றைக்கு இந்த வேஷம்?" என்றான் சூரியா. "தினம் ஒரே வேஷம் போட்டால் பிழைப்பது எப்படி? உன்னைக் கூட ஜாக்கிரதை செய்யும்படி தலைவர் சொன்னார். நீ நேற்று மாதிரியே இன்றும் இருக்கிறாயே?" என்றார் முஸ்லிம் லீக் தொண்டர்.

"அதனால் என்ன? இங்கே என்னை யாருக்கும் அடையாளம் தெரியாது."

"அப்படிச் சொல்லுவதற்கில்லை. உன்னைப் பற்றி சி. ஐ. டி. விசாரணை பலமாயிருக்கிறதாகத் தலைவருக்குத் தகவல் வந்திருக்கிறது."

"தலைவர் ஜாகையில் இருக்கிறாரா?"

"இருக்கிறார். நீ எனக்கு ஐம்பது அடிக்குப் பின்னால் தொடர்ந்து வா! ரொம்ப நெருங்கியும் வராதே. ரொம்ப தூரமாகவும் போய்விடாதே!" என்று சொல்லிவிட்டு அந்த ஆசாமி விடுவிடு என்று மேலே நடந்தார்.

அவர் கூறியபடியே சூரியா பின் தொடர்ந்தான். ஜும்மா மசூதியின் வலது பக்கத்து வீதியிலிருந்து குறுக்கே பிரிந்து சென்ற ஒரு குறுகிய வீதியில் முஸ்லிம் தொண்டர் பிரவேசித்தார். அந்த வீதியிலிருந்து மறுபடியும் பிரிந்து சென்ற சந்துகளின் வழியாக மடக்கி மடக்கித் திரும்பி நடந்தார். கடைசியில், சூரிய வெளிச்சம் என்பதையே அநேகமாகக் கண்டிராத ஒரு குறுகிய தெருவில், முஸ்லிம் லீக் கொடி பறந்த ஒரு வீட்டின் வாசலில் நின்றார். சூரியா வந்து சேர்ந்ததும் இருவரும் வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். முன்முகப்பு அறையில் முஸ்லிம் மௌல்விபோல் காணப்பட்ட ஒருவர் குர் ஆன் ஷெரிப்பைப்போல் தோன்றிய அரபு எழுத்துப் புத்தகம் ஒன்றைத் தடவித் தடவிப் படித்துக் கொண்டிருந்தார். வந்தவர்களை ஒரு தடவை நிமிர்ந்து பார்த்துவிட்டு மௌல்வி சாகிப் மறுபடியும் புத்தகம் படிப்பதில் ஆழ்ந்தார்.

"இந்த மௌல்வி யார்? எங்கேயோ பார்த்திருக்கிறோமே?" என்று சூரியா எண்ணமிடுவதற்குள்ளே முஸ்லிம் தொண்டர் அவனுடைய கையைப் பிடித்து, ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக வைத்திருந்த பழைய புத்தக அலமாரிக்குப் பின்புறம் அழைத்துச் சென்றார். அலமாரிக்கும் சுவருக்கும் மத்தியில் ஒருவர் சிரமப்பட்டு நுழைய இடைவெளியிருந்தது. அங்கே சுவரில் ஒரு கதவும் இருந்தது. தொண்டர் அந்தக் கதவைத் திறந்து சூரியாவை உள்ளே பிடித்துத் தள்ளிவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டார்.

சூரியா ஒரு நிமிஷம் இருட்டில் தடமாடினான். அடுத்த நிமிஷம் ஒரு மிருதுவான பெண்ணின் கரம் அவனுடைய கையைப் பற்றியது. தாரிணியின் குரல் "என்னுடன் வாருங்கள்!" என்று அவனை அழைத்தது.

தாரிணியின் கையைப் பிடித்துக் கொண்டு இருளில் நடந்து சென்ற போது சூரியாவுக்குப் பழைய காலத்து இராஜமாளிகைக்குள்ளே இரகசிய குகை வழியாகப் பிரவேசிப்பதுபோல் உணர்ச்சி ஏற்பட்டது. சிறிது நேரத்

துக்குள் அவன் மனம் அதிசயமான ஆகாசக் கோட்டைகளையெல்லாம் நிர்மாணித்தது. கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தவுடனே அவ்வளவும் வீண் பிரமை என்று ஏற்பட்டது.

மிக மங்கலான வெளிச்சமுள்ள ஒரு பழைய காலத்து மண்டபத்துக்குள்ளே சூரியா வந்திருந்தான். அந்த மண்டபத்தின் கல் தூண்கள் பழமையைக் குறிப்பிட்டன. மேல் தளம் மிகவும் தாழ்வாக, ஆள் நின்றால் மேலே ஒரு அடிதான் பாக்கியிருக்கும்படி அமைந்திருந்தது. ஆனால் மண்டபம் விஸ்தாரமாக இருந்தது. நாதிர்ஷா, அமத்ஷா முதலிய கொடிய கொள்ளைக்காரர்களுக்கு டில்லி அடிக்கடி இரையாகி வந்த காலங்களில், வெள்ளி வீதியின் செல்வம் மிகுந்த வியாபாரிகள் சிலர் இந்த மண்டபத்தில் தங்களுடைய விலைஉயர்ந்த பொக்கிஷங்களைப் பத்திரப்படுத்தி வந்தார்கள். அந்த இருண்ட மண்டபம் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து, அதற்கு வழி தெரிந்துகொண்டு உள்ளே பிரவேசிப்பது மிகவும் பிரயாசையான காரியமாதலால், அதில் ஒளித்து வைக்கப்பட்ட பொக்கிஷங்கள் பத்திரமாகக் காப்பாற்றப்பட்டன.

அந்தப் பழைய இரகசிய மண்டபம் இப்போது புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டவர்களின் முக்கிய தலைமை ஸ்தலங்களில் ஒன்றாக விளங்கியது.

மண்டபத்தில் அச்சமயம் சுமார் இருபது பேர் இருந்தார்கள். சிலர் தனியே படுத்துப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் கும்பல் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். சிலர் சுருட்டுப் பிடித்தார்கள். சிலர் படுத்துத் தூங்கினார்கள். அவர்களுடைய உடைகள் விதவிதமாக இருந்தன. சுவரில் ஒரு ஆணியில் போலீஸ் தலைப்பாகையும் உடைகளும் தொங்குவதைச் சூரியா கவனித்தான். நேற்றுத் தன்னைத் தாரிணி இருக்குமிடம் அழைத்துச் சென்ற ஆசாமி அணிந்திருந்த உடைதான் அது என்பதையும் தெரிந்து கொண்டான்.

தனியே உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்த ஒருவரைத் தாரிணி சுட்டிக் காட்டி, "அதோ தலைவர்!" என்றாள். சூரியா அவரிடம் சென்று "இன்குலாப் ஜிந்தாபாத்!" (புரட்சி வாழ்க!) என்று கோஷித்தான். அறிவுக்களை ததும்பிய முகாரவிந்தத்தையுடைய அம்மனிதர் "இன்குலாப் எங்கே? இன்குலாப் ஏற்பட்ட பிறகு அல்லவா அது ஜிந்தாபாத் ஆக வேண்டும்?" என்றார்.

புது ஆசாமி வந்திருப்பதைக் கண்டதும் எல்லாரும் வந்து கும்பலாகத் தலைவரைச் சுற்றி உட்கார்ந்தார்கள்.

"எங்கெங்கே போயிருந்தீர்? போன இடங்களில் எல்லாம் நாட்டின் நிலைமை எப்படியிருக்கிறது?" என்று சூரியாவைத் தலைவர் கேட்டார்.

"மத்திய மாகாணத்துக்கும் ஆந்திர தேசத்துக்கும், மதராசுக்கும் போயிருந்தேன். கிட்டத்தட்ட மதுரை வரையில் போனேன். நான் சென்ற இடங்களில் எல்லாம் ஜனங்களின் உள்ளம் எரிமலை போலக் குமுறிக் கொண்டிருக்கிறது. எந்த நிமிஷமும் எரிமலை வெடித்து நெருப்பைக் கக்கத் தொடங்கலாம். அந்த அக்கினிப் பிரவாகத்தில் பிரிட்டிஷ் ஆட்சி எரிந்து பொசுங்கிச் சாம்பராகப் போகிறது."

"உபமான உபமேயமெல்லாம் நன்றாயிருக்கின்றன. ஆனால் உம்முடைய நம்பிக்கைக்கு ஆதாரமென்ன? எதைக் கொண்டு சொல்லுகிறீர்?"

"சென்னையில் பென்ஷன் வாங்கும் மாஜி ஸப் ஜட்ஜ் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் ஹிட்லர் ஜயித்து இந்தியாவுக்குள் பிரவேசிக்கப்போகும் தினத்தை நிர்ணயிக்க ஜோசிய சாஸ்திரத்தை ஆராய்ந்து கொண்டிருக்கிறார். தேவபட்டணத்தில் திவான் பகதூர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் நெடுங்காலம் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்திருந்தவர். 'ஜப்பான்காரன் வந்தால்தான் இந்தியாவுக்குக் கதி மோட்சம்' என்கிறார். எங்கெங்கே போனாலும் சாதாரண ஜனங்கள் 'இங்கிலீஷ்காரன் யுத்தத்தில் கட்டாயம் தோற்பான், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்துபோகும்' என்று ஆசையுடன் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்."

"ஆசையும் நம்பிக்கையும் இருந்து என்ன பிரயோஜனம்? பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்கும் சுயராஜ்யம் அமைப்பதற்கும் ஜனங்கள் எந்த விதத்தில் உதவி செய்யத் தயாரா



யிருக்கிறார்கள்? சென்ற வருஷத்தைப் போல இந்த ஆகஸ்டு 9-ந் தேதி தேசமெங்கும் புரட்சி இயக்கம் சுடர்விட்டு ஓங்கும் என்று எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்க வில்லையே!"

"அந்த விஷயந்தான் ஏமாற்றமாயிருக்கிறது. ஜெர்மனியோ ஜப்பானோ படையெடுத்து வந்து இந்தியாவுக்கு விடுதலை கிட்டும் என்று பெரும்பாலோர் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர் சுபாஷ் பாபு மலாய் நாட்டிலிருந்து சைன்யம் திரட்டிக் கொண்டு பர்மா வழியாக வரப் போகிறார் என்று எதிர் பார்க்கிறார்கள். சுதந்திரத்துக்காக நாம் ஏதேனும் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் பெரும்பாலோர் மனதில் படவில்லை. பெயரும் செல்வாக்கும் இல்லாத தொண்டர்கள் சிலர் அங்கங்கே புரட்சிக் கொடியை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மேல் போலீஸார் பிரயோகிக்கும் பயங்கர முறைகள் பொது ஜனங்களைப் பீதியில் ஆழ்த்துகின்றன. போலீஸ் பயங்கரத்துக்கு ஓர் உதாரணத்தை நானே பார்த்தேன்......"

தேவபட்டணத்தில் வக்கீல் ஆத்மநாதய்யர் வீட்டில் ஆண்டு நிறைவுக் கலியாணத்தின் போது நடந்த போலீஸ் அட்டூழியத்தைப் பற்றிச் சூரியா விவரித்துக் கூறினான்.

எல்லாவற்றையும் கேட்டு விட்டுப் புரட்சித் தலைவர் சொன்னார்:—"இது ஒரு பிரமாதமா? மற்ற நாடுகளில் சுதந்திரப் போர் நடத்தியவர்கள் இதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு பயங்கரங்களை அநுபவித்திருக்கிறார்கள். நீண்ட அன்னிய ஆட்சியின் பயனாக நம் ஜனங்கள் அடியோடு தீரத்தை இழந்து கோழைகளாகிவிட்டார்கள். ஆனாலும் அங்கங்கே ஒரு சிலராவது பிடிவாதமாயிருக்கும் வரையில் நம்பிக்கை உண்டு. மக்களின் மனதிலுள்ள மனக் கசப்பு



திடீரென்று ஒரு சமயம் பொங்கி எழாமற் போகாது. குமுறிக் கொண்டிருக்கும் எரிமலை வெடிக்கும் என்று நீர் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். அதுவரையில் புரட்சித் தீ அணையாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்."

"நான் சென்ற இடமெல்லாம் இயக்கத்தை நடத்துகிறவர்கள் பணம் வேண்டும் என்று கேட்டார்கள்......"

"அனுப்பிய பணம் எல்லாம் எங்கே போயிற்று என்று தெரியவில்லை. நடுவில் நமக்கு தபாலாபீஸ் வேலை செய்கிறவர்கள் சாப்பிட்டு விடுகிறார்கள் போலிருக்கிறது. போகவேண்டிய இடத்துக்குப் பணம் போய்ச் சேருவதில்லை. மேலும் மேலும் பணத்துக்கு எங்கே போகிறது? பழைய காலத்துப் புரட்சிக்காரர்களைப்போல் கொள்ளையடித்தால்தான் உண்டு. காந்தி மகாத்மாவின் தலைமை இருக்கும்போது அத்தகைய கேவலமான வழிகளை நாம் எப்படிக் கடைப்பிடிக்க முடியும்?"

"அந்த மாதிரி காரியங்கள் இப்போது சாத்தியமும் இல்லை. போலீஸ் பந்தோபஸ்து வெகு கடுமையாயிருக்கிறது. இது யுத்தகாலம் அல்லவா?" என்றார் ஒரு புரட்சித் தொண்டர்.

"சூரியா! உன்னுடைய வருகையைப் பற்றி இந்த ஊர்ப் போலீஸுக்குத் தகவல் தெரிந்து விசாரித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நீ இன்றைக்கே இந்த ஊரை விட்டுப் போய்விடுவது நல்லது. கல்கத்தாவுக்குப் போகிறாயா? அங்கே முக்கிய காரியம் இருக்கிறது!" என்றார் தலைவர்.

"போகிறேன்!" என்றான் சூரியா.

ஒருவேளை சீதா பிடிவாதம் பிடித்தால் அவளையும் கல்கத்தாவில் கொண்டுபோய் விடுவதற்குச் சௌகரியமாயிருக்கும் என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டான்.

கல்கத்தாவில் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றித் தலைவர் அவனுக்கு விவரமாகக் கூறினார்.

பதினைந்தாம் அத்தியாயம்

"இன்னொருவர் இரகசியம்"

மௌல்வி சாகிப் உட்கார்ந்து குர்ஆன் படித்துக் கொண்டிருந்த அறையின் ஒரு மூலையில் மரத்தினாலான குறுகிய மச்சுப்படிகள் அமைந்திருந்தன. சூரியாவும் தாரிணியும் இருண்ட மண்டபத்திலிருந்து அந்த அறைக்குள் வந்து மச்சுப்படி ஏறி மேலே சென்றார்கள். மாடி அறையில் கிடந்த இரண்டு பழைய பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்தார்கள்.

"கல்கத்தாவுக்கு எப்போது கிளம்புவதாக உத்தேசம்?" என்று தாரிணி கேட்டாள்.

"இன்றைக்கே புறப்பட்டாலும் புறப்படலாம். போவதற்கு முன்னால் சீதாவின் விஷயத்தைப் பற்றி முடிவு செய்யவேண்டும். உங்களுடைய புரோகிராம் என்ன? டில்லி நகரிலேயே இருக்கப் போகிறீர்களா?" என்று சூரியா வினவினான்.

"இல்லை; நான் பம்பாய் போகப் போகிறேன். பம்பாய் மாகாணத்தில் ஸதாரா ஜில்லாவில் ஆங்கில ஆட்சியின் அடிச்சுவடுகூட இல்லாமல் துடைத்து விட்டார்களாம். ஜனங்களின் குடியரசு சர்க்கார் நடைபெறுகிறதாம். இங்கிலீஷ் சர்க்காருக்கு ஒரு பைசாகூட வரி வசூல் ஆவதில்லையாம். அந்த அதிசயத்தை நேரில் போய்ப் பார்த்துவிட்டு வரும்படி எனக்கு உத்திரவு பிறந்திருக்கிறது. ஸதாரா ஜில்லாவில் நடப்பதுபோல் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு ஜில்லாவிலே நடந்தால் போதும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு மங்களம் பாடிவிடலாம்."

"ஸதாராவுக்கு நீங்கள் தனியாகவா போகப் போகிறீர்கள்?"

"தனியாகப் போனால் என்ன? யார் என்னை என்ன செய்துவிடுவார்கள்?"

"அப்படியா நினைக்கிறீர்கள்? ஒரு சமாசாரத்தைக் கேளுங்கள். நேற்று மைதானத்தில் நாம் பேசி முடித்த பிறகு நீங்கள் முதலிலே போய்விட்டீர்கள் அல்லவா? நீங்கள் போய்ச் சிறிது நேரத்துக்கெல்லாம் மூன்று ஆசாமிகள் என்னிடம் வந்தார்கள். உங்களைப் பிடித்துக் கொடுத்தால் ஒரு லட்சம் ரூபாய் தருவதாகச் சொன்னார்கள்! முதலில் என் காதுகளை நான் நம்பவில்லை. அப்புறம் அவர்கள் உண்மையாகவே அப்படிச் சொல்வதாகத் தெரிந்து கொண்டேன்."

"இது என்ன விந்தை? எனக்காக ஒரு லட்சம் ரூபாய் தருவதாகவா சொன்னார்கள்? அப்படிப்பட்ட பைத்தியக்காரர்கள் யார்? போலீஸ்காரர்களாயிருக்கமுடியாது. புரட்சி இயக்கத்தின் மாபெருந் தலைவருக்கே ஐயாயிரம் ரூபாய்க்குமேல் அவர்கள் பரிசு தரமாட்டார்களே? ஒரு வேளை உங்களைக் 'கோட்டா' செய்வதற்காக அவ்விதம் சொல்லியிருப்பார்களோ?"

"அதெல்லாம் இல்லை. அவர்கள் உண்மையாகவே அவ்விதம் சொன்னார்கள் என்பது நிச்சயம். பிற்பாடு கூட என்னைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு சுதேச சமஸ்தானத்து அரண்மனை ஆட்கள் என்று நினைக்கிறேன். யாரோ ஒரு ராஜாவோ, நவாப்போ அவர்களுடைய எஜமானராயிருக்கவேண்டும்."

தாரிணி கலகலவென்று சிரித்துவிட்டு, "நல்ல வேடிக்கை! சூரியா! ஒரு யோசனை! சற்று முன்னால் புரட்சி இயக்கத்தை நடத்துவதற்குப் போதிய பணம் இல்லையென்று நீங்களும் சொன்னீர்கள்; தலைவரும் ஒப்புக் கொண்டார். பணம் தேடுவதற்கு இப்போது ஒரு வழி கிடைத்திருக்கிறதே! அடுத்த அடியில் ஒரு லட்சம் ரூபாய் சம்பாதித்து விடலாமே. நீங்கள் இன்று கல்கத்தா போவதை ஒத்திப் போட்டுவிட்டு எப்படியாவது அந்தப் பைத்தியக்காரர்களைத் தேடிக் கண்டு பிடியுங்கள். என்னை அவர்களிடம் ஒப்புவித்து விட்டு ஒரு லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டுவிடுங்கள்" என்றாள்.

"இந்த வழியில் பணம் சேகரித்துப் புரட்சி நடத்திச் சுதந்திரம் பெறுவதைக் காட்டிலும் இந்தியா அடிமை நாடாகவே இருந்து விட்டுப் போகட்டும்!" என்றான் சூரியா.

"எதனாலே அவ்வாறு சொல்லுகிறீர்கள்? கிடைக்கிற பணத்தை வேண்டாம் என்று சொல்லுவானேன்? அப்படியே அவர்கள் பணத்தைக் கொடுத்துவிட்டு என்னைப் பிடித்துக் கொண்டு போனால் என்ன செய்து

விடுவார்கள்? நான் என்ன சிறு குழந்தையா? அல்லது என்னைக் கடித்துத் தின்று விடுவார்களா?"

"அப்படிக் கூடச் செய்வார்கள் தான்! ஏன் செய்யமாட்டார்கள்? தாரிணி! இந்த உலகத்தில் மனுஷர்கள் என்ற ரூபத்தில் எத்தனை ராட்சஸர்கள் உலாவுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. எனக்கும் நேற்று இராத்திரிதான் அது துல்லியமாகத் தெரிய வந்தது. சீதா அந்த ராட்சஸ ராகவனிடம் அகப்பட்டுக் கொண்டு பட்ட பாட்டைப் பார்த்தபிறகுதான் தெரிந்தது!"

"அது என்ன விஷயம்? முன்னாலேயே நான் கேட்காமல் போனேனே? நேற்று இரவு சீதாவின் வீட்டுக்குப் போயிருந்தீர்களா? சீதா என்ன சொன்னாள்? ராகவனைப் பற்றி ரொம்பப் புகார் சொல்லியிருக்க வேண்டும் என்று தெரிகிறது" என்றாள் தாரிணி.

"சீதா சொல்லி நான் தெரிந்து கொள்ளவில்லை. சீதா முதலில் சொன்னதையெல்லாம் நான் நம்பக் கூடவில்லை. மூளை பிசகிப் போய் உளறுகிறாள் என்றே நினைத்தேன். நேரில் என் கண்ணால் பார்த்த பிறகுதான் சீதா சொன்னது பத்தில் ஒன்று கூட இல்லை என்று தெரிந்தது."

பிறகு சூரியா சீதாவின் வீட்டுக்குத் தான் போனதிலிருந்து நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னான்.

கதையைக் கேட்டுக் கொண்டு வந்த தாரிணியின் முகத்தில் கவலையும் துயரமும் குடி கொண்டன.

"இதையெல்லாம் நீங்கள் நேரில் பார்த்ததாகச் சொல்லியிரா விட்டால் நான் நம்பவே மாட்டேன். ராகவன் இவ்வளவு மூர்க்கமான மனிதர் என்று நான் நினைக்கவே இல்லை."

"யார் தான் நினைத்தார்கள்? இப்படியெல்லாம் ஆகும் என்று தெரிந்திருந்தால், அவர்களுடைய கலியாணத்தை நான் நடத்தி வைத்திருப்பேனா? சீதாவின் தகப்பனாரிடமிருந்து வந்த தந்தியை மறைத்து வைத்துக் கலியாணம் தடைப்படாமல் செய்திருப்பேனா?" என்றான் சூர்யா.

"பிறத்தியாருடைய காரியங்களில் தலையிடுவது எவ்வளவு பிசகு என்று இதிலிருந்து தெரிகிறது. பெண்ணின் தகப்பனார் நன்றாக யோசியாமல் தந்தி அடித்திருப்பாரா? அதில் நீங்கள் தலையிட்டிருக்கக் கூடாது."

"இப்போது அதைச் சொல்லி என்ன பயன்? இத்தனை நேரம் சீதா மைதானத்துக்கு வந்திருந்தாலும் வந்திருப்பாள். அவளிடம் நான் என்ன சொல்வது? என்னோடு கல்கத்தாவுக்கு அழைத்துக் கொண்டு போகட்டுமா?"

"சீதாவின் வாழ்க்கையில் நீங்கள் தலையிட்டு ஒருதடவை தவறு செய்தது போதாதா? மறுபடியும் அம்மாதிரி செய்ய வேண்டாம். நீங்கள் அவளைக் கல்கத்தாவுக்கு அழைத்துப் போனால் அத்துடன் அவளுடைய வாழ்க்கை முடிந்துவிடும். சீதாவுக்கு ஏதாவது தைரியம் சொல்லி அவளை அவள் வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு நீங்கள் போங்கள். பாக்கியெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். இன்று இரவே நான் ராகவனைப் பார்த்துப் பேசுகிறேன்" என்றாள் தாரிணி.

"இன்று ராத்திரியே ராகவனை எப்படிப் பார்ப்பீர்கள்? எங்கே பார்ப்பீர்கள்?" என்ற சூரியாவின் கேள்வியில் ஆவலும் கவலையும் தொனித்தன.

"அவர் போகிற பார்ட்டிக்கே நானும் போக எண்ணியிருக்கிறேன்."

"இது என்ன விபரீதம்? உங்கள் பெயரில் டில்லிப் போலீஸாரிடம் ஏற்கனவே புகார் இருப்பதாகக் கேள்விப் படுகிறேன். அப்படியிருக்க, சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் பார்ட்டிக்கு எப்படிப் போவீர்கள்?"

"என் பெயரில் தானே புகார் இருக்கிறது? ஆனால் அந்தப் பெயர் என்னுடையது என்று ஒருவருக்கும் தெரியாது. இன்றைக்குப் பார்ட்டி கொடுக்கிறவர் வைஸராய் நிர்வாக சபை மெம்பர். அவருடைய மனைவி எனக்கு ரொம்ப சிநேகிதம். இன்றைக்குப் பார்ட்டிக்குப் போய்விட்டு அவர் வீட்டிலேயே இரண்டு நாள் தங்கியிருக்கப் போகிறேன். அவரிடமே கவர்ன்மெண்டு பாஸ் வாங்கிக்கொண்டுதான் பம்பாய்க்குப் பிரயாணமாவேன்."

"உங்களுடைய சாமர்த்தியத்தை நினைத்தாலே எனக்கு மூர்ச்சை போட்டு விடும்போலிருக்கிறது. நானும் தான் சிற்சில வேஷங்கள் போட்டுக் கொண்டு ஸி. ஐ. டி. காரர்களிட

மிருந்து தப்பியிருக்கிறேன். ஆனால் நீங்கள் செய்யும் காரியங்கள் ஒரே பிரமிப்பா யிருக்கின்றன."

"நாம் ஒருவரை யொருவர் பாராட்டிக் கொள்வதை அப்புறம் வைத்துக் கொள்ளலாம். இப்போது உடனே சென்று சீதாவைக் கவனியுங்கள். சீதாவின் தேக நிலைமையையும் மனோ நிலையையும் உத்தேசிக்கையில் அவள் தனியாக மைதானத்துக்கு வருவது பற்றி எனக்குப் பயமா யிருக்கிறது. இப்போது டில்லி நகரில் எங்கே பார்த்தாலும் அன்னிய சோல்ஜர்களும் சுதேசி சிப்பாய்களும் அலைந்த வண்ணம் இருக்கிறார்கள்."

"சோல்ஜர்களும் சிப்பாய்களும் மட்டுந்தானா? சுதேச சமஸ்தானக் கழுகுகளும் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. தாரிணி! நீங்களும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்."

"என்னை நான் பார்த்துக் கொள்வேன்; கவலை வேண்டாம். சீதாவைப் பற்றித்தான் கவலையா யிருக்கிறது. தயவுசெய்து நீங்கள் உடனே போங்கள். சீதாவைச் சந்தித்து எப்படியாவது சமாதானப்படுத்தி இன்று ராத்திரி அவள் வீட்டில் கொண்டு சேருங்கள். ராகவனுடைய குணத்தில் இன்றைய தினமிருந்தே மாறுதல் இருக்கும். அதற்கு நான் ஜவாப்தாரி."

"அந்த மூர்க்கன் ராகவனை நீங்கள் பார்த்துப் பேசுவது என்பது எனக்குப் பிடிக்கவே யில்லை. அவன் வெறும் தூர்த்தன்!" என்றான் சூரியா.

"எனக்கு மட்டும் ராகவனைப் பார்த்துப் பேசப் பிடிக்கிறதா? கிடையாது. ஆனால் சீதாவின் நன்மைக்காக அவ்விதம் செய்யப் போகிறேன்."

"தாரிணி! ஒரே ஒரு கேள்விக்குப் பதில் சொல்வீர்களா? சீதாவின் விஷயத்தில் நீங்கள் இவ்வளவு சிரத்தை கொண்டிருப்பதின் காரணம் என்ன?"

"ஸ்ரீயுத சூரியாவின் அத்தங்காள் என்னும் காரணம் போதாதா?"

"போதாது. என்னுடைய அத்தங்காள் என்பதற்காக அப்படிப் பணிவிடை செய்து அவளுடைய உயிரைக் காப்பாற்றத் தோன்றியிராது. அவளுடைய வசைமொழிகளை யெல்லாம் பொருட் படுத்தாமல் அவளுடைய க்ஷேமத்தைக் கருதவும் தோன்றாது. வேறு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும்" என்றான் சூரியா.

"உங்களுடைய ஊகம் உண்மைதான்! அதற்கு வேறொரு முக்கிய காரணம் இருக்கிறது. உங்களுக்குச் சீதாவிடம் இருக்கும் அக்கறையைக் காட்டிலும் எனக்கு அதிகம் இருக்கக் காரணம் உண்டு. ஆனால் தயவு செய்து அந்தக் காரணம் என்னவென்று கேட்கவேண்டாம். அது இன்னொருவருடைய இரகசியம்; அவருடைய சம்மதம் இல்லாமல் நான் அதைச் சொல்லக் கூடாது" என்றாள் தாரிணி.

"போனால் போகட்டும். சீதாவிடம் உங்களுக்கு அவ்வளவு அக்கறை இருப்பதால் பம்பாய்க்குப் போகும் போது சீதாவின் தகப்பனாரைப் பற்றி ஏதாவது தகவல் உண்டா என்று விசாரியுங்கள். அவருடைய பழைய விலாசம் தருகிறேன். சீதாவின் நிலைமையை அவரிடம் தெரிவித்துவிட்டால் நம்முடைய பொறுப்புக் குறையும்."

"சூரியா! ஆச்சரியப் படாதீர்கள்! சீதாவின் தகப்பனார் இருக்குமிடம் எனக்குத் தெரியும். ஆனால் அவரால் தற்சமயம் சீதாவுக்கு உதவி செய்ய முடியாது. அவருடைய தற்போதைய நிலைமையைச் சீதா அறிந்தால் சந்தோஷப்படவும் மாட்டாள்."

சீதாவின் தகப்பனார் ஏதோ பெரிய கிரிமினல் குற்றம் செய்து நீண்டகால தண்டனை யடைந்து சிறையில் இருக்க வேண்டும் என்று சூரியா நினைத்துக் கொண்டிருந்தான். தாரிணியின் வார்த்தை அதை உறுதிப் படுத்துவதாக நினைத்தான். ஆனால் சட்டென்று அவனுடைய மனக்கண்ணின் முன்னால் ஒரு முகம் வந்து நின்றது. தாடி வளர்த்துக் கொண்டிருந்த முஸ்லிம் மௌல்வியின் முகம் அது.

"தாரிணி! கீழே ஒரு மௌல்வி சாகிப் உட்கார்ந்து குர் ஆன் வாசித்துக் கொண்டிருக்கிறாரே? அவர் யார்? சொல்லமுடியுமா?" என்று கேட்டான்.

அதற்குத் தாரிணி "சொல்ல முடியும், சூரியா! அந்த மௌல்வி சாகிபுதான் என்னுடைய தகப்பனார்!...... தாங்கள் மூர்ச்சை யடைந்து விழுவதற்குத் தண்டு மெத்தை கொண்டு வந்து தரட்டுமா?" என்றாள்.

சுதந்திரம் பெற்ற பயன்

நம் முன்னோர்கள் செய்த புண்ணியத்தினால், காந்தி மகாத்மாவின் மாபெரும் தவத்தினால், தேசத் தலைவர்கள்-தொண்டர்களின் தியாகத்தினால், இந்தியா தேசம் சுதந்திரம் பெற்று விட்டது.

சுதந்திர மில்லாத அடிமை வாழ்க்கை மிருகங்களின் வாழ்க்கையாகும். சுதந்திர மில்லாமல் வாழ்கிற மக்களைப் பற்றி மகாகவி பாரதியார்,

"நின்னருள் பெற்றிலாதார்
நிகரிலாச் செல்வரேனும்......
அன்னவர் வாழ்க்கை பாழாம்!"


என்று கூறி யிருக்கிறார். சுதந்திர மில்லாத சுகபோக வாழ்க்கையைக் காட்டிலும் சுதந்திரத்துடன் வாழும் வறுமை வாழ்க்கையே இனியது என்பதில் ஐய மில்லை. ஆகையால் எத்தகைய தியாகம் செய்ய வேண்டி யிருந்தாலும் உற்சாகத்துடன் செய்து தாய்த் திரு நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

சுதந்திரம் காப்பதை எல்லாவற்றிலும் முக்கியமான கடமையாக ஏற்றுக் கொண்ட பிறகு, சுதந்திரம் அடைந்ததினால் தேசமக்கள் பெறக்கூடிய நன்மைகளைக் கவனிக்க வேண்டும்.

நாட்டு மக்களில் எல்லாருமே "உயிரைக் காட்டிலும் சுதந்திரம் பெரிது" என்று கருத மாட்டார்கள். "சுதந்திரம் கிடைத்தது சரிதான்; அதனால் நாம் அடைந்த பயன் என்ன?" என்று கேட்பார்கள். மக்கள் பலரின் மனதில் இந்த எண்ணம் உதித்து விட்டால் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் சிரத்தை குறைந்து விடும். அரும் பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தை இழக்கும்படி நேர்ந்தாலும் நேரிடலாம்.

ஆகையால், சுதந்திரம் பெற்றதினால் பயன் உண்டு என்பதை மக்கள் எல்லாரும் கூடிய சீக்கிரத்தில் உணரும்படி செய்ய வேண்டும்.

தேசத்திலிருந்து வறுமை ஒழிய வேண்டும்; உணவுப் பஞ்சம் தீரவேண்டும்; செல்வம் செழிக்க வேண்டும்; இயந்திர சாதனங்கள் வளர வேண்டும்; அவற்றினால் பெறக்கூடிய பற்பல வசதிகளும் பெருகவேண்டும்.



உணவுப் பஞ்சம் தீரவும், உற்பத்தி அதிகமாகவும், இயந்திர வசதிகள் வளரவும், நாகரிக வாழ்க்கைச் சாதனங்கள் பெருகவும் நேரடியாக உதவும் இலாகா என்ஜினியரிங் இலாக்காவாகும்.

நதிகளில் வெள்ளமாக ஓடிக் கடலில் விழும் தண்ணீரை ஆங்காங்கு அணைக் கட்டுகள் கட்டித் தேக்க வேண்டும்; தேக்கிய தண்ணீர் வயல்களுக்குச் சென்று பாய்வதற்குப் புதிய புதிய கால்வாய்கள் வெட்டவேண்டும்; கால்வாய்களில் ஆங்காங்கு மதகுகள் கட்ட வேண்டும்.

மலைப் பிரதேசங்களில் அணை போட்டுத் தேக்கிய தண்ணீரைக் குழாய்களின் வழியாகக் கீழே கொண்டு வந்து அவற்றின் விசையால் இயந்திரங்களை ஓட்டி மின்சார சக்தியை உற்பத்தி செய்ய வேண்டும். உற்பத்தியாகும் மின்சார சக்தியை நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் கொண்டு போக வேண்டும். வீதிகளிலும் வீடுகளிலும் கோவில்களிலும் குடிசைகளிலும் மின்சார விளக்குப் போட வேண்டும். மின்சார சக்தியைக் கொண்டு கிணற்றுத் தண்ணீரை இறைத்து வயல்களுக்குப் பாய்ச்ச வசதி செய்யவேண்டும். மற்றும் பற்பல சிறு கைத் தொழில்களுக்கும் பெரும் கைத்தொழில்களுக்கும் மின்சார சக்தியை நன்கு பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டும்.

ஐந்து வருஷம் அல்லது பத்து வருஷத்தில் நிறைவேறக் கூடிய திட்டங்களையும் போட்டு நடத்த வேண்டும். ஒரு வருஷம் இரண்டு வருஷத்தில் நடைபெறக் கூடிய திட்டங்களிலும் கவனம் செலுத்தவேண்டும். கோடிக் கணக்கான ரூபாய் செலவாகும் பெரிய திட்டங்களையும் தொடங்க வேண்டும். லட்சக்கணக்கில் செலவு செய்து முடிக்கக் கூடிய சிறிய பல திட்டங்களையும் நடத்த வேண்டும்.

இத்தகைய திட்டங்களில் சிரத்தை கொண்டு, இரவு பகல் தூங்காமல், தேகசுகத்தைக் கருதாமல், குற்றங் குறை சொல்வதற்கு இடம் ஏற்படாமல், இடைவிடாத

ணக்கத்துடனே நடத்திவரும் நபர் ஒருவர் இந்த மாகாணத்தில் இருக்கிறார். அவர்தான் மராமத்து இலாகா மந்திரி கனம் பக்தவத்ஸலம் அவர்கள்.

நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்கும் சாதனங்களை யுடைய என்ஜினியரிங் இலாகாவும், மின்சார இலாகாவும், நீர்ப்பாசன மராமத்து இலாகாவும், கனம் பக்தவத்ஸலத்தின் பொறுப்பில் இருந்து வருகின்றன. அந்தப் பொறுப்பை அவர் திறமையாக வகித்து நடத்தி வருகிறார்.

நூற்று நாற்பது கோடி ரூபாய் செலவாகக் கூடிய கோதாவரி ராமபாத சாகர திட்டத்தைத் தொடங்க இந்திய சர்க்காரைத் தூண்டி வருகிறார்.

கோதாவரியில் பெருகும் தண்ணீர்ப் பிரவாகத்தில் 100க்கு 7 பங்கு தண்ணீர் தான் இப்போது விவசாயத்துக்கு உபயோகப்பட்டு வருகிறது. ராமபாத சாகரத் திட்டம் நிறைவேறினால் அந்த ஜீவநதியின் தண்ணீரிலே பெரும் பகுதி உபயோகமாகும். தென்னிந்தியாவில் உணவுப் பஞ்சம் என்பதே பறந்துவிடும். மேற்படி தேக்கத்தின் மூலம் உற்பத்தியாகும் மின்சார சக்தி அபரிமிதமாயிருக்கும்.

அவ்விதமே கிருஷ்ணா — வடபெண்ணை நதிகளின் கூட்டுத் திட்டத்தைப் பற்றி ஆராய்ந்து வருகிறார். இந்தத் திட்டமானது கிருஷ்ணா—வட பெண்ணை நதிகளின் தண்ணீரை ஒன்று சேர்த்துத் தேக்கி இருபது லட்சம் ஏக்கரா நிலத்தை வளப்படுத்தும். ஏராளமான மின்சார சக்தியும் உற்பத்தியாகும்.

துங்கபத்ராவில் நடந்துவரும் அணைக்கட்டு வேலையைத் துரிதமாக முடிப்பதற்குப் பிரயத்தனம் செய்து வருகிறார்.

மலையாளத்தில் மாலம்புழை ஆற்றின் அணைக்கட்டு வேலையைத் தொடங்க உத்திரவு பிறப்பித்திருக்கிறார்.

நூறு வருஷமாகப் பேச்சளவில் இருந்து வந்த கீழ் பவானி அணைக்கட்டு வேலை 1947-ல் தொடங்கி நடந்து வருகிறது. இதற்குச் செலவு ஏழு கோடி ரூபாய் ஆகும். இதன் மூலம் இரண்டு லட்சம் ஏக்கராவுக்குத் தண்ணீர் பாயும்.

மேற்படி பெரிய திட்டங்களைத் தவிர மாகாணமெங்கும் மத்தியதர நீர்ப்பாசனத் திட்டங்கள் இருபத்து நாலும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் முந்நூறும் வேலை தொடங்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

நீர்ப் பாசனத்துக்கு உதவும்படியான ஏரிகளின் கரைகளையெல்லாம் உயர்த்தத் திட்டம் போட்டு வருகிறார்.

தற்போது உற்பத்தியாகும் மின்சார சக்தியைக் கூடுமான வரையில் கிராமங்களுக்கும் விவசாயத்துக்கும் பயன்படுத்தப் பிரயத்தனம் செய்து வருகிறார். சென்ற 1917—48ல் 146 கிராமங்களுக்குப் புதிதாக மின்சார சக்தி அளிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது மின்சார உற்பத்தி செய்யும் சாதனங்களையெல்லாம் விஸ்தரிப்பதற்குச் செய்திருக்கும் ஏற்பாடுகளினால் அதி சீக்கிரத்தில் 100க்கு 100 மடங்கு மின்சார சக்தியின் உற்பத்தி அதிகமாகும்.

* * *

மேற்கூறியவாறு தேச வளத்தைப் பெருக்கும் திட்டங்களை நடத்துவதற்கு ஏராளமான என்ஜினியர்கள் வேண்டும்.

இந்தியாவிற்குள்ளே தென்னிந்தியா ஆதிகாலத்திலிருந்து என்ஜினியரிங் திறமைக்குப் பெயர்போனது. ஆயிரத்து எண்ணூறு வருஷத்துக்கு முன்னால் காவேரியில் கட்டப்பட்ட கல்லணை இன்றளவும் இருந்து வருகிறது. அதைப் பார்த்து மேனாட்டு நவீன என்ஜினியர்கள் எல்லாரும் பிரமித்துப் போகிறார்கள்.

காவேரி நதியில் வரும் வெள்ளத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூடச் சமுத்திரத்துக்குப் போகாமல் அவ்வளவும் விவசாயத்துக்குப் பயன்படும்படி அற்புதமான நீர்ப்பாசனத் திட்டத்தை நமது முன்னோர்கள் நிறைவேற்றினார்கள்.

சரியான இடம் பார்த்து நீண்ட கரை எடுத்து மழைத் தண்ணீரை ஏரியாகத் தேக்கும் அதிசய முறையும் தென்னாட்டிலே ஏற்பட்டதுதான். என்ஜினியரிங் இலாகாவின் பெரிய உத்தியோகஸ்தர் ஒருவர் சமீபத்தில் செய்த ஒரு பிரசங்கத்தில் "சென்னை மாகாணத்திலுள்ள ஏரிக்கரைகளையெல்லாம் ஒரே வரிசையாக்கிக் கொண்டு போனால் உலகம் முழுவதையும் சுற்றி ஓர் ஒட்டியாணம் போட்டு விடலாம்!" என்று சொல்லியிருக்கிறார்.

இவ்விதம் தென்னாட்டில் நம் முன்னோர்கள் சிறந்த என்ஜினியரிங் திறமை பெற்றிருந்தது போலவே இந்தக் காலத்திலும் சென்னை மாகாணம் என்ஜினியரிங் திறமைக்குப் பெயர் வாங்கியிருக்கிறது.

வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான என்ஜினியர்களைத் தென்னிந்தியாவினால் தந்து உதவ முடியும். அதற்கு வேண்டிய அளவு உயர்தர என்ஜினியரிங் கலாசாலைகள் ஏற்படுத்த வேண்டும்.

என்ஜினியரிங் கலாசாலைகளின் பாடத்திட்டங்களையும் காலவிரயம் ஆகாதபடி மாற்றி அமைக்க வேண்டும்.

யுத்த காலத்தில் அமுலில் இருந்தது போல் நாலு வருஷப் படிப்பை மூன்று வருஷமாய்ச் செய்வதற்குக் கனம் பக்தவத்ஸலம் முயற்சி தொடங்கினார். என்ஜினியரிங் கலாசாலைப் பிரின்ஸிபால்கள "மூன்று வருஷம் போதும்; மாறுதல் செய்யலாம்" என்று சொல்லி விட்டார்கள். சர்க்கார் என்ஜினியரிங் இலாகாவின் தலைமை உத்தியோகஸ்தர்களும் அதற்குச் சம்மதித்துவிட்டார்கள்.

ஆனால் சென்னைச் சர்வகலாசாலையாரும் வைஸ் சான்ஸலர் ஸ்ரீ லக்ஷ்மணசாமி முதலியாரும் இலேசில் சம்மதித்து விடுவார்களா? தங்களாலான முட்டுக்கட்டையைப் போட்டு வைத்திருக்கிறார்கள்!

* * *

இம்மாதம் ஆரம்பத்தில் என்ஜினியரிங் கலாசாலையில் என்ஜினியரிங் கண்காட்சி ஒன்று நடத்தினார்கள். அரை மைல் நீளம் 'க்யூ' வரிசையில் நின்று லட்சக் கணக்கான ஜனங்கள் மேற்படி கண்காட்சியைப் பார்த்தார்கள்.

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடந்துவரும் கண்காட்சியில் என்ஜினியரிங் இலாகா வேலைகளை விளக்கிக் காட்டும் பகுதி ஒன்று இருக்கிறது. இதையும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தினந்தோறும் பார்த்து வருகிறார்கள்.

மேற்சொன்ன கண்காட்சிகளிலிருந்து சமீபகாலத்தில் என்ஜினியரிங் இலாகாவில் எவ்வளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒருவாறு தெரிந்து கொள்ளலாம். இன்னும் அந்த இலாகாவை அபிவிருத்தி செய்து மக்களுக்குப் பயன்படுத்துவதற்கு எவ்வளவு தூரம் இடமிருக்கிறது என்பதையும் அறியலாம்.

* * *

கனம் பக்தவத்ஸலம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபிறகு நீர்ப்பாசன — மின்சார — மராமத்து இலாகாக்கள் மிகத் துரிதமாக அபிவிருத்தி அடைந்திருக்கின்றன.

என்ஜினியரிங் இலாகா உத்தியோகஸ்தர்கள் தாங்கள் நாட்டின் நலத்துக்கு உழைக்கும் தொண்டர்கள் என்று எண்ண ஆரம்பித்திருக்கிறார்கள்.

சர்க்கார் இலாகாக்களிலே பிரசித்தி பெற்ற 'சிவப்பு நாடா' என்ஜினியரிங் இலாகாவைப் பொறுத்த வரையில் தளர்ந்திருக்கிறது. 'ரூல்' என்றால் 'ரூல்' என்று சொல்லிக் கொண்டிராமல், விவசாயிகளின் நன்மையைப் பிரதானமாகக் கருதி அவசியமான போது தண்ணீர் திறந்து விடுதல் வழக்கமாகி வருகிறது.

என்ஜினியரிங் இலாகா உத்தியோகஸ்தர்களுக்குள்ளே எந்தக் காரணத்தைக் கொண்டும் பாரபட்சம் காட்டப்படுவதில்லையென்று அறிகிறோம். தகுதியுள்ள உத்தியோகஸ்தர்கள், மேலேயுள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளின் காரணமாக, கீழே தள்ளப்படுவதில்லை. வேலைத் திறமைக்குச் சம்பந்தமில்லாத காரணங்களினால் 'பிரமோஷன்' நிறுத்தப்படுவதில்லை. இத்தகைய நேர்மையான நிர்வாகத்தினால் உத்தியோகஸ்தர்கள் உற்சாகமாக வேலை செய்து வருகிறார்கள்.

மேற்கூறியவை போன்ற சிறந்த சீர்திருத்தங்களுக்காகக் கனம் பக்தவத்ஸலம் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.

அவருடைய நீண்ட காலத் திட்டங்கள், சொற்ப காலத் திட்டங்கள் எல்லாம் வெற்றியுடன் நிறைவேற வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

இன்னும் ஒரு ஐந்து வருஷ காலம் கனம் பக்தவத்ஸலம் என்ஜினியரிங் இலாகாவைக் கவனித்து வரும் பட்சத்தில் தென்னாட்டில் வளம் பெருகிச் செல்வம் செழித்துப் பஞ்சம் ஒழிந்து நீடித்த சுபிட்சம் குடி கொள்ளும்படி செய்து விடுவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.


சங்கீத ஸீஸன்
சென்னையில் சங்கீத விழாக்களில் சங்கீதம் கேட்ட புருஷனும் மனைவியும் ரயிலுக்குக் கிளம்புகிறார்கள்.
ரமணி! சீக்கிரம் வராவிட்டால், நான் கிளம்பிப் போய் விடுவேன்.
"எப்படி மனந் துணிந்ததோ? சாமி!"
எவ்வளவு சீக்கிரம் வந்து விட்டேன் பார்த்தீர்களா?
"ரமணி!
இன்னும் ஸ்டேஷன் வரவில்லையே? இது சரியான வழிதானா?
"சக்கனி ராஜ மார்க்கமு"
"சந்நிதி வரலாமோ?"
சிதம்பரத்துக்கு டிக்கட் இல்லே ஸார்!
"இல்லே யென்பவன் யாரடா?"
"ஏது பராமுகம் ஏழையின் மீது"
"ஸரஸ ஸாம தான பேத தண்ட சதுரா!"
"ஏன் பள்ளி கொண்டீர் ஐயா!"
சிதம்பரம்
"சிதம்பரம் என மனங்கனிந்திட"



ஆடல் பாடல்



"கர்நாடகம்"

ஆங்கில பாஷையில் 'அரிய பல சிறு கதைகளும் நாவல்களும் எழுதி மேனாட்டிலும் புகழ்பெற்ற ஸ்ரீ ஆர். கே. நாராயணன் பெயரை நேயர்கள் பலர் அறிந்திருப்பார்கள். அவரிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது. அந்தக் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:—

"தென்னிந்தியாவில் சங்கீத நிலைமையைப் பற்றிச் சமீபத்தில் "கல்கி"யில் எழுதியிருந்த விஷயங்களைப் படித்து ரஸித்தேன். அவை யெல்லாம் எனக்கும் உடன்பாடுதான். நீங்கள் சொல்லாத இன்னும் சில விஷயங்கள் என் மனதில் உறுத்திக்கொண்டிருக்கின்றன. அவற்றையும் கவனித்தால் நல்லது.

1. சங்கீத சபைக்காரர்கள் பணத்துக்குக் கைகட்டி வாய் புதைத்துச் சேவகம் செய்கிறார்களே. அது ஏன்? முக்கியமாக, சங்கீதக் கலையை வளர்க்க ஏற்பட்ட மியூஸிக் அகாடமி எதற்காகப் பணத்துக்கு இவ்வளவு அடிமையாக வேண்டும்? பணக்காரர்கள் ஐந்நூறு ரூபாய் நன்கொடை கொடுக்கலாம்; ஏழைகள் இரண்டு ரூபாய் டிக்கட் வாங்கிக் கொண்டு வரலாம். ஆனால் ஐந்நூறு ரூபாய் நன்கொடையாளரைக் காட்டிலும் இரண்டு ரூபாய் டிக்கட் வாங்கியவர் நல்ல ரஸிகரா யிருக்கலாம் அல்லவா? ஸ்பெஷல் டோனர், சாதாரண டோனர், ரிஸர்வ்டு வகுப்பாளர்—என்பது போன்ற பல பிரிவுகளை ஏற்படுத்திச் சபையில் உள்ள நாற்காலிகளில் எல்லாம் சீட்டுக்கள் ஒட்டப்பட்டிருக்கும் காட்சியை எனக்குப் பார்க்கச் சகிப்பதில்லை. 'ஸ்பெஷல் டோனர்' என்று சொல்லப்படும் மகானுபாவர்கள் கச்சேரிக்கு வந்து சங்கீதம் கேட்டுத் தொலைக்கிறார்களா? கிடையாது! சாதாரணமாக, முதல் நான்கு வரிசை நாற்காலிகள் மேற்படி விசேஷ நன்கொடையாளருக்காக ஒதுக்கி விடப்படுகின்றன. பெரும்பாலும் அவை காலியாகவே இருக்கின்றன. அந்தக் காலி நாற்காலிகளைப் பார்த்துக் கொண்டு சங்கீத வித்வான் பாடவேண்டும். ஆசையோடு சங்கீதம் கேட்க வருகிறவர்கள் வித்வானுக்கு நூறு அடி தூரத்தில் முகம் தெரியாத இடத்தில் உட்கார்ந்து கொள்ள வேண்டும். இவ்விதம், பணத்துக்காகச் சங்கீதத்தைப் பலிகொடுக்கும் வழக்கத்துக்கு விமோசனம் இல்லையா?

2. சங்கீத சபை மண்டபங்களுக்குள்ளே சுவர்களில் விளம்பரம் ஒட்டும் பயங்கர வழக்கத்துக்கும் முடிவு தேட வேண்டும். அந்த விகாரமான விளம்பரங்களைப் பார்க்கும் போதெல்லாம் அவற்றை நெருப்பில்போட்டுக் கொளுத்தினால் என்ன என்று எனக்குத் தோன்றுகிறது. சங்கீத சபைக் கமிட்டி மெம்பர்களின் நெற்றிகளில் விளம்பரத்தை ஒட்டிக் கொள்வதற்கு நிறையப் பணம் கொடுக்க யாராவது முன் வந்தால் அதற்கும் சம்மதிப்பார்கள் போலிருக்கிறது!

3 நாகரிகமடைந்த நாடுகளில், கலை நிகழ்ச்சிகளுக்காக அச்சிடும் புரோகிராம் புத்தகமே சிறந்த கலை அழகு பொருந்தியிருக்கும். ஆனால் நம்முடைய சங்கீத சபைகளின் புரோகிராம் புத்தகங்களைப் பாருங்கள்! மட்டமான காகிதம்; மட்டமான அச்சு; புத்தகத்துக்குள் அகப்பட்ட இடமெல்லாம் ஆபாச விளம்பரங்கள்! இப்படிப் பணம் சேர்த்து என்னதான் ஆகவேண்டும்? எதற்காகச் சங்கீத சபை நடத்த வேண்டும்?

4. ரேடியோ நிகழ்ச்சிகளைப் பற்றி நீங்கள் சொல்லியிருப்பதெல்லாம் சரிதான். ஆனால் டாக்கி இசைத் தட்டுகளை ஏன் விட்டுவிட்டீர்கள்? ரேடியோ நிலையங்களில் பழைய டாக்கி இசைத் தட்டுகளை ஒலிபரப்புவதை அடியோடு நிறுத்த வேண்டும். இசைத் தட்டுகள் வைப்பதாயிருந்தால், உயர்தர கர்நாடக சங்கீதத் தட்டுகளை வைக்கட்டும். மிக மட்டமான டாக்கி இசைத் தட்டுகளையே பொறுக்கி எடுத்து வைக்கிறார்களே, அது ஏன்?

5. பி. பி. ஸி. யில் மூன்றாவது புரோகிராமில் உயர்தர சங்கீதம், நாடகம், இலக்கிய நிகழ்ச்சி முதலியவை நடத்துகிறார்கள். அம்மாதிரி இங்கேயும் ஏற்

படுத்தினால் நல்லது. இப்போது நடக்கும் உபயோகமற்ற நிகழ்ச்சிகளை நிறுத்தினால் உயர்தர நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய பணமும் அவகாசமும் கிடைக்கும்."

ஸ்ரீ ஆர். கே. நாராயணன் சிறந்த எழுத்தாளர்; புகழ் பெற்ற நூலாசிரியர்; அதோடு அபூர்வமான சங்கீத ரஸிகர். சங்கீதக் கலையை வளர்ப்பதற்காகச் சபை நடத்துகிறோம் என்று சொல்கிறவர்கள் ஸ்ரீ நாராயணன் அவர்களின் யோசனைகளைக் கவனிப்பார்களாக.

முக்கியமாக, 'ஸ்பெஷல் டோனர்' என்றும், 'பேட்ரன்' என்றும் சீட்டு எழுதி ஒட்டிவிட்டு வரிசை வரிசையாக நாற்காலிகளைக் காலி வைத்திருக்கும் வழக்கம் ஒழிய வேண்டும்.

ரேடியோவில் டாக்கி இசைத் தட்டுகளை வைக்கும் வழக்கம்பற்றி ஸ்ரீ ஆர். கே. நாராயணன் சொல்லியிருக்கிறார். இந்த விஷயத்தில் நமக்குக் கொஞ்சம் சந்தேகம் இருந்தது. "டாக்கி இசை நமக்குத்தான் பிடிக்கவில்லை; ஆனால் ரொம்பப் பேருக்குப் பிடிக்கும் போலிருக்கிறது" என்று எண்ணினோம். ஏனெனில், ரேடியோக்காரர்கள் அவர்களாக "இசைத் தட்டு இடைவேளை" என்றும், "இடைவேளை இசைத்தட்டுகள்" என்றும், "திரை சங்கீதம்" என்றும், "டாக்கி இசை" என்றும், டாக்கி இசைத் தட்டுகளை வைப்பதோடல்லாமல், "நேயர் விருப்பம்" "நீங்கள் கேட்பவை" என்ற தலைப்புகளில் டாக்கி இசைத் தட்டுகளை வைக்கிறார்கள். 'ரேடியோ விசிறிகளின் விருப்பம் அப்படியிருக்கும் போலிருக்கிறது,—நாம் சொல்லி என்ன பயன்?' என்று எண்ணியிருந்தோம்.

ஆனால் ரேடியோ சீர்திருத்தம் பற்றி வந்திருக்கும் "கல்கி" நேயர்களின் கடிதங்களில் 100க்கு 90 கடிதங்கள் டாக்கி இசைத் தட்டுகளை ஒழிக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. ரஸிகர் ஆர். கே. நாராயணன் சொல்லுவதும் அதுதான். டாக்கி இசைத் தட்டுகளை ரேடியோவிலிருந்து அடியோடு ஒழிக்க முடியாவிட்டாலும், எந்த டாக்கி இசைத் தட்டையும் ரேடியோவில் மூன்று தடவைக்கு மேலே ஒலிபரப்புவதில்லை என்று வைத்துக் கொள்ளலாம். "இண்டியன் லிஸனர்" "வானொலி"ப் பத்திரிகைகளில் தினந்தோறும் வரிசை வரிசையாக டாக்கி இசைத் தட்டு ஜாபிதா கொடுப்பதையும் நிறுத்தித் தொலைக்கலாம்.

* * *

ரேடியோ சீர்திருத்தம் பற்றி நாம் என்ன எழுதினாலும், யார்என்ன கிளர்ச்சி செய்தாலும், சுலபமாக நடந்துவிடும் என்ற நம்பிக்கை நமக்குக் கிடையாது. ஏனெனில், ரேடியோ நிலையங்கள் ஒரு கவர்ன்மெண்ட் இலாகாவாக நடைபெறுகின்றன. எந்த கவர்ன்மெண்ட் இலாகாவையும் பொது ஜன அபிப்பிராயம் இலேசில் அசைத்துவிட முடியாது!

சென்னை - திருச்சி ரேடியோ நிலையங்களில் உத்தியோகம் பார்க்கும் பலரை நாம் அறிவோம். தனித்தனியாக அவர்கள் நல்ல ரஸிகர்கள்; உயர்ந்த எழுத்தாளர்கள்; சிந்தனா சக்தி உள்ளவர்கள்; மக்களுக்குத் தொண்டு செய்யும் ஆர்வம் கொண்டவர்கள்.

ஆனாலும், ரேடியோ ஒரு சர்க்கார் இலாகாவாக உள்ளபடியால் அவர்கள் எதுவும் செய்ய முடியாது. மற்ற சர்க்கார் இலாகாக்களைப் போல் ரேடியோ இலாகாவும் இயந்திரத்தைப் போல் மாமூல் வழியில் இயங்கிக்கொண்டுதான் வரும்.

அகில இந்திய ரேடியோவை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தவர் மிஸ்டர் லயனல் பீல்டன் என்னும் ஆங்கிலேயர். பிறகு நீடித்த காலம் ரேடியோவை நிர்வகித்துவந்தவர் ஜனாப் பொக்காரி சாஹிப். இந்த பொக்காரி சாஹிப் பாகிஸ்தான் பிரிக்கப்பட்டவுடனே தாமும் சென்று பாகிஸ்தான் ரேடியோவுக்கு நிர்வாகத் தலைமை வகித்துத் துவேஷப் பிரசாரத்தைக் கொட்டிக் கொண்டு வருகிறார்.

அப்படிப்பட்ட பொக்காரி சாஹிப் அமைத்து வளர்த்த அகில இந்திய ரேடியோ ஸ்தாபனம் மாமூலை விட்டுச் சுலபத்தில் அசைந்து கொடுத்து விடுமா?

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு ரேடியோ இலாகா சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் வந்தது. ஆனால் சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு ரேடியோ விஷயமாகக் கவனம் செலுத்த நேரம் ஏது? சர்தார் வல்லபாய் சங்கீதம் என்றால் காதைப் பொத்திக் கொள்ளுகிறவர் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். ஆகையால் சர்தார் பட்டேலின் நிர்வாகத்தில் அகில இந்திய ரேடியோ எவ்வித சீர்திருத்தத்தையும் அடையாததில் வியப்பில்லை.

* * *

சமீபத்திலே தான் ரேடியோ சீர்திருத்தம் அடையக் கூடும் என்னும் நம்பிக்கை கொஞ்சம் ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீ திவாகர் என்பவர் சர்தார் வல்லபாயின் உதவி மந்திரியாகி ரேடியோ

இலாகாவைத் தம்முடைய நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறார்.

பம்பாய் ரேடியோ நிலைய உத்தியோகஸ்தர்களுக்கு ஸ்ரீ திவாகர் கூறிய விஷயம் தினப் பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது. அவர் சொன்னதாவது :—

"ருஷியா தேசத்தில் ரேடியோவை மக்களின் உபயோகத்துக்காகவே முழுக்க முழுக்க நடத்துகிறார்கள். ஏழை இந்தியாவில் நாமும் ரேடியோவை மக்களின் உபயோகத்துக்காகவே நடத்த முயல வேண்டும். வெறும் கேளிக்கை — தமாஷுக்கு ரேடியோவைப் பயன்படுத்தக் கூடாது. கேளிக்கை — தமாஷ் நிகழ்ச்சிகள் ஏற்படுத்தினாலும் அவற்றிலும் பொது மக்களுக்கு ஏதாவது உபயோகமான அம்சம் சேர்க்கப்பட வேண்டும்......"

ஸ்ரீ திவாகர் இவ்விதம் கூறியது குறித்து நாம் அளவற்ற மகிழ்ச்சியடைந்தோம். "ரேடியோ மகாதேவர்" என்ற கட்டுரையில் நாம் முக்கியமாகச் சொல்லியிருப்பதும் இதுவேயாகும்.

உபயோகமான விஷயங்களையே ஒலி பரப்புவது என்று வைத்துக் கொண்டால் தற்போதைய ரேடியோ நிகழ்ச்சிகளில் பாதிக்குமேலே வெட்டி எறிய வேண்டியதுதான். உபயோகமில்லாத அமெச்சூர் சங்கீதக் கச்சேரிகளை நிறுத்த வேண்டியதுதான். டாக்கி இசைத்தட்டு சங்கீதத்தை ஒழித்துவிட வேண்டியதுதான். ஸ்ரீ திவாகர் கூறியிருப்பது கார்யத்தில் எவ்வளவு தூரம் நடக்கப் போகிறது என்று பார்த்து வருவோம்.

• • •

கேளிக்கை - தமாஷ் நிகழ்ச்சிகளாயிருந்தாலும் உபயோகமாயிருக்க வேண்டும் என்று ஸ்ரீ திவாகர் சொன்னார் அல்லவா? அதற்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சி சென்னை ரேடியோ நிலையத்தில் பொங்கல் அன்று நடைபெற்றது. ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன்—மதுரம் கோஷ்டி நடத்திய நிகழ்ச்சியைத்தான் சொல்கிறோம். தெருக்கூத்து தமாஷுக்கும் விகடப் பேச்சுகளுக்குமிடையில் அருமையான மதுவிலக்குப் பிரசாரம் நடந்தது. தமிழ் நாட்டின் பெருமை நன்கு எடுத்துச் சொல்லப்பட்டது. ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் மதுவிலக்கைப்பற்றி ஒரு பாட்டும் அந்த விஷயம் பற்றி ஸ்ரீமதி மதுரம் ஒரு பாட்டும் பாடினார்கள். அந்தப் பாடல்களின் அமைப்பையும் கருத்தையும் பாடிய விதத்தையும் பற்றி 'அற்புதம்' என்றுதான் சொல்ல வேண்டும்.

அப்பா கற்றுக் கொடுக்கிறார்!



சுதந்திர மாவிளக்கு

விஜயமணி

2. இடையூறுகள் தகர்ந்தன: சபை தொடங்கியது

"வானம் இடிந்து விழுந்தாலும் பூமி வெடித்துப் பிளந்தாலும் குறிப்பிட்ட நாளில் அரசியல் நிர்ணய மகா சபை கூடியே தீரும்" என்று சர்தார் பட்டேல் கர்ஜித்தார்.

அவர் அவ்விதம் கூறும் படியாக என்ன சேர்ந்தது என்பதைச் சிறிது ஞாபகப் படுத்திக் கொள்வோம்.

"இந்தியா சுயாட்சிப் பாதையில் வேகமாகச் சென்று வருகிறது"—"இந்தியாவுக்குப் படிப்படியாகப் பொறுப்பாட்சி வழங்குவோம்"—"பிரிட்டிஷ் டொமினியன் நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கப் போகும் காலம் அதிக தூரத்தில் இல்லை" என்பன போன்ற பொருளற்ற பல்லவிகள் பாடி, இந்தியாவின் கோடியான கோரிக்கைக்குப் பிடி கொடாமல் பதில் அளித்து வந்த பிரிட்டிஷ் சர்க்கார் தலைவர்களின் மனம் 1945-ம் வருஷம் மார்ச் மாதம் 15-ந் தேதி திடீரென்று மாறியது!

"இந்தியா எவ்வளவு சீக்கிரத்தில் பூரண சுதந்திரம் பெறுவதற்குச் சாத்தியமோ, அவ்வளவு சீக்கிரத்தில் அது சுதந்திரம் பெறுவதற்கு உதவிபுரிய பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் நோக்கத்துடன் எனது சகபாடிகள் (பிரிட்டிஷ் மந்திரிகள்) இந்தியாவுக்குச் செல்லப் போகிறார்கள். அதற்குத் தக்கவாறு இந்தியாவில் எத்தகைய சர்க்காரை அமைப்பது என்பது இந்தியர்கள் முடிவு செய்து கொள்ள வேண்டிய விஷயமாகும். ஆனால் அவ்விதம் முடிவு செய்வதற்குத் தகுதியான ஒரு ஸ்தாபனத்தை உருவாக்குவதற்குத் துணை புரிய வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம்" என்று அந்தச் சுப தினத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ ஆட்லி பார்லிமெண்டில் திருவாய் மலர்ந்தருளினார்.

அதைக் கேட்டதும் சர்ச்சில் கோஷ்டியினர் கண்களைக் கசக்கிக் கொண்டனர். "காண்பது உண்மையா அல்லது கனவா" என்று நினைத்தனர். அதைக் கேட்ட இந்திய மகாஜனங்களும், "பிரிட்டிஷாராவது, மனதார இந்தியர்களுக்குச் சுதந்திரம் அளிப்போம் என்று கூறுவதாவது! எனவே ஆட்லியின் கூற்று நெருக்கடியைச் சமாளிக்க பிரிட்டிஷார் கையாளும் தற்காலிக மருந்து" என்று சந்தேகம் கொண்டனர். ஆட்லியோ, தமது வார்த்தையை நிறைவேற்ற ஒரு வாரம்கூடத் தாமதிக்கவில்லை!

அவருடைய சகாக்களான லார்ட் பெதிக் லாரென்ஸ், சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், ஸ்ரீ ஏ. வி. அலெக்ஸாண்டர் இம் மூவரும் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள். இந்தியத் தலைவர்களுடனும் முஸ்லிம் லீக் தலைவர்களுடனும் தினக் கணக்கில் பேசினார்கள்; மணிக் கணக்கில் பேசினார்கள். பிறகு நாள் கணக்கிலும் பேசினார்கள். சமரசம் ஏற்பட வில்லை. பிறகு தாங்களே ஒரு மத்தியஸ்த திட்டத்தை வெளியிட்டார்கள், அதன் சாரம் இதுதான்:

1. இந்தியர்கள் தங்களுடைய எதிர்கால அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை உடனே கைக்கொள்ள நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.

2. அரசியல் திட்டம் உருவாகும் வரையில் இடைக்கால சர்க்கார் அமைக்கப்படும்.

3. முஸ்லிம் லீகர்கள் கோருகிறபடி பாகிஸ்தான் ஏற்படினும், அதனால் சிறுபான்மையோர் பிரச்னை தீர்ந்து விடாது. அதற்குமாறாக பாகிஸ்தான் அமைவதன் மூலம் எத்தனையோ புதிய பிரச்னைகள் எழும். ஆகவே, இந்தியாவில் இரண்டு சர்க்கார்களிடம் அதிகாரத்தை ஒப்புவிக்குமாறு நாங்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்கில்லை.

பிரிட்டிஷ் மந்திரிகள் தூது கோஷ்டியாரின் மேற்படி திட்டத்தைக் காங்கிரசும் முஸ்லிம் லீகும் ஒருவாறு ஒப்புக்கொண்

டன. எனினும், பிறகு இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீகர்களுக்குப் போதிய ஸ்தானங்கள் அளிக்கவில்லை என்று கூறி வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது போல் லீக் மறுபடியும் பகிஷ்கரித்துக் கொண்டது.

மந்திரிசபைக் கோஷ்டியின் திட்டத்தை நிராகரித்தும், காங்கிரஸின் பிடிவாதமும் பிரிட்டிஷ் சர்க்காரின் நம்பிக்கைத் துரோகமுமே அதற்குக் காரணம் என்று கூறியும் முஸ்லிம் லீகில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. லீகர்கள் அத்துடன் நிற்கவில்லை. காங்கிரசுக்குப் 'புத்தி' கற்பிப்பதற்காக 'நேரடி நடவடிக்கை' எடுத்துக் கொள்வதென்றும் தீர்மானித்தனர்.

பிரிட்டிஷாரின் திட்டப்படி காங்கிரஸ் தலைவர்கள் 1946 செப்டம்பர் மாதம் இடைக்கால சர்க்காரை அமைத்தார்கள். வாழ்நாளெல்லாம் பிரிட்டிஷ் சர்க்காருக்குப் பரம விரோதிகளாக இருந்து போராடிச் சிறையில் பல வருஷங்களைக் கழித்த பண்டித ஜவாஹர்லால் நேரு, சர்தார் பட்டேல், பாபு ராஜேந்திரர் முதலிய மற்றும் பல தலைவர்கள் வைஸ்ராய் வேவலிடமிருந்து இந்தியாவை ஆளும் அரசாங்க அதிகாரத்தை ஒப்புக் கொண்டார்கள்.

பிரிட்டிஷ் மந்திரிகளின் திட்டத்தை அங்கீகரிக்காதவர்களுக்கு இடைக்கால சர்க்காரில் இடமில்லை என்று பிரிட்டிஷார் கூறி விட்டதால், காயிதே ஆஜம் ஜின்னாவின் கோபம் கரை கடந்தது.

இடைக்கால சர்க்காரில் காங்கிரஸ் கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக வேவலும் லீகர்களும் சூழ்ச்சி செய்தனர். அவர்களுடைய சூழ்ச்சி பலிக்கவில்லை. அதற்கு மாறாக இடைக்கால சர்க்காரில் லீகர்கள் இடம்பெற முடியாமற் போனது, வேவலுக்குத் துக்கத்தைக் கொடுத்தது. எனவே, அவர் தமது விஷமங்களை ஆரம்பித்தார். இறுதியில் அவருடைய விஷமங்களே அவருடைய வைஸ்ராய் பதவிக்கு வினையாக முடிந்தன.

வேவலின் விஷமங்களைப் பற்றி அப்போது இந்தியாவின் பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜி கூறியதாவது:—

"வைஸ்ராய் வேவல் சர்க்காருடன் ஒத்துழைக்காததோடு, சர்க்கார் ரதத்தின் சக்கரங்களையே பிடுங்கி வருகிறார். எனவே, நிலைமை இப்படியே தொடர்ந்து வருமாயின், மகத்தான போராட்டம் ஏற்படுவதைத் தவிர வேறு வழியில்லை...அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்ளும்படி நான் முஸ்லிம் லீகர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். அவர்கள் கலந்து கொண்டாலும் கலந்து கொள்ளாவிட்டாலும் குறிப்பிட்ட நாளில் அரசியல் நிர்ணய சபைக் கூட்டம் நடந்தே தீரும். நாங்கள் அதில் கலந்து கொள்வோம். இறுதியில் இந்தியக் குடியரசையும் அமைப்போம்."

காங்கிரஸ் தலைவர்கள் இடைக்கால சர்க்காரை அமைத்ததும் அமைக்காததுமாக, லீகர்களின் "நேர் நடவடிக்கை" வேலைகள் ஆரம்பமாயின. அதன் விளைவாகக் கல்கத்தாவிலும், டாக்காவிலும், நவகாளி, திப்பேரா முதலிய இடங்களிலும் வகுப்பு வெறியும் கொலை வெறியும் தாண்டவமாடின. அவற்றிற்கு லட்சக் கணக்கானவர்கள் பலியாயினர். பத்து லட்சக் கணக்கானவர்கள் உற்றார் உறவினரையும் சொத்துக்களையும் இழந்து ஓட்டாண்டிகளாக ஓடி வந்த அலங்கோலத்துக்கு உலக சரித்திரத்திலே உவமை காண்பதரிது.

சங்கீதக் கச்சேரியில்!



பிறகு பண்டித ஜவாஹர்லால் நேரு, வைஸ்ராய் வேவல், லீக் தலைவர் ஜனாப் ஜின்னா இவர்களுக்குள் கடிதப் போக்கு வரத்து நடந்த பின், லீக் பிரதிநிதிகள் ஒரு வழியாக அக்டோபர் மாதம் இடைக்கால சர்க்காரில் கலந்து கொண்டார்கள். மே மாதத்தில் பிரிட்டிஷ் மந்திரிகள் கோஷ்டி விடுத்த அறிக்கையை ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை அங்கீகரித்தே லீகர்கள் சர்க்காரில் கலந்து கொண்டனர். இடைக்கால சர்க்காருடனும், அரசியல் நிர்ணய சபையுடனும் ஒத்துழைப்பதாக ஜனாப் ஜின்னா தம்மிடம் வாக்களித்ததாகவும் லார்டு வேவல் கூறினார். எனவே அதற்குமேல் அதிக தகராறு எழுவதற்குக் காரணம் இல்லையென்று பலரும் கருதினர். ஆனால் அந்த எண்ணம் தவறு என்பது ஒரு சில நாட்களில் வெளியாயிற்று.

இடைக்கால சர்க்காரில் லீகர்களுக்கு இடம் கொடுத்தது விதைக் கோட்டையில் எலியை வைத்துக் கட்டிய கதையாக முடிந்தது! அவர்கள் இடைக்கால சர்க்காருடன் ஒத்துழைக்காததோடு, மேற்படி சர்க்காருக்குத் துரோகமாக அந்த சர்க்காரை மாத்திரமல்ல, இந்தியாவின் சுதந்திரத்தையே தகர்க்கக் கூடிய சதி வேலைகளில் ஈடுபட்டார்கள்.

லீகர்கள் இடைக்கால சர்க்காரில் கலந்து கொண்ட பின், அரசியல் நிர்ணய சபையில் தாங்கள் பங்கெடுத்துக் கொள்ளப்போவதில்லை என்று அறிவித்தார்கள். அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும் அரசியல் நிர்ணய சபை ஆரம்பமாகியே தீர வேண்டும் என்பதில், காங்கிரஸ் தலைவர்களும் உறுதியாக இருந்தனர். எனவே பிரிட்டிஷ் சர்க்காரின் நிலைமை தர்ம சங்கடமாயிற்று.

உடனே அவர்கள் வைஸ்ராய் வேவலை அவசரமாக லண்டனுக்கு வரும்படியும், தம்முடன் இரண்டு காங்கிரஸ் பிரதிநிதிகள், இரண்டு முஸ்லிம் லீக் பிரதிநிதிகள், ஒரு சீக்கியர் பிரதிநிதி முதலியோரை அழைத்து வரும்படியும் கட்டளையிட்டார்கள்.

குறிப்பிட்ட தேதியில் அரசியல் நிர்ணய சபையைக் கூட்ட வேண்டியிருப்பதாலும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருப்பதாலும் தாங்கள் லண்டனுக்கு வருவது முடியாத காரியம் என்று கூறி, பிரிட்டிஷ் சர்க்காரின் அழைப்பை ஏற்றுக் கொள்ளக் காங்கிரஸின் சார்பில் பண்டித நேரு முதலில் மறுத்து விட்டார். எனினும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லி மன்றாடிக் கேட்டுக் கொண்டதன் மீது ஜவாஹர்லால்ஜி மேற்படி அழைப்பை அங்கீகரித்தார்.

"ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி டிசம்பர் மாதம் ஒன்பதாம் தேதி அரசியல் நிர்ணய சபை கூடுவதற்கு எவ்வித இடையூறும் இருக்கக் கூடாது என்பதே எங்களுடைய ஆவல். அதற்காகவே பேச்சு வார்த்தைகள் நடத்தத் தங்களை லண்டனுக்கு அழைக்கிறோம். தாங்கள் இப்போது இங்கு வருவது, இந்தியா சுதந்திரம் பெறும் நாளை துரிதப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். அரசியல் நிர்ணய சபை ஆரம்பமாவதற்கு முன் தாங்கள் திரும்பவும் இந்தியா செல்லுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சித்தமாயிருக்கிறோம்" என்று ஸ்ரீ ஆட்லி உறுதி கூறிய பிறகே நமது தலைவர் லண்டனுக்குச் செல்ல இசைந்தார்.

பிரிட்டிஷ் சர்க்காரின் அழைப்புக்கு இணங்க பண்டித ஜவாஹர்லால் நேரு, சர்தார் பலதேவ் சிங், ஜனாப் ஜின்னா, ஸ்ரீ லியாகத் அலிகான் இந்த நால்வரும் லண்டனுக்குச் சென்றனர். பிரிட்டிஷ் சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் அவர்களுக்கும் பேச்சு வார்த்தைகள் நடந்தன. ஆனால், பலன் எதுவும் ஏற்படவில்லை.

இத்தனை இடையூறுகள் ஏற்பட்டும் கடைசியில் குறிப்பிட்ட தினத்தில் டாக்டர் சச்சிதானந்த சின்ஹாவின் தலைமையில் அரசியல் நிர்ணய சபை ஆரம்பமாயிற்று. புது டில்லியிலுள்ள அசெம்பிளி மண்டபத்தில் ஆரம்பமான அந்தச் சபையின் முதல் கூட்டத்துக்கு ஒன்பது பெண்மணிகள் உள்பட இருநூற்றைந்து அங்கத்தினர்கள் பிரசன்னமாகியிருந்தார்கள். முஸ்லிம் லீகர்கள் வரவில்லை.

அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர் பதிவுப் புத்தகத்தில் முதன் முதலாகக் கையெழுத்திடும் பாக்கியம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்குக் கிடைத்தது குறிப்பிடத் தக்கது. ராஜாஜிதான் முதன் முதலாக அந்தப் புத்தகத்தில் கையெழுத்திட்டார்.

அச்சபையின் நிரந்தரத் தலைவராக பாபு ராஜேந்திரப் பிரசாதை ஏகமனதாய்த் தேர்ந்தெடுத்தனர். பூர்வாங்கமான நடவடிக்கைகளுக்குப் பின் இந்தியாவின் அரசியல் மகா சாஸனத்தை உருவாக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றன.

(தொடரும்)

மது விலக்கு மந்திரி மனம் இரங்குமா?

எம். ஆர். மேகநாதன்

இந்தியாவிலே பனைமரங்கள் நிறைந்த ஜில்லா திருநெல்வேலி. இந்த ஜில்லாவில் பனைமரத்திலிருந்து பனை வெல்லம், (கருப்புக் கட்டி) பனங் கற்கண்டு முதலிய உணவுப் பொருள்களை எடுத்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். குறிப்பாக இந்த ஜில்லாவிலுள்ள திருச்செந்தூர், நாங்குநேரித் தாலுகாவிலுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு வருஷத்தில் ஆறு மாதம் பனைமரத்திலிருந்து எடுக்கப்படும் பதனீர் (Palmyra Juice) ஆகாரமாக உபயோகப்படுகிறது. (இதற்குச் சில புத்திசாலிகள் Sweet Toddy என்று பெயர் வைத்திருக்கிறார்கள்') மேற்படி ரஸத்தில் சுண்ணாம்பு போடவில்லையெனில் கள்ளாகி விடும். இந்த ஜில்லாவில் 99% பனைமரங்களை உணவுப் பொருள் உற்பத்திக்காகத்தான் உபயோகித்து வந்தார்கள். சில மரங்களைத்தான் கள் எடுப்பதற்கு உபயோகப்படுத்தினர். அப்படிக் கள் எடுக்கப்படும் பனைமரங்களைக் கவனித்து வரவும், சுண்ணாம்பு போட்டு உணவுக்காக உபயோகப்படுத்தும் பனை மரங்களில் திருட்டுத்தனமாகக் கள் எடுக்கிறார்களா என்பதைக் கவனிக்கவும் ஆப்காரி இலாகா அதிகாரிகளும் போலீஸ்காரர்களும் இருந்தார்கள்.

சென்ற அக்டோபர் மாதம் 2-ந் தேதி காந்திஜி ஜெயந்தி அன்று மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. மதுவரக்கன் என்ற பெரிய பொம்மை கட்டி மயானத்தில் கொண்டுபோய்க் கொளுத்தினார்கள். அவ்வைபவத்தில் கலந்துகொண்ட மதுவிலக்கு மந்திரி குருபாதம் அவர்களுக்கு மாலை போட்டு, "மகாத்மா காந்தி நாமம் வாழ்க! மகான் ராஜாஜி கீர்த்தி வாழ்க! ரெட்டியார் மந்திரி சபை வாழ்க!" என்று இப்பிரதேசப் பனைமரப் பாட்டாளி, விவசாயிகள் வாயார வாழ்த்தினார்கள். பிறகு மதுவிலக்கு இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், ஆபீஸர்கள், 'ஹோம்கார்டு'கள், போலீஸ்காரர்கள்— இப்படி ஏகப்பட்ட மதுவிலக்கு அதிகாரிகள் ஜில்லா முழுவதும் வந்து குவிந்தார்கள். பதனீர் இறக்கும் பாட்டாளிகளை, "பனைமரத்தில் யாரிடம் கேட்டு ஏறுகிறாய்? லைசென்ஸ் இருக்கிறதா?" என்று கேட்கிறார்கள். "கள் இறக்கிக் கடை வைக்கத்தான் லைசென்ஸ் தேவை. இப்பத்தான் மகாராசன் சர்க்காரில் அந்தக் கள்ளுக்கடையைத் தொலைச்சிட்டாங்களே!" என்று தொழிலாளி சொன்னால், "அதனால்தான் இப்போ பனைமரத்தில் ஏறுவதற்கே லைசென்ஸ் வைத்திருக்கிறார்கள், நீங்கள் 'ஓட்'டுக் கொடுத்தனுப்பிய காங்கிரஸ் சர்க்கார்!" என்கிறார்கள். "சரி, சாமி! அப்படியானால் 'லைசென்ஸ' தாருங்கோ!" என்றால், "திட்டம் தயாராக வில்லை; தயாராகும் வரையில் காத்திரு!" என்கிறார்கள்.

இதற்கு அதிகாரிகள் பொறுப்பாளிகள் அல்லர். நமது மதுவிலக்கு மந்திரி குருபாதம் அவர்கள் திட்டப்படி பனைமரம் ஏறுவதற்கு லைசென்ஸ் வேண்டும். பதனீரை எடுத்துச் செல்ல லைசென்ஸ் வேண்டும். பதனீரைக் காய்ச்சி உணவுப் பொருள் உற்பத்தி செய்ய லைசென்ஸ் வேண்டும். பதனீரை விற்பனை செய்ய லைசென்ஸ் வேண்டும். அதுவும் அந்த ஊர் கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலம்தான் வாங்க வேண்டுமாம். இறக்கிய பதனீரைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் காய்ச்சிக் கருப்புக் கட்டியைக் கூட்டுறவு ஸ்தாபனத்திலே நிறுத்துக் காட்ட வேண்டுமாம். கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டுமாம். இதெல்லாம் கள்ளத்தனமாகக் கள் எடுக்க விடாமல் செய்வதற்கு ஏற்பாடு செய்யும் திட்டங்கள். திட்டத்தைப் பார்த்தால் பகுத்தறிவுக்கு ஏற்றதாகத்தானிருக்கிறது. அது, இந்தப் பனைமரங்களிருக்கும் பாலைவனப் பிரதேசங்களுக்கு, — கூட்டுறவுச் சங்கம் என்றால் என்ன என்று புரியாத மக்களுக்கு — பொருந்துமா என்பதே பிரச்னை. இப் பனைமரப் பிரதேசங்களில் பிரயாண வசதியே கிடையாது. ஏற்றுமதி இறக்குமதிக்கு உபயோகப்படுவது பாவம், அந்தப் பரமசிவன் வாகனம் ஒன்றுதான்! செருப்புப் போடாமல் பாலைவனத்தில் நடக்க முடியாது. ஆனால் இப்பிரதேசத்தில் செருப்புப் போட்டு நடக்க முடியாது. கற்களினால் உண்டாகியிருக்கும் மலைகளை நமது மது விலக்கு மந்திரி பார்த்திருப்பார். மணல் மலை இருக்கிறது என்று சொன்னால் நம்ப மாட்டார்கள்! இம் மணல்

மலைக்கு இந்தப் பக்கத்தில் 'தேரி' என்று கூறுவார்கள். இதன் மீதும் பாழும் பனைமரம் முளைத்திருக்கிறது! பதனீர் எடுப்பதென்பது சுலபமான காரியம் அல்ல. ஒரு நபர் குறைந்தது ஐம்பது பனைமரங்களையாவது குத்தகை எடுத்திருப்பார். காலை மூன்று மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரை ஏறி இறங்கிப் பதனீர் வரப் பக்குவப்படுத்த வேண்டும். திரும்பவும் ஐந்து மணியிலிருந்து இரவு பத்து மணி வரை ஏறி இறங்கிப் பக்குவப் படுத்த வேண்டும். அவர் மனைவி மரத்தடியில் நின்று கணவன் இறக்கும் பதனீரை வாங்க வேண்டும். அதைக் காய்ச்சிக் கருப்புக் கட்டியாக்க மாலை நாலு மணி ஆகிவிடும். அடுத்த நாள் பதனீர் காய்ச்ச விறகுக்காகக் காட்டுக்குப் போய் இரவில் வீட்டையடைவார்கள். ஆகவே அவன் சமையல் வேலை ஆரம்பிக்க இரவு பத்து மணியாகிவிடும். இப்படியிருக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் கருப்புக் கட்டியைக் கொண்டு போய் யார் நிறுத்துக் காட்டுவார்கள்? விநியோகத்தையும், விற்பனையையும் பொறுப்பெடுத்து நடத்தவாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா? அதுவும் இல்லை. விற்பனைக்கான முயற்சிகள் பூராவையும் சங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் கிராம மக்கள் கூட்டுறவில் கொஞ்சம் நம்பிக்கை கொள்வார்கள்.

இந்தத் தை மாதத்திலிருந்து பதனீர் 'சீஸன்' ஆரம்பித்து விட்டது. விவரம் தெரியாத பனைமரத் தொழிலாளிகள் 'லைசென்ஸ்' இன்றிப் பதனீர் எடுத்ததற்காகத் தண்டனை பெறுகிறார்கள். இதே நேரத்தில் அதிகாரிகள், கூட்டுறவுச் சங்கங்கள் கிராமங்களில் அமைக்க வேண்டுமென்று இப்போதுதான் பிரசங்கம் செய்து வருகிறார்கள். தை மாதத்திற்குள் எத்தனை கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிப்பார்கள், எப்படி லைசென்ஸ் கொடுப்பார்கள் என்பது கடவுளுக்குத்தான் தெரியும்!

இதற்காகத்தான் மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்த ராஜாஜி இந்த ஜில்லாவுக்கு லைசென்ஸ் விதிவிலக்குக் கொடுப்பதாக வாக்களித்திருந்தார் என்று பொது மக்கள் கூறுகிறார்கள்.

இப்போதும் இந்த ஜில்லாவை அடுத்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மது விலக்கு அமுல் நடக்கும் பிரதேசத்தில் பனைமரங்களுக்கு லைசென்ஸ் விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். பனைமரம் ஏறுவதற்கு லைசென்ஸ் வாங்க வேண்டுமென்பது மிகக் கொடுமையான உத்தரவு. பாமரப் பனைமரத் தொழிலாளி லைசென்ஸ் வாங்க மனுக் கொடுக்கவும் அதிகாரிகளைத் தேடி அலையவும் ஆரம்பித்தால் உருப்படுவானா? எந்தச் சட்டத்தையும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமானால் லைசென்ஸ் முறை இருக்க வேண்டுமென்ற பைத்தியம் ஏனோ நமது சர்க்காருக்குப் பிடித்து விட்டது? இனி களவு நடக்காமலிருக்க இரவில் தெருவில் நடமாடுகிறவர்கள் எல்லோரும் லைசென்ஸ் பெற வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்து விடுவார்களோ என்று பொது மக்கள் பயப்படுகிறார்கள்!

ஒவ்வொன்றுக்கும் லைசென்ஸ்; அதற்கு அதிகாரிகள்; சிபாரிசுக்கு எம். எல். ஏ.க்கள்; காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொண்டு மேலும் மேலும் காங்கிரஸின் பெயரைப் பாழாக்காமல் — மற்றக் கட்சிகளுக்குப் பலம் தேடிக் கொடுக்காமல் — மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்த மந்திரி அவர்களின் மனம் இரங்குமா?

டாக்கி உலகில்!



“டைரக்டர் ஸார்! படத்தின் நீளத்தைக் குறைக்க வேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போட்டிருப்பதால், அடுத்த படத்தில் நான் கதாநாயகியாக நடிக்கலாமல்லவா?”



விநியோக உரிமையாளர்கள் :

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு: ஜி. பி. பிலிம்ஸ், புரையார்

தஞ்சாவூர், திருச்சி ஜில்லாக்களுக்கு: கிரேட் இந்தியா பிலிம்ஸ், ஸ்ரீரங்கம்

கோவை, நீலகிரி ஜில்லாக்களுக்கு: ரேவதி பிலிம்ஸ் லிமிடெட், பொள்ளாச்சி

வட ஆற்காடு, தென் ஆற்காடு, சித்தூர், சேலம் ஜில்லாக்களுக்கு:
கோல்டன் பிக்சர்ஸ், வேலூர் (N. A. Dt.)

மைசூர் ஸ்டேட்டுக்கு: லக்ஷ்மி பிலிம் கம்பெனி, பெங்களூர் ஸிடி


மேஜர் மேஸ்ட்ரோ
5 வால்வுகள் AC & AC/DC உறுதியான வால்நட் பெட்டி. தூக்கிப்போகும் கைப்பிடியுடன்..
பைலட் ரேடியோக்கள்
ஒரே தரமான சிறப்பு
உங்கள் அருகாமையிலுள்ள ரேடியோ வியாபாரியிடம் காணுங்கள்.
மாடல் BS 647
6 வால்வுகள் AC
அழகான வால்நட் பெட்டி
(சமஸ்தானங்கள் உள்பட சென்னை ராஜதானிக்கு ஏகபோக
பிரதிநிதிகள்:
இந்தியன் ப்ருடன்ஷியல்
1/17 மவுண்ட் ரோடு, சென்னை-2.
IPZ-2-TM

பகையும் பாசமும்

கி. ரா. கோபாலன்...

"நான் வளர்த்த பெண்ணு இப்படிப் பேசுவது? என் வயிற்றிலே பிறந்த பெண்ணு இப்படி என் வார்த்தையை மீறிப் பேசுவது? பத்து மாசம் சுமந்து பெற்று அருமையும் பெருமையுமா வளர்த்த தாய் வார்த்தையைத் தட்டி நடந்தா எந்தத் தெய்வமும் பொறுக்காது......!" என்று மீனாட்சி கோபத்தோடு சொல்லிவிட்டு, அந்தப் படபடப்பில் ஏற்பட்ட சிரமத்தைப் போக்கிக்கொள்ளுவது போல் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, "ஹூம்! நான் இதுக்கு ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்!" என்று தீர்மானமாகச் சொன்னாள்.

பரிதாபத்தோடு தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அகிலம், "ஏம்மா, இவ்வளவு கோபத்தோடு பேசுறே?" என்றாள் பயத்தோடும் நடுக்கத்தோடும். ஆனால் இந்த வார்த்தை மீனாட்சியின் அடங்கிய கோபத்தைக் கிளறி விடுவதாய்த்தானிருந்தது. "ஏன் கோபமாப் பேசுறேன்னு கேட்கிறே? ஏன் கேட்க மாட்டே நீ? இப்போ உங்க அப்பாரு மாத்திரம் உசிரோடு இருந்தா கோபப்பட மாட்டாரு இதுக்கு? தன் கை அரிவாளாலே வெட்டித்தான் புதைச்சுடுவாரு, உன்னை!" என்றாள்.

"அப்பாருதான் இறந்து போயிட்டாரு! அவரு வைச்சிருந்த அரிவாள் மாடத்திலே தானே கிடக்குது? நீதான் அதை எடுத்து என்னை வெட்டிப் புதைச்சுடேன்!"

"என்ன, அவ்வளவு துணிச்சலா வந்திருக்க உனக்கு? அடி அரவக்காட்டு மாரியாத்தா! நீ செய்யற கூத்தா இது! நான் இப்படி 'ஹூம்'ன்னு அப்படியே நடுங்கற குட்டி இப்போ என் தலையை மிதிக்கத் தயாரா யிருக்காளே?......நீ என்ன செய்வே, எல்லாம் அவன் போட்ட சொக்குப்பொடி! ஆளு வாட்ட சாட்டமா கட்டையும் குட்டையுமா யிருக்கானில்லே, நீ மயங்கிட்டே!"

"அம்மா! கெட்டவங்கதான் சொக்குப்பொடி மிளகாய்ப் பொடியெல்லாம் போடுவாங்க; நல்லவங்களுக்கு இதெல்லாம் எதுக்கு? அவங்க குணமே மத்தவங்களை வசியப்படுத்திடுமே!"

"நல்ல குணமா! உனக்கு அவன் நல்ல குணந்தாண்டி தெரியும்; எனக்கு அவன் அப்பன், பாட்டன், அவன் குலத்திலே குடும்பத்திலே வந்தவங்க அத்தனை பேர் குணமும் தெரியும்!" என்று பரிகாசமும் ஏளனமும் கலந்தாற்போல் சொல்லிவிட்டு, "இதோ பார், அகிலம்! நீ மாத்திரம் அவனைக் கல்யாணம் கட்டிக்கிறதா யிருந்தா, அதுக்கு முந்தி என்னைத் தாயின்னு பார்க்காமே இரண்டு துண்டா வெட்டிப் போட்டுட்டுச் சந்தோசமா கல்யாணம் செய்துக்கோ! என் உசிரோடே—இந்தக் கண்ணாலே இதைப் பார்த்துக்கிட்டிருந்தா இந்த அரவக்காட்டு மாரியாத்தாளுக்கு அடுக்காது. உங்கபாட்டன் முப்பாட்டன் காலந்தொட்டு இந்தக் குடும்பத்துக்கு இருந்த பெருமையும் மதிப்பும் குலைந்துபோயிடும், ஆமாம்!" என்று சொல்லி விட்டுச் சட்டென்று தோட்டத்தை நோக்கி நடந்தாள்.

அகிலம் நின்ற இடத்திலேயே பேயறைந்தது போல் கலங்கிப் போய் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய மனது போராடிப் போராடி அலுப்படைந்திருந்தது. இன்று கடைசி முறையாகத் தன் தாயாரிடம் மன்றாடி எப்படியாவது அவளுடைய சம்மதத்தைப் பெற்று விடலாம் என்று நினைத்தாள். ஆனால் அவளுடைய தாயார் கொஞ்சம்கூட மனமிரங்கிப் பேசாதது அவளுக்குப் பெரிய ஏமாற்றமாயிருந்தது.

2

நடேசன் குடும்பத்திற்கும் நல்லமுத்துவின் குடும்பத்திற்கும் தலைமுறை தத்துவமாகத் தீராப் பகை. அவர்கள் பாட்டன் காலத்திலிருந்து இந்தப் பகையுணர்ச்சி வளர்ந்து வந்ததற்குக் காரணம் அந்தச் சிறிய கிராமத்தில் இரண்டு நாட்டாண்மை ஏற்பட்டதுதான். நடேசன் குடும்பத்தி லிருந்தவர்கள்தான் அவனுடைய பாட்டனார் காலத்திற்கு முன் ஊர் முழுவதற்கும் நாட்டாண்மைக்காரர்களாயிருந்தனர். அவனுடைய பாட்டன் காலத்தில் மாரியம்மன் திருவிழாவின் போது ஏற்பட்ட ஒரு சிறு சச்சரவு வளர்ந்து ஊருக்கு இரண்டு நாட்டாண்மை ஏற்பட்டு விட்டது. கீழத்தெருவி லுள்ளவர்கள் நல்லமுத்துவின் பாட்டனைத் தங்களுக்கு நாட்டாண்மைக்காரராக்கிக் கொண்டனர். மேலத்தெருவி லுள்ளவர்களுக்கு நடேசனின் பாட்டனே நாட்டாண்மைக்காரனு

யிருந்தான். அதிலிருந்து வம்ச பரம்பரைக் கிராமத்தில் கீழத்தெருவிற்கு கல்லமுத்துவும் மேலத்தெருவுக்கு நடேசனும் நாட்டாண்மைக்காரர்களானார்கள். பாட்டன் காலத்திலிருந்து ஏற்பட்ட பகையும் சண்டையும் மாரியம்மன் திருவிழா காலத்தில் மட்டுமல்ல, நினைத்த போதெல்லாம் கிளப்பி ஊரில் கலகலப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

நடேசன் அதிக நாட்கள் நாட்டாண்மைப் பதவி வகிக்கக் கொடுத்து வைக்கவில்லை. திடீரென்று ஒருநாள் இறந்து விட்டான். அப்பொழுது அவன் மகள் அகிலத்திற்கு நான்கு வயது. நடேசனுக்கு வேறு ஆண் சந்ததியே கிடையாதாகையால் அவனுடைய எட்டிய உறவினன் ஒருவன் நாட்டாண்மைக்காரனானான்.

நடேசன் இறந்த இரண்டு வருஷத்திற்கெல்லாம் கீழத்தெரு நாட்டாண்மை கல்லமுத்துவும் இறந்து விட்டான். அவன் மகன் செல்லய்யனுக்கு அப்பொழுது வயது பன்னிரண்டு. அவன் தஞ்சையில் தன் மாமன் வீட்டோடு இருந்து படித்துக் கொண்டிருந்தானாகையால், நாட்டாண்மைப் பதவியை வேறு யாரோ ஒருவன் பொறுப்போடு வகித்துச் சண்டை சச்சரவுகளுக்குக் குறைவில்லாமல் ஊரின் கௌரவத்தையும் மதிப்பையும் காப்பாற்றி வந்தான்.

படிப்பு முடிந்ததும் கல்லமுத்துவின் மகன் செல்லய்யன் கிராமத்திற்கு வர மனமில்லாதவனாய், தஞ்சையிலே தபாலாபீஸில் ஒரு குமாஸ்தா வேலையிலமர்ந்தான். அவனுடைய தாயாரும் சகோதரியும் கிராமத்திலேயே இருந்ததால் வருஷத்திற்கு ஓரிரண்டு முறை வந்து பத்து நாட்கள் இருந்துவிட்டுப் போவான்.

இந்தத் தடவை அவன் அரவக்காட்டிற்கு வந்திருந்தபொழுது நடேசனின் மகன் அகிலம் அவன் கண்ணில் பட்டு விட்டதுதான் விபரீதமாகப் போய் விட்டது. பாவம்! அவன் என்ன செய்வான்? தன் குடும்பத்திற்கும் அவனுடைய குடும்பத்திற்கும் தீராப் பகையிருந்தாலும் அவனையறியாமல் அவன் மனது அவளிடம் பற்றுதல் கொண்டு விட்டது.

வெள்ளை வேஷ்டியுடனும் சட்டையுடனும் செல்லய்யன் குளக்கரையில் நிற்பதைப் பார்த்ததும் 'யாரோ ஊருக்குப் புதிது' என்றுதான் அகிலம் நினைத்தான். ஆனால் சமீபத்தில் நெருங்கிப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டான். அவனுக்கு ஏற்பட்ட வெட்கத்தில் உடல் சிலிர்க்க அப்படியே நின்று விட்டான். செல்லய்யன் மெதுவாகக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

“சிறு பெண்ணாயிருக்கும்போதுதான் உங்க அப்பாவுக்குப் பயந்து என்னைக் கண்டா ஒதுங்கி ஒதுங்கி ஓடுவே! இப்போ எதுக்காக அகிலம் அப்படிப் பயந்து நடுங்கிக்கிட்டு நிற்கிறே?” என்றான் செல்லய்யன் சிரித்துக் கொண்டே.

திடீரென்று அவன் இப்படிப் பேசத் துணிந்துவிடுவான் என்று அகிலம் நினைக்கவேயில்லை. ஆகவே, அவன் வெட்கத்தினால் தயங்கித் தயங்கி, “பயமில்லீங்க, நான் யாரோன்னு நினைச்சேன்! கிட்ட வரவே நீங்கன்னு கண்டு திடுக்கிட்டுப் போயிட்டேன்! நீங்க முந்திக்கு இப்போ ரொம்ப மாறிட்டீங்களே!” என்றான்.


“நீ கூடத்தான் எவ்வளவோ மாறிட்டே அகிலம்!” என்றான் செல்லய்யன், அவனைக் குறும்பாகப் பார்த்துக் கொண்டே.

“நானா? நான் ஒண்ணும் மாறல்லீங்களே!” என்றான் அகிலம்.

“ஊஹூம்! அது உனக்கா தெரியும்? என்னைப்போல இருக்கிறவங்களுக்கில்லே தெரியும்? எங்கம்மாகூட ஏதோ சொல்லிச்சு — ‘அந்தப் பெண்ணைக் கட்டிக்க, இந்தப் பெண்ணைக் கட்டிக்க'ன்னு! நானும் எங்கெங்கலாமோ தெரியாத்தனமா ஆசை வைக்க நினைச்சேன். உன்னைப் பார்த்தப்புறம் அதெல்லாம் எனக்கு ‘சே'ன்னு போயிடுச்சு!”

இதைக் கேட்டதும் அகிலத்திற்குச் ‘சுரீ'ரென்றது. அவன்கூடத் தன்னையறி

நம்ப மாட்டார்!



கிராப் வெட்டிக்கொண்ட பையன்:—என் வீட்டு வரையிலும் சற்று வந்து என் அப்பாவிடம் நான் கிராப் வெட்டிக் கொண்டதாகச் சொல்கிறீர்களா? என்னைப் பார்த்து அப்பா கிராப் வெட்டிக் கொண்டதாக நம்பமாட்டார். கொடுத்த காசுக்குப் பக்ஷணம் வாங்கித் தின்னுட்டேன்னு கோபித்துக்கொள்வார்!



யாமல் தன் மனதைக் கண நேரம் நழுவ விட்டிருந்தான். ஆனால் செல்லய்யனைக் கல்யாணம் செய்து கொள்வதென்பது அவ்வளவு எளிதா? பரம்பரையாகப் படிந்திருக்கும் பகையுணர்ச்சியை அவ்வளவு எளிதாக மாற்றிவிட முடியுமா? — அவன் அப்படியே மனங்குழம்பி நின்றான்.

"என்ன யோசிக்கிறே, அகிலம்? ஊரு இப்படி ரெண்டுபட்டுக் கிடக்குதேன்னு! அது கெடக்குது, அகிலம்! நாம் ரெண்டு பேரும் திடமா இருந்துட்டா நம்மை அவங்களாலே என்ன செய்ய முடியும்?"

"என்னமோ, எல்லாம் உங்க சாமர்த்தியம். எனக்குப் பயமாத்தானிருக்குது!"

"என் சாமர்த்தியம் மாத்திரம் இல்லே. உன் சாமர்த்தியமும் இருக்குது. உன் மனசு திடமா இருக்கணும். பலர் பலது சொல்லுவாங்க; எதுக்கும் காது கொடுக்கக் கூடாது. ஏன், உன் தாயாரையே எடுத்துக்கலாம். ஏன்னா, பரம்பரையா வளர்த்து வந்த பகையை விடாமே பாராட்டறதுதானே குலத்துக்கும் குடும்பத்துக்கும் பெருமைன்னு உங்க தாயார் நினைக்கலாம். அப்போ நீ தாயாரைக் கூட விரோதிக்கக்கும்படி இருக்கும்!"

அகிலம் 'சரி' என்பதுபோல் தலையை ஆட்டினான். ஆனால் அவன் மனது மாத்திரம் தன் தாயாரிடம் இதைச் சொல்ல வேண்டுமே என்று நினைக்கும்போது வெட வெடவென்று நடுங்கியது.

3

அகிலமும் செல்லய்யனும் ஒவ்வொரு நாளும் குளக்கரையில் சந்திப்பது சகஜமாகிவிட்டது. கீழத் தெருவிலும் மேலத் தெருவிலும் இதைப்பற்றி ஜாடைமாடையாகப் பேச்சும் கிளம்பியது. அகிலத்தின் மனதில் நாளுக்கு நாள் துணிவு ஏற்பட்டு வந்தது.

ஊரில் பரவிய வதந்தி மீனாட்சியின் காதுவரை எட்டாமலிருக்குமா? இதைக் கேட்டதும் அவன் எந்த நிலையிலிருந்தான் என்றே சொல்ல முடியாது. தன் பெண்ணால் குடும்பத்தின் கௌரவமே குலைந்து விட்டதாக அவன் எண்ணினான். தன் மகனைக் கூப்பிட்டு நயமாயும் பயமாயும் சொல்லிப் பார்த்தான். ஆனால் அகிலம் ஒரே பிடிவாதமாகச் செல்லய்யனைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று சொல்லிவிட்டான்.

எதிராளிக்குப் பெண்ணைக் கொடுப்பது தான் கேவலம்; எதிராளியிடம் பெண்ணைக் கொள்வதென்றால் அது தங்கள் வீரத்தனத்திற்கும், கௌரவத்திற்கும் எடுத்துக் காட்டாகவே இருக்கும் என்று கருதினர் மேலத் தெரு வாசிகள். ஆகவே செல்லய்யன் அகிலத்தைக் கல்யாணம் செய்துகொள்ளுவதில் அவர்களுக்குப் பூரண திருப்தி. அதோடு மட்டுமல்ல; இந்த விவாகத்தை எப்படியாவது முடித்துவைக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டனர்.

கீழத் தெருவிலுள்ளவர்களுக்கு இது மிகவும் கோபத்தையும் ரோசத்தையும் உண்டாக்கியது. 'இந்தத் தெருப் பெண்ணை — அதுவும் காட்டாண்மைக்

காலாவதி!



யமதூதன் :— மகாராஜா! தம்முடைய கதை, தண்டம், பாசக்கயிறு எல்லாம் காலாவதியாகி விட்டது என்று வேறு ஆயுதம் தேடச் சொன்னீர்கள் அல்லவா? மதராஸ் குழாய்த் தண்ணீர் கொண்டுவந்திருக்கிறேன்; பயன்படுமா பாருங்கள்!

காரன் மகளை — ஒரு மேலத்தெருவான் கல்யாணம் செய்துக்கிறதுன்னு நடக்கிற கதையா? குத்து, கொலைதான் விழும்!' என்று சளைக்காமல் வீராப்புப் பேசிக் கொண்டிருந்தனர்.

தன் பெண்ணால் தன் குடும்பத்திற்கு மாத்திரமல்ல, கீழத் தெருவிற்கே அவமானம் ஏற்படுவதை மீனாட்சியால் எப்படிச் சகித்துக்கொள்ள முடியும்? ஆகவே அவள் மிகவும் மனக் கொதிப்படைந்தாள். அகிலம் வீட்டுக்கு வெளியே தட்டுத் தவறிக்கூடத் தலை நீட்டக் கூடாது, கொல்லைக் கிணற்றுக்குப் போய்க்கூடத் தண்ணீர் கொண்டு வரக் கூடாது, வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கவேண்டும் என்றெல்லாம் கட்டுப்பாடுகள் செய்தாள்.

அகிலமும் தன் தாயாரின் அடக்குமுறைக்கெல்லாம் எதிர்ப்புக் காட்டாமல் பணிந்து வந்தாள். ஆனால் அவள் மனதிற்குள் ஏதோ திட்டமிட்டுக் கொண்டிருந்தாள். ஏதோவொரு நாளை அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். தன் மகள் தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு அடங்கிவிட்டாள் என்று மீனாட்சியும் கொஞ்சம் தன் சிரத்தையை நாளுக்கு நாள் தளர்த்திவிட்டுக் கொண்டு வந்தாள். அகிலத்தை முன்போல் அவள் அதிகமாகக் கண்காணிப்பதில்லை.

ஒருநாள் நடுநிசி; மீனாட்சி நல்ல நித்திரையிலிருந்தாள். ஊரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தது. நெடுநேரம் வரை புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்த அகிலம், சந்தடி செய்யாமல் எழுந்து உட்கார்ந்து சுற்றிலும் பார்த்தாள். மாடத்தில் தணிவாக ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சத்தில் எல்லாவற்றையும் சரியாகப் பார்த்துத் தெரிந்துகொள்ள வசதியாக இருந்தது. அகிலம் மெதுவாக எழுந்து நின்று விரலைச் சொடுக்கினாள். அந்தச் சோதனையில் தன் தாயார் ஆழ்ந்த நித்திரையில்தானிருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டாள். அவளுடைய ஹிருதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. அவள் தேகமெங்கும் புழுக்கத்தில் நிற்பது போல் சூடேறி வியர்த்தது. சத்தம் செய்யாமல் அடிமேல் அடியாக எடுத்து வைத்து வீட்டுக் கொல்லைப்புறம் வந்தாள். அவளுடைய பயம் நடையை உந்திவிட்டது. கால்கள் பின்னலிட ஆற்றங் கரையை நோக்கி அதிவேகமாய் நடந்தாள்.

ஆற்றங்கரைப் படுகையில் அவளுக்காகக் காத்திருந்தான் செல்லய்யன். அவளைக் கண்டதும் அவன் நெருங்கி வந்து, "வா! பயப்படாதே! நீ எங்கே வராம இருந்துடறியோன்னு இத்தனை நேரம் கலங்கிக்கிட்டிருந்தேன். வா, போவோம்!" என்று சொல்லி, ஆற்றங் கரையோரமாக நடக்கலானான்.

அகிலமும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

• • •

அகிலமும் செல்லய்யனும் இரவோடு இரவாக ஊரை விட்டுச் சென்ற ரகசியம் இரண்டு தெருவாரில் ஒருவருக்காவது தெரியாது. இரண்டு கட்சியினருக்கும் இது ஒரு திடுக்கிடும் செய்தியாகத் தானிருந்தது. கீழத் தெருவிலுள்ளவர்கள் இது மேலத் தெருவிலுள்ளவர்கள் செய்த சூழ்ச்சிதான் என்று சுலபமாக முடிவு செய்து விட்டனர். ஏமாந்துபோனதில் அவர்களுக்கு ஒருபுறம் வெட்கமாகவும் இன்னொருபுறம் ரோசமாகவுமிருந்தது. கீழத் தெருவிலுள்ளவர்களையெல்லாம் சொல்லிக் காட்டிப் பரிகாசம் செய்ய மேலத் தெருவிலுள்ளவர்களுக்கு ஒரு விஷயம் அகப்பட்டது. ஊரில் இதனால் கலவரம் ஒன்றும் ஏற்படாவிட்டாலும் நாளைக்கு ஒன்றிரண்டு சண்டைகள் ஏற்படுவது சகஜமாகிவிட்டது.

செல்லய்யன் நண்பர்கள் புடை சூழ அகிலத்தைக் கலியபெருமாள் கோயிலுக்கு அழைத்துக் கொண்டுபோய் ஒரு

நல்ல முகூர்த்தத்தில் தாலி கட்டி விட்டான். இந்தச் செய்தி தபால்மூலமோ மனிதர்கள் மூலமோ அரவக்காட்டிற்கு வந்து உண்மைதானென்று ஊர்ஜிதமும் செய்யப்பட்டு விட்டது.

அகிலம் தனக்குத் தெரியாமல் செல்லய்யனோடு சென்று விட்டது மீனாட்சிக்குப் பெரிய அதிர்ச்சியாகத்தா னிருந்தது. அவள் பித்துப் பிடித்தவள் போலாகி விட்டாள். வீட்டிற்கு வெளியே தலை நீட்டுவதே அவளுக்கு வெட்கமாயிருந்ததால் வீட்டிற்குள்ளேயே நடைப்பிணம் போல, உலவி வந்தாள். அகிலம் எவ்வளவுதான் தன்னோடு எதிர்த்து வாயாடினாலும் இவ்வளவு துணிவான காரியத்தைச் செய்து விடுவாள் என்று அவள் எதிர்பார்க்கவே யில்லை. அகிலத்தின்மீது அவள் அளவற்ற கோபமும் வெறுப்பும் கொண்டாள். அவள் தன் வயிற்றில் பிறந்த பெண்ணில்லை என்றே உதறி விட்டாள். செல்லய்யனுக்கும் அகிலத்திற்கும் அவள் இட்ட சாபத்தில் ஒன்றாவது பலிக்க வேண்டும் என்று அரவங்காட்டு மாரியை வேண்டிக்கொண்டாள்.

தஞ்சையில் அகிலம் செல்லய்யனோடு சந்தோஷமாகக் குடித்தனம் நடத்தி வந்தாள். ஆனால் அடிக்கடி தன் தாயாரை நினைத்துத் துக்கப்படாமலிருக்க அவளால் முடியவில்லை. நடந்ததையெல்லாம் மறந்து தன்னை மன்னிக்கும்படி இரண்டு மூன்று கடிதங்கள் எழுதினாள். ஆனால் மீனாட்சி அந்தக் கடிதங்களை லட்சியம் செய்யவே யில்லை.

4

வருஷங்கள் இரண்டு ஓடிவிட்டன. மீனாட்சி நடைப்பிணமாகத்தா னிருந்தாள். மேலத் தெரு, கீழத் தெரு சண்டை சச்சரவுகளும் வழக்கத்துக்கு மாறுபடாமல் நடந்து வந்தது. ஒருநாள் எதிர் வீட்டு அஞ்சலை அலறியடித்துக் கொண்டு மீனாட்சிக்கு ஒரு நல்ல செய்தி கொண்டு வந்தாள். "மீனாட்சி அக்கா! இதைக் கேட்டியா? உன் மக ஆறு மாசம் தலை முழுவாம இருக்காளாமே?" என்று ஆச்சரியமும் வியப்பும் தாங்காமல் சொல்லிக் கையை அடித்துத் தாடையில் வைத்துக் கொண்டாள்.

இதைக் கேட்டதும், "என்ன?" என்று சீறி எழுந்தாள் மீனாட்சி.

நல்ல விஷயத்தைப் பெருமையோடு சொல்ல வந்த அஞ்சலை நடுங்கிவிட்டாள். பின்னர் தயங்கித் தயங்கி, "உன் மகளுக்குப் பிள்ளையுண்டாகி யிருக்குதாம்; ஆறு மாசமாம்!" என்றாள்.

மீனாட்சிக்கு இதைக் கேட்டதும் ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. "எந்த சனியன் எப்படிப் போனா என்ன? அதை ஏன் என் காதிலே போடறே? நான்தான் அதுக்காக ஓடற தண்ணிலே எப்பவோ ஒரு முழுக்குப் போட்டுட்டேனே!" என்றாள் படபடப்போடு.

எவ்வளவுதான் விரோத மிருந்தாலும் தாயாருக்கும் மகளுக்கும் விட்டுப் போகுமா? தன்னுடைய பெண் கர்ப்பமாயிருக்கிறாள் என்பதைக் கேட்டால் மீனாட்சி கொஞ்சமாவது சந்தோஷப்படுவாள் என்றுதான் அஞ்சலை நினைத்தாள். ஆனால் அவள் சீறிவிழவே அஞ்சலை வந்த வழியே திரும்பி விட்டாள்.

ஆனால் அஞ்சலைக்கு இந்த அதிசயத்தை ஊரில் பெண்ணாய்ப் பிறந்தவர்களிடமெல்லாம் சொல்லாமலிருக்க முடியவில்லை. பெற்ற பெண்ணிடம் ஒரு தாயார் இவ்வளவு பகைமை பாராட்டுவது ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஆச்சரியமாய்த்தா னிருந்தது.



மீனாட்சி தன் மனச் சம்மதத்தோடு அகிலத்தைச் செல்லய்யனுக்குக் கொடுத்தால் ஊரில் யார் யார் பழி சொல்லுவார்கள் என்று நினைத்தாளோ, அவர்களே இப்பொழுது அவளைப் பழி கூறிப் பரிகாசம் செய்யத் தலைப்பட்டனர்.

மாதங்கள் நான்கு ஓடின. ஒருநாள் எதிர்விட்டு அஞ்சலை ஆவேசங்கொண்டவள் போல் மீனாட்சியின் எதிரில் வந்து நின்றாள். "இந்தா, அக்கா! உன் மனசு கல்லா, இரும்பா? நீயும் எங்களை யெல்லாம் போலப் பெண்பிள்ளைதானே? உலகத்திலே தாயும் மகளும் சண்டை போட்டுக்கிறது உண்டுதான். ஆனா இப்படி ஈவு இரக்கமில்லாத ஒருத்தியை இப்போதான் கண்டேன். இதோ பாரு! உன் மக முகவிழியாவது கிடைக்கணும்னா இப்பவே தஞ்சாவூருக்கு ஓடு. இல்லாட்டி இந்த ஊரே உன்னைத் திட்டிக் கொட்டும்!" என்றாள் படபடப்போடு.

மீனாட்சி அஞ்சலை இருந்த நிலையைக் கண்டு நடுங்கி விட்டாள். "என்ன சொல்றே? அதை விபரமாத்தான் சொல்லேன்!" என்றாள் பயத்துடன்.

"உன் பெண்ணு இப்போ தஞ்சாவூரு ஆசுபத்திரியிலே இருக்காளாம். வீட்டிலே பிரசவத்துக்குக் கஷ்டமாயிருக்கவே அந்தப் பாவிமகன் ஆசுபத்திரியிலே கொண்டுபோய் விட்டு விட்டானாம். வயித்திலே என்னமோ கோளாறாம். இரண்டு நாளாப் பிரசவிக்கமாட்டாமே ரொம்ப வேதனைப்படுதாம். மருத்துவச்சிங்க எல்லாம் அவ பெத்துப் பிழைக்கிறதே கஷ்டம்னு சொல்லுறாங்களாம்!"

இதற்கு மேல் மீனாட்சியால் நின்று பேச முடியவில்லை; பொத்தென்று கீழே விழுந்து விட்டாள்.

* * *

தஞ்சாவூர் ஆஸ்பத்திரி வெளித் தாழ்வாரத்தில், ஜனங்கள் காத்திருக்கும் இடத்தில், செல்லய்யன் களையிழந்த முகத்தோடு உட்கார்ந்திருந்தான். நர்ஸ் வெளியே வந்து எப்படிப்பட்ட பதிலைச் சொல்லுகிறாளோ என்ற திகிலுடன் முதல் நாள் இரவு முழுவதும் அவன் தூங்கவே யில்லை. தன் மனைவி நல்லபடியாகப் பிரசவித்து உயிர் தப்ப வேண்டுமே என்று அவன் நினைவிற்குத் தோன்றிய தெய்வங்களை யெல்லாம் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். மீனாட்சி தன் பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டுதான் ஆஸ்பத்திரிக்கு வந்தாள். ஆனால் நர்ஸ் அப்பொழுது அவளைப் பார்க்க அனுமதிக்கவில்லை. ஆகவே, செல்லய்யன் உட்கார்ந்திருந்த இடத்திற்கே அவளும் வந்தாள்.

செல்லய்யனைப் பார்க்கப் பார்க்க மீனாட்சிக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டு வந்தது. "எத்தனை நாளா வஞ்சம் வைத்திருந்தானோ, பாவி! சூது வாது தெரியாத என் மகளைக் கெடுத்து இப்படி எமன் கையிலே கொடுக்கணும்னு! அடி, அரவக்காட்டு மாரியாத்தா! இந்தப் பாவி மகனை நீதான் கேட்கணும்!" என்று கண்களில் நீர் கலங்கப் படபடப்போடு சொல்லிவிட்டு, வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு ஓர் இடத்தில் உட்கார்ந்தாள்.

அவள் மனதில் பொங்கிய கோபமும் ஆத்திரமும் தணியவில்லை என்பதைச் செல்லய்யன் அறியாமலில்லை. அவள் வந்தவுடன் சொல்லிய வார்த்தைகள் அவன் காதில் விழாமலுமில்லை. ஆயினும் அந்தச் சமயத்தில் அவன் தன்னைத்தானே நொந்து கொள்ளாமல் வேறு என்ன செய்ய முடியும்?

அரைமணி நேரம் கழித்து ஒரு நர்ஸ் வெளியே வந்தாள். அவள் முகத்தில் தெளிவிருந்தது. அவள் நேராகச் செல்லய்யனிடம் வந்து, "அகிலம் பிழைத்து விட்டாள்; ஆண் குழந்தை பிறந்திருக்கிறது!" என்றாள்.

செல்லய்யனுக்கு இது தெய்வமே வந்து நேரில் சொல்லுவது போலிருந்தது. அவனை விட்டுப் பிரிந்து போன உயிரே வந்து விட்டது போலிருந்தது.

நர்ஸ் உள்ளே சென்றவுடன் செல்லய்யனின் முகத்தைக் கவனித்தாள் மீனாட்சி. அவள் மனதிலும் திடீரென்று இரக்கம் ஏற்பட்டது. அனுதாபம் பொங்க அவள் செல்லய்யனைப் பார்த்து, "ஐயோ, பாவம்! நீ இரண்டு நாளா சரியான சோறு தண்ணி கூடச் சாப்பிடாம ஆசுபத்திரியிலேயே குந்தி யிருந்தாயாமே? உன் முகந்தான் எப்படி வாடி வதங்கிப் போச்சு? நான்போய்க் கொஞ்சம் காப்பித் தண்ணி வாங்கி வரேன்—குடி!" என்றாள்.

"இல்லே, மாமி! எனக்கு இப்போ ஒண்ணும் வேண்டாம்!" என்றான் செல்லய்யன்.

ஆனால் அவள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் ஆசுபத்திரிக்கு வெளியே இருந்த காப்பி ஹோட்டலை நோக்கிப் போனாள்.

தன் மகளுக்கும் தனக்கும் உள்ள உறவைத் தானே துண்டித்துவிட்டதாகத் தான் மீனாட்சி நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் அந்த உறவை மறுபடியும் பிணைத்து வைக்கப் பிறக்கும் போதே வழி செய்து விட்டான் பேரன்.



குளிர்காலம்

மூடுபனி [illegible] தோன்றுகிறது. இலைகள் உதிர்ந்த மரக்கிளைகள் மூலமாக குளிர் காற்று வீசுகிறது. வரிசைக்கு செல்லும் மணல் சாலையின்மீது மாட்டு வண்டி மெதுவாகச் செல்கிறது. வண்டிக்காரன் பல்லெட்டும் குளிருக்காக கம்பளிப் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொள்ளுகிறான். சாலையின் வீடுகளிலும், குடிசைகளிலும், வயல்களிலும், மரத்தடியிலும் உள்ள ஒவ்வொருவரும் டீயின் சுகத்தையும் சூட்டையும் எதிர்நோக்கி நிற்கிறார்கள். டீயைப்போல மலிவாக, சுலபமாக எங்கும் கிடைக்கக்கூடியதும் திருப்தியளிக்கக்கூடியதுமான பானம் வேறொன்றுமே இல்லை.

எல்லோரும் டீ அருந்தும் வேளை

இந்தக் குழந்தைகள்!

கவிஜயம்மா

சரோஜாவும் முத்துவும் இணை பிரியாத தோழர்களாயிருந்தார்கள். முத்து எங்கே இருக்கிறான் என்று தேட வேண்டுமானால் சரோஜாவைத் தேடினால் போதும். அதேமாதிரி சரோஜாவைத் தேட வேண்டுமானால் முத்துவைத் தேடினால் போதும்.

சரோஜா விளையாடுகிறான் என்றால் முத்துவும் விளையாடுகிறான் என்று பார்க்காமலே சொல்லி விடலாம். சரோஜா பள்ளிக்கூடம் போனால் முத்துவும் பள்ளிக்கூடம் போவான். சரோஜா சாப்பிட்டால் முத்துவும் சாப்பிடுவான். சரோஜா புதுச்சட்டை போட்டுக்கொண்டால் முத்துவும் புதுச் சட்டை போட்டுக்கொள்ளுவான்.

முத்துவின் தகப்பனாரும் சரோஜாவின் தகப்பனாரும் பக்கத்துப் பக்கத்து வீட்டில்தான் குடியிருந்தார்கள். இருவரும் அத்யந்த நண்பர்களாயிருந்தார்கள். குழந்தைகளின் சினேகத்தினால் இருவரும் ஒருவரை ஒருவர் ரொம்ப நேசித்தார்கள்.

முத்துவின் தகப்பனார் ஒரு சமயம் பம்பாய்க்குப் போயிருந்தார். அங்கிருந்து வரும்போது முத்துவுக்கு ஒரு சின்ன மோட்டார் வாங்கிவந்தார். அது ரொம்ப அழகாயிருந்தது. சாவி கொடுத்தால் வெகு வேகமாக ஓடும்.

"முத்து! இந்தா, உனக்கு ஒரு மோட்டார் வாங்கி வந்திருக்கிறேன். இதோ பார், சாவி கொடுக்கிறேன்—'விர்' என்று நிஜம் மோட்டார் மாதிரியே ஓடும்!" என்று சொல்லிவிட்டு மோட்டாருக்குச் சாவி கொடுத்து ஓட விட்டார் அப்பா.

என்ன ஆச்சரியம்! முத்துவின் முகத்தில் சந்தோஷத்துக்குப் பதிலாகத் துக்கம் குடிகொண்டது. அப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"முத்து, உனக்கு என்ன கோபம்? உன்னை யார் என்ன சொன்னார்கள்? ஏன் உன் முகம் வாடியிருக்கிறது?" என்று அன்பு ததும்பும் குரலில் கேட்டார்.

உடனே முத்து, "எனக்குக் கோபம் ஒன்றும் இல்லை, அப்பா! யாரும் என்னை ஒன்றும் சொல்லவில்லை. இந்த மாதிரி மோட்டார் இன்னொன்று வேண்டும். அப்பொழுதுதான் என் மனசுக்குத் திருப்தியாயிருக்கும்" என்றான்.

"மோட்டார் என்னத்துக்கு இன்னொன்று வாங்கிக் கொள்ளுகிறாய்? வேறு ஏதாவது வாங்கிக்கொள்ளேன்" என்றார் அப்பா.

"இல்லை, அப்பா! மோட்டார்தான் இன்னொன்று வேண்டும். அதுவும் இதே மாதிரி பச்சை வர்ணமாகவே இருக்க வேண்டும். பம்பாயிலிருந்துதான் வாங்கி வர வேண்டும். இன்னொரு மோட்டார் வாங்கிக்கொண்டு வந்தால்தான் நான் இந்த மோட்டாரை எடுத்துக் கொள்ளுவேன்!" என்று முத்து கண்டிப்பாய்ச் சொன்னான்.

"என்னடா, முத்து! இப்படி பிடிவாதம் பிடிக்கிறாய்? என்னத்துக்கு உனக்கு இரண்டு மோட்டார்?" என்று அவர் சற்றுக் கடுமையாகவே கேட்டார்.

"எனக்கு வேண்டாம் அப்பா, இரண்டு மோட்டாரும். சரோஜாவுக்கு ஒரு மோட்டார், எனக்கு ஒரு மோட்டார்! அவளுக்கு இல்லாமல் நான் மட்டும் எப்படி அப்பா மோட்டாரை வைத்துக்கொண்டு விளையாடுவேன்!" என்று கேட்டான் முத்து.

முத்துவின் தகப்பனாருக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

"முத்து, எனக்குப் பம்பாயில் இது ஞாபகம் வரவில்லை. பம்பாயிலிருக்கும் என் நண்பருக்குக் கடிதம் எழுதி இன்னொரு மோட்டார் வரவழைத்து விடுகிறேன். அப்புறம் உனக்கு ஒரு மோட்டார், சரோஜாவுக்கு ஒரு மோட்

டார் என்று வைத்துக் கொள்ளலாம்!" என்று சமாதானம் கூறினார்.

முத்துவும் சம்மதித்தான். இன்னொரு மோட்டார் பம்பாயிலிருந்து வந்த பிறகு அதைச் சரோஜாவுக்குக் கொடுத்துவிட்டுத்தான் மோட்டார் விளையாட்டு விளையாட ஆரம்பித்தான்.

அன்று நல்ல மழை பெய்தது. தெருவில் வெள்ளம் பெருகிக் காவிரி நதி மாதிரி போய்க் கொண்டிருந்தது. முத்துவுக்கு உற்சாகம் தாங்கவில்லை. மழை நின்றதும் "சரோஜா! நாம் இரண்டு பேரும் இந்த வெள்ளத்தில் கப்பல் விட்டு விளையாடலாமா?" என்று கேட்ட முத்துவுக்கு முன்னால், சரோஜா காகிதக் கப்பல் பண்ணுவதற்கு வேண்டிய காகிதங்களுடன் புறப்பட்டு விட்டாள். சரோஜாவும் முத்துவும் கப்பல் விட்டுக் கொண்டே அந்தத் தெரு முனைக்குப் போய் விட்டார்கள். அப்பொழுது உற்சாக மிகுதியில் சரோஜா 'திடும், திடும்' என்று ஜலத்தில் குதித்தாள். இதனால் ஜலம் 'விர்' என்று கிளம்பித் தெறித்தது. அது முத்துவின் நிஜாரிலும் சட்டையிலும்பட்டுச் சேறாகிவிட்டது.

தன் உடைகள் வீணாகி விட்ட ஆத்திரத்தில், சரோஜாவின்மேல் படும்படி முத்துவும் இரண்டு தரம் குதித்தான். அவ்வளவுதான் சரோஜாவின் கவுன் முழுவதும் சேறாகி விட்டது. அவள் அழுதுகொண்டே வீட்டுக்கு வந்து அம்மாவிடமும் அப்பாவிடமும் முத்து தன் கௌனைச் சேறாக்கி விட்டதாகச் சொல்லி அழுதாள். முத்துவும் சும்மா இருந்து விடவில்லை. சரோஜாவுக்கு முன்னால் பாய்ந்து ஓடித் தன் வீட்டுக்குப் போய், சரோஜா தன் உடைகளைச் சேறாக்கி விட்டதாகச் சொல்லி அழுதான்.

அவ்வளவுதான்; "உன் பிள்ளைதான் போக்கிரி!" என்றாள் சரோஜாவின் தாயார்.

"உன் பிள்ளைதான் போக்கிரி!" என்றாள் முத்துவின் தாயார்.


கொஞ்ச நேரத்துக்கெல்லாம் குழந்தைகள் ஆரம்பித்து வைத்த சின்னச் சண்டை மிகப் பெரிய யுத்தகாண்டமாக மாறிவிட்டது.

சரோஜாவும், முத்துவும் தங்கள் சண்டையை மறந்து பழையபடி சிநேகமாகிக் கைகோத்துக் கொண்டு விளையாட ஆரம்பித்து விட்டனர்.

முத்து வீட்டுப் பக்கமாகத் தேங்கியிருந்த மழை ஜலத்தை அவன் சின்ன வாய்க்கால் வெட்டி, சரோஜா வீட்டுக்குப் போகும்படி செய்தான்.

"முத்து, நீ இருக்கும்போது எனக்கு என்ன குறை? வறண்டு கிடக்கும் மேட்டுப்பாங்கான எங்கள் வீட்டுக்கு வெள்ளம் பிரவாகம் எடுத்து வரும்படி செய்து விட்டாயே!" என்று சரோஜா சந்தோஷத்துடன் சொன்னாள்.

முத்து சிரித்துக் கொண்டே, "இல்லாவிட்டால் நீ கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கி என்னைத் தவிக்க விடுவாயே!" என்று சரோஜாவின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.



காலக்ஷேபம்

அவன் விருப்பம்!

மாஜிஸ்ட்ரேட் (கோர்ட்டில் குற்றவாளியைப் பார்த்து):—நீ செய்த குற்றம் ருசுவாகி விட்டது. உனக்கு நான் ஐம்பது ரூபாய் அபராதமோ அல்லது இரண்டு மாதச் சிறைத் தண்டனையோ கொடுக்கப் போகிறேன்!

குற்றவாளி:—ஐம்பது ரூபாயே கொடுங்கள், ஸார்!—போதும்!

★

சரிதான்!

"முன்பெல்லாம் என் அத்தை அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவாள். எங்களுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டமாயிருக்கும். இப்பொழுது......"

"ஏன்? இப்பொழுது உன் அத்தை வருவதில்லையா?"

"இல்லை, அப்பா! அவள் இப்போது எங்கள் வீட்டிலேயே இருக்கிறாள்!"

★

பேஷ்!

பையன்:—ஸார், நீங்கள் கொடுத்த கூட்டலைப் பத்துத் தடவை கூட்டிப் போட்டிருக்கிறேன்!

உபாத்தியாயர்:—பேஷ்! அப்படி ஒரு தடவைக்குப் பத்துத் தடவையாகக் கூட்டிப் போடுவது நல்லதுதான்!

பையன்:—ஆனால் பாருங்கள், ஸார்! ஒவ்வொரு தடவைக்கும் ஒவ்வொரு மாதிரி விடை வந்திருக்கு!

★

தெரிந்தது!

தம்பி:—அண்ணா, நான் இப்போதெல்லாம் சிக்கனமாயிருக்கிறேன். உனக்குத் தெரியுமா?

அண்ணா:—இத்தனை நாளாக அது தெரியாது. இப்பொழுதுதான் என் சட்டைப் பையிலே போடுகிற சில்லறை காணாமற் போகிறதன் காரணம் தெரிந்தது!

யார் மோசம்?

கோபு:—சேது ரொம்ப மோசம், அப்பா! பெரிய செலவாளியாகி விட்டான். எப்பொழுது பார்த்தாலும் பணமில்லை, பணமில்லை என்று மூக்காலே அழுகிறான்!

மணி:—ஏன், உன்னிடம் வந்து கடன் கேட்டு விட்டானோ?

கோபு:—இல்லை; நான்தான் அவனைக் கடன் கேட்டுப் பார்த்தேன்!

★

தெரியாது!

ஒருவர் (கடைக்காரனைப் பார்த்து):—என்ன அப்பா, ஒரே அடியாகக் கோபுரம் மாதிரி குஞ்சாலாடு அடுக்கி வைத்திருக்கிறாயே, நன்றாயிருக்குமா?

மிட்டாய்க் கடைக்கார சிப்பந்தி:—நன்றாயிருக்குமோ என்னமோ நமக்குத் தெரியாது, ஸார்! ஆனால் சுத்தமாக இருக்கும். தினம் காலையிலே நான் தூசி போகத் தட்டி விட்டுத்தான் அடுக்கி வைக்கிறேன்!

★

காரணம்

"நேற்று சோமு ரொம்ப வேடிக்கையாகப் பேசினானே, நீ ஏன் சிரிக்கவே இல்லை? உம்மணாமூஞ்சி மாதிரி உட்கார்ந்திருந்துவிட்டுப் போய்விட்டாயே!"



"எனக்கும் சோமுவுக்கும் கொஞ்சம் சண்டை. அவன் ஹாஸ்யத்தை அவனுக்கு எதிரிலேயே ரஸிக்கக் கூடாது என்று வீட்டிலே போய்த் தனியே உட்கார்ந்து ரஸித்துச் சிரித்தேன்!"

ஆயிரம் தந்திகள் பறந்தன!

ரஜனி

கொழும்பு, ஜனவரி 10—

இலங்கை இந்தியர்களின் சரித்திரத்தில் ஜனவரி ஒன்பதாம் தேதி ஒரு விசேஷ முக்கியத்துவம் பெற்ற தினமாகி விட்டது. அவர்களுடைய கட்டுப்பாட்டையும் கட்டுப் பலத்தையும் அரசாங்கம் அன்றைய தினம் நன்றாக உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். இந்தியர்களுக்கு நீதி வழங்க மறுப்பது நெருப்புடன் விளையாடுவதைப் போன்றது என்பதைச் சேனநாயகா கோஷ்டியினருக்கு, நேற்று இலங்கை முழுவதிலும் நடைபெற்ற நூற்றுக் கணக்கான கண்டனக் கூட்டங்கள் அறிவுறுத்திக் காட்டிவிட்டன. இலங்கை இந்திய காங்கிரஸின் ஏற்பாடுகளுக் கிணங்க நேற்று ஒவ்வொரு தோட்டத்திலும் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. அவைகளில் இந்தியத் தொழிலாளர் மட்டுமல்லாமல் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஆதரிக்கும் சிங்களவர்களும் யாழ்ப்பாணத் தமிழர்களுங்கூட ஆயிரக் கணக்கிலே திரண்டுவந்து கலந்து கொண்டார்கள். பார்லிமெண்டுக்கு வந்துள்ள இந்தியர் பிரஜா உரிமை மசோதாவை அழுத்தமாகக் கண்டித்தும் தங்களுடைய குறைந்த பட்சக் கோரிக்கைகளைத் தெரிவித்தும் தீர்மானங்களை நிறைவேற்றி இலங்கைப் பிரதமர், இந்தியப் பிரதமர், சென்னைப் பிரதமர் முதலியோருக்குத் தந்திமூலம் அறிவித்தார்கள். இந்தியாவுக்கு நேற்று மட்டும் சுமார் ஆயிரம் தந்திகள் போயிருக்கின்றன.

பிரஜா உரிமை மசோதாவில் இந்தியர்களை ரகம் ரகமாகப் பிரிப்பது அவர்களை வியாபாரப் பொருள்களைப் போல மதிப்பதாகுமென்றும், நியாயமான திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் மறுத்தால் வேலை நிறுத்தம் போன்ற நேரடியான சாத்வீகப் போராட்டங்களில் இறங்க வேண்டி நேருமென்றும் பொதுக் கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கூட்டங்களும், வர்த்தக மந்திரியாயிருந்த ஸ்ரீ சுந்தரலிங்கத்தின் ராஜிநாமாவும், திருவாளர்கள் செல்வநாயகம், வன்னிய சிங்கம், சிவபாலன் ஆகிய மூன்று தமிழ் காங்கிரஸ் பார்லிமெண்டு மெம்பர்கள் இந்தியர் கட்சியை ஆதரித்து நாடெங்கிலும் சுற்றுப் பிரயாணம் செய்து நிகழ்த்தி வரும் பிரசங்கங்களும் சேனநாயகா கோஷ்டியினருக்குச் சிறிது கலக்கத்தை உண்டு பண்ணி யிருக்கின்றன. ஆயினும் அவர்கள் வீண் கௌரவத்தை முன்னிட்டு முன்வைத்த காலைப் பின் வைப்பதாயில்லை. ஜனவரி 20-ம் தேதி மசோதாவைப் பார்லிமெண்டில் மூன்றாவது முறையாக நிறைவேற்றிச் சட்டமாக்கிவிட பிரதம மந்திரி சேனநாயகா தீர்மானித்திருக்கிறார். இதற்காகவே டில்லியில் நேருஜி கூட்டும் ஆசிய மகாநாட்டுக்கும் தாம் செல்லாமல் தமது அடுத்த வாரிசான ஸ்ரீ பண்டார நாயகாவை அனுப்பி வைக்க முடிவு செய்திருக்கிறார்.

தபால் முத்திரையில் புதுமை

பிப்ரவரி 4-ம் தேதியன்று இலங்கைச் சுதந்திரத்தின் மூன்றாவது ஆண்டு விழாவைப் பெரிய தோரணையிலே நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். அன்று பழைய சிங்கள மன்னர்களின் தலை நகரமாயிருந்த அநுராதபுரியைப் புனர் நிர்மாணம் செய்ய மந்திரி பண்டார நாயகா அஸ்திவாரக் கல் நாட்டுகிறார். சுதந்திர ஆண்டுவிழா ஞாபகார்த்தமாக நான்கு புதிய தபால் முத்திரைகள் வெளியிடப்பட விருக்கின்றன. அவைகளிலே இரண்டில் பிரதம மந்திரி சேனநாயகாவின் உருவப் படம் அச்சிடப் பட்டிருக்கும். மற்ற இரண்டில் சிங்கக்கொடி அச்சிடப்பட்டிருக்கும். பிரதம மந்திரியின் உருவப் படம் தபால் முத்திரைகளில் அச்சிடப்படுவது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இதுதான் முதல் தடவையென்று கூறப்படுகிறது. பிரிட்டனில்கூட பிரதம மந்திரியின் உருவப்படம் தபால் முத்திரைகளில் அச்சிடப்பட்டதில்லை. தபால் முத்திரைகளில் தம்முடைய படத்தைப் பார்க்க வேண்டுமென்பது ஸ்ரீ சேனநாயகாவின் நீண்டகால ஆசையென்றும் அதை அவர் வெளியிட்டபொழுது மந்திரி சபை சொற்ப ஆட்சேபணையுடன் அனுமதித்த தென்றும் தெரிகிறது.


இதைக் காட்டிலும் சிங்கக் கொடியைத் தபால் முத்திரைகளில் அச்சிடுவதுதான்

தமிழர்களுக்கு ஓரளவு கிலேசத்தை உண்டு பண்ணியிருக்கிறது. சிங்கக் கொடி சிங்களவர்களின் வகுப்புவாதக் கொடியாதலால் அதைத் தேசியக் கொடியாக்கக் கூடாதென்றும், எல்லா வகுப்பினரும் கௌரவிக்கக்கூடிய ஒரு தேசியக் கொடியைத் தீர்மானிக்க வேண்டுமென்றும் தமிழர்கள் கிளர்ச்சி செய்ததின் பயனாகப் புதிய கொடியைத் தீர்மானிக்கப் பார்லிமெண்டு சபை ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறது. அந்தக் கமிட்டியின் முடிவு தெரிவதற்கு முன்னால் சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாக்கி விட சிங்கள மந்திரிகள் பல வகையிலும் முயற்சித்து வருவதற்குப் புதிய தபால் முத்திரைகள் அத்தாட்சியாகக் காட்டப் படுகின்றன. இதேபோலத் தமிழ் மொழியை ஒதுக்கிச் சிங்களத்தைத் தேசிய பாஷையாக்கி விடவும் மறைமுகமாக முயற்சிகள் செய்யப்படுகின்றன. தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு பாஷைகளும் அரசாங்க பாஷைகளாயிருக்க வேண்டுமென்று தேசிய பாஷா கமிட்டி சிபார்சு செய்துள்ள போதிலும் தமிழ் மொழியை ஒதுக்கிவிடச் சிங்களத்தவர்கள் மறைமுகமாக நடவடிக்கை எடுத்து வருவதை ஸ்ரீ வன்னியசிங்கம் சென்ற வாரம் பேசிய ஒரு கூட்டத்தில் கண்டித்தார். அவர் பேசி வாய் மூடுவதற்குள் சிங்கக் கொடியையும் சேனநாயகா படத்தையும் தபால் முத்திரைகளில் அச்சிடப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

ரேடியோ நிபுணர்களுக்கு அழைப்பு

இலங்கை ரேடியோ நிகழ்ச்சிகளைப் பற்றி நாளுக்கு நாள் புகார்கள் அதிகரித்துக் கொண்டு வருவதால், இனி ஏதாவது செய்தே தீரவேண்டுமென்ற முடிவுக்கு மந்திரி ஸ்ரீ வி. சிற்றம்பலம் வந்திருக்கிறார். நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் உதவி புரிய அகில இந்திய ரேடியோவிலிருந்தும் பி. பி. ஸி. யிலிருந்தும் சில நிபுணர்களைத் தருவித்து யோசனை கேட்கவும், இலங்கையிலிருந்து சிலரை அகில இந்திய ரேடியோவுக்கும், பி. பி. ஸி. க்கும் அனுப்பிப் பயிற்சி பெறச் செய்யவும் மந்திரி தீர்மானித்திருக்கிறார். இப்படித் தீர்மானித்ததற்கு ஒரு காரணம் உண்டு. கூடிய சீக்கிரம் கொழும்பு ரேடியோவும் ஸியாக் ரேடியோவும் ஒன்றுபட இருக்கின்றன. அவை ஒன்றானபிறகு சதா நேரமும் ஒலிபரப்ப வேண்டியிருக்கும். அந்த நிகழ்ச்சிகள் தூர தேசங்களுக்கும் கேட்பதாயிருக்கும். இந்த நிலைமையில் தற்போதுள்ள குறைகள் நீடிக்க அனுமதிப்பது வெளிநாடுகளில் இலங்கையின் மதிப்பைப் பாழாக்கிவிடக் கூடுமென்று சிலர் அஞ்சுகிறார்கள்.

• • • • • • • சகோடயாழ் • • • • • • •



எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முன்னதாகவே, செந்தமிழ் நாட்டில் இசைக்கலையானது மகோன்னத நிலையை அடைந்திருந்தது. அந்தக் காலத்தில் இசைக்குச் சம்பந்தப்பட்ட பலவகை வாத்தியங்களும் பழந் தமிழர்களால் கையாளப்பட்டு வந்தன. அந்த வாத்தியங்களில் ஒன்றான சகோடயாழைப்பற்றிச் சிலப்பதிகாரம் என்னும் பழம் பெரும் காப்பியத்தில் காணலாம். சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் மறைந்து விட்ட சகோட யாழை ஸ்ரீ பு. உ. கே. நடராஜம் பிள்ளை என்பவர் இப்போது மீண்டும் தயார் செய்திருக்கிறார். அமராவதிக் கல்லோவியத்தில் காணப்படும் சகோட யாழின் உருவத்தையும் பழந்தமிழ் நூல்களில் காணப்படும் குறிப்புகளையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு அதில் கூறப்பட்ட 'நணாக்கு' என்னும் ஒரு வகை செம்மரத்தைத் தேடிக் கண்டுபிடித்து அதைக் கொண்டு தயாரித்திருக்கிறார்.

சென்ற டிஸம்பர் மாதம் சென்னையில் நடந்த ஆறாவது தமிழிசை விழாவில் பதினொரு தந்திகளையுடைய மேற்படி சகோட யாழில் சில கீதங்களை வாசித்துக் காட்டினார்.

•　　　•　　　•

சகோட யாழின் சரித்திரத்தையும் அதைக் கையாளும் முறைகளையும் விளக்கி ''பண்டைக் காலத் தமிழ் இசையும் தற்காலம் வழங்கும் இசையும்'' என்ற ஒரு விரிவான நூலையும் ஸ்ரீ நடராஜம் பிள்ளை வெளியிட்டிருக்கிறார். மேற்படி நூல் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்:— சங்கீத பூஷணம் பு. உ. கே. நடராஜம் பிள்ளை, 9/20, கண்ணுசாமி ரோடு, ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்.


மிகவும்
ருசிகரமானது
மாத்திரமல்ல—
இது
நல்லது!
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS
SPECIALISTS IN FOOD
DRINKS FOR 100 YEARS
முக்கியமாக
குழந்தைகளுக்கு
போர்ன்-விடாவிலுள்ள கால்
ஷியமும் விடமின்களும், வளரும் குழந்தை
களுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியான
சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களு
க்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்கமளித்து ஜீவ
சக்தி நிரம்பச் செய்கின்றன.
காட்பரீஸ்
போர்ன்-விடா
கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.
காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

239. அறிவு கைவிட்டது உன்னை

ராவணன் மந்திரிகள் முதலியோர் கூடிய சபையில் இருக்கிறான்.

* * *

அவமானமும் ஆங்காரமும் அவனது மனசை வந்து தாக்குகின்றன.

"கிணறுகளில் தண்ணீரா ஊறுகிறது; இரத்தம் அல்லவா ஊறுகிறது. பூந்தோட்டங்களும் பூஞ்சோலைகளும், தண்ணீர்த் தடாகங்களும் பல இடங்களிலும் இருந்தன. அப்படி அழகினாலும் தண்மையாலும் சிறந்திருந்த நகர் இப்போது எப்படி இருக்கிறது. ஒரே கொதிப்பாய்க் கொதிக்க அல்லவா செய்கிறது.

"பெண்களின் கூந்தலிலிருந்து அகில் புகையில் மணமும், கஸ்தூரித் தைலத்தின் மணமும் வருமே. அப்படி வரும்போது பெண்கள் வருகிறார்கள் என்று கட்டியம் கூறுவது போல் இருக்குமே. இப்போதோ —

ஊறுகின் றனகிண(று)
　　உதிரம்; ஒன்நகர்
ஆறுகின் றில(து)அனல்;
　　அகிலும் நாவியும்
கூறுமங் கையர்நறுங்
　　கூந்த லின்கூறு
நாறுகின் றது;நுகர்ந்(து)
　　இருந்தம் நாம்எலாம்.

[அகிலும் நாவியும் கூறும்: அகில் புகையும் கஸ்தூரி வாசனையும் வெகு தூரத்துக்கு வந்து வீசி மங்கையர் வருவதை எடுத்துக் கூறும்; நறுங் கூந்தலின் கூறு நாறுகின்றது: அத்தகைய வாசமுள்ள கூந்தலிலிருந்து இப்போது நெருப்புப்பட்ட காரணத்தினால் துர்நாற்றம் அல்லவா வீசுகிறது; நுகர்ந்து இருந்தம் நாமெலாம்: பரிமளம் போல் அல்லவா அந்தத் துர்நாற்றத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் நாம் எல்லாம்.]

குறிப்பு:—கிணற்றில் இரத்தம் பெருகியது முதலான காரியங்கள் எல்லாம் வெகு நாளைக்கு முன் கண்டவைகள் தான். ஆனாலும் ராவணனது மனசை விட்டுப் போகவில்லை. அவமானமும் ஆங்காரமும் மனசுக்கு வந்த போது கிணற்றிலுள்ள இரத்தம் நகரத்தின் கொதிப்பு எல்லாம் அப்படி அப்படியே புலனுக்கு வருகின்றன.

"நன்றாய் உட்கொள்ளுகிறோம், அனுபவிக்கிறோம் நாமெல்லாம்" என்பதில் ஆங்காரத்தின் பாவம் வேகத்தோடு தொனிக்கிறது.

* * *

ராவணன் மேலும் பேசுகிறான்.

"பகைவர்களைத் தான் நாம் ஒன்றும் செய்ய முடியவில்லை, போகட்டும். இந்தக் குரங்காவது செத்தது, இப்போது அது இல்லைதான் என்கிற வார்த்தையாவது நம்மால் ஏற்பட்டதா? இல்லை"

மற்றில தாயினும்
　　மலைந்த வானரம்
இற்(று)இல தாகிய(து)
　　என்னும் வார்த்தையும்
பெற்றிலம்; இறந்திலம்
　　என்னும் பேறலால்
முற்றுவ தென்இனிப் ;—
　　பழியின் மூழ்கினும் !

[மலைந்த வானரம்: தம்மை எதிர்த்த குரங்கு (அனுமன்): இற்று இலதாகியது: இறந்து இல்லை என்று ஆயது: பெற்றிலம்: நாம் அடையவில்லை; இறந்திலம் என்னும் பேறு அல்லால்: இறந்து ஒழியவில்லை என்னும் பாக்கியம் (புகழ்) அல்லாமல்; முற்றுவ தென் இனி: இனி என்ன நேரப் போகிறதோ சொல்ல முடியாது; பழியின் மூழ்கினும்: ரொம்ப பழிக்கு உள்ளாகிவிட்டோம். இனி ஏது விமோசனம்!]

என்றும் மறக்க முடியாதபடி அவமானம் ஏற்பட்டு விட்டது ராவணனுக்கு, மனம் தளர்ந்து விட்டது. செயலற்ற நிலைக்கு வந்து விட்டான்.

இதைச் சேனைத் தலைவனாகிய பிரஹஸ்தன் என்பவன் பார்த்தான். 'இப்படிச் சோர்வடைந்து செயல் செய்யாமல் இருக்கும் நிலைமை ஆபத்தை உண்டாக்கி விடும்' என்று பயந்து பேச ஆரம்பிக்கிறான்.

என்றவன் இயம்பலும் ;—
எழுந்திறைஞ்சினன்
கன்றிய கருங்கழல்ச்
சேனை காவலன் ;—
'ஒன்றுள(து) உணர்த்துவென்,
ஒருங்கு கேள்' என
நின்றனன் நிகழ்த்தினன்
உறுத்தும் நெஞ்சினன்.

[என்றவன் இயம்பலும்: மேலே சொன்னபடி ராவணன் பேசி முடிக்கவும்; எழுந்து இறைஞ்சினன்: எழுந்து நின்று வணங்கியவனாய்; கன்றிய: மனம் நொந்த; கருங்கழல்ச் சேனை காவலன்: இரும்புக் கழலைக் காலில் அணிந்த சேனைத் தலைவன்-பிரஹஸ்தன்; ஒன்று உளது உணர்த்துவென்: ஒரு விஷயம் இருக்கிறது அதை நான் சொல்லுகிறேன்; ஒருங்கு கேள் என நின்றனன்: ஒத்த மனத்தவனாய் நீ கேட்க வேண்டும் என்று சொல்லி நின்றவனாய்; நிகழ்த்தினன்: பேச ஆரம்பித்தான்; உறுத்தும் நெஞ்சினன்: ராவணன் மனதில் படும்படியாகச் சொல்ல வேண்டும் என்று நினைத்தவனாய்.]

* * *

"நாம் எந்தக் காரியத்தையும் நேர் முகமாய் வீர தத்துவத்துக்கு ஒத்தவனாகச் செய்ய வேண்டும். அதை விட்டு விட்டு சாமானியப்பட்ட மனிதர்களை ஏமாற்றுகிறதும் அவர்களுடைய பெண்களைக் கள்ளத்தனமாய்ப் பிடித்துக் கொண்டு வருவதும் கோழைகள் செய்கிற காரியம் என்று முன்னமே சொன்னேன். அது தங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?"

'வஞ்சனை மனிசரை
இயற்றி, வாணுதல்
பஞ்சன மெல்லடி
மயிலைப் பற்றுதல்,
அஞ்சினர் தொழிலென
அறிவித் தேன்: அது
தஞ்சென உணர்ந்திலை
உணருந் தன்மையோய்.

[மனிசரை வஞ்சனை இயற்றி: சாமானியப் பட்ட மனிதர்களை ஏதோ பொல்லாதவர்கள் என்று எண்ணி அவர்களை ஏமாற்றுவதும்; வாணுதல் பஞ்சு அன்ன மெல்லடி மயிலைப் பற்றுதல்: பிரகாசமான நெற்றியாம்! பஞ்சு போன்ற பாதமாம்! மயில் போன்ற அழகாம்! என்றெல்லாம் எண்ணி எண்ணி ஒரு பெண்ணைக் கள்ளத்தனமாகப் பிடித்து வருவதும்; அஞ்சினர் தொழில் என: கோழைகள் செய்கிற காரியம் என்று; அறிவித்தேன்: எடுத்துச் சொன்னதில் குறையில்லை; அது தஞ்சென உணர்ந்திலை: அதுதான் கைக்கொள்ள வேண்டிய காரியம் என்று நீ உணரவில்லை—தஞ்சு: பற்றுக் கோடு; விதியின் செயல்தான் என்ன; உணரும் தன்மையோய்: சகல காரியங்களையும் கற்று உணரக்கூடியவன்தானே நீ.]

உணரக் கூடியவனாய் இருந்தும் உணராது போனது விதியின் செயல்தான் என்பதில் அருமையான பரிவு தொனிக்கிறது.



"என்னுடைய மனைவி மாதர் மகாநாட்டில் தலைமை வகிக்கிறாள். அதற்காகத்தான் அவசரமாகப் போகிறோம்."

"ஆம், ஆம்; தங்கள் மனைவியார் பெண்கள் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளவர் என்பது நடையிலேயே தெரிகிறதே!"

புதுப்பட்டணத்தில் தேர்தல்

எஸ்.வி.எஸ்.

எத்தனையோ பேருக்கு எத்தனையோ விதப் பைத்தியம் பிடிக்கிறது. எங்கள் புதுப்பட்டணத்துப் பங்காரு நாயுடுவுக்கு எலெக்ஷன் பைத்தியம் பிடித்திருந்தது. தேர்தல் என்று வந்து விட்டால் போதும். ஒற்றைக் காலால் நிற்கத்தான் பிரயத்தனப்படுவார். இந்தக் கட்சிக்காகத்தான் நிற்கவேண்டும், இந்தக் கொள்கைக்காகத்தான் நிற்கவேண்டும் என்கிற நிர்ணயமான அபிப்பிராயம் அவருக்குக் கிடையாது. எந்தக் கட்சிக்காகவும் நிற்கத் தயாராக இருப்பார்! எம்மதமும் சம்மதந்தான். மொத்தத்தில் எலெக்ஷனில் நிற்க வேண்டும்!

பங்காரு நாயுடு அவர்களின் இந்த எலெக்ஷன் பைத்தியத்தைப் பற்றி ஊரார் பலவிதமாகப் பேசிக்கொள்வார்கள். "பங்காரு நாயுடுவா? அவர் தம் மிடையே ஒரு பியூன் வேலை காலியிருந்து, அதற்கு ஒரு எலெக்ஷன் என்று ஏற்பட்டு விட்டால் போதும். பங்காரு நாயுடுவே அந்தப் பியூன் வேலைக்குப் போட்டி போடுவார்" என்று சகஜமாகப் பேசிக் கொள்வார்கள். இப்படிப்பட்டவர் நகராண்மைக் கழகத் தேர்தல் வந்தால், அதைச் சும்மாவா விடுவார்?

எந்தத் தேர்தலிலும் இதுவரை பங்காரு நாயுடு ஜயித்துத்தான் வந்தார். அதற்குக் காரணம் உள்ளூரில் அவர் நன்கு அறிமுகமானவர். நல்லவர் நாயுடு என்ற பெயரும் உண்டு. பிரசார விஷயத்திலும் நன்கு கைதேர்ந்தவர். பணம் கொடுத்துச் சரிக்கட்டவேண்டிய இடத்தில் பணங் கொடுத்துச் சரிக்கட்டுவார்; நல்ல வார்த்தை சொல்லி காரியம் சாதிக்க வேண்டுமென்றாலும் காரியம் சாதித்துக் கொள்வார். மொத்தத்தில் எலெக்ஷனில் ஜயிக்கும் கலையில் வல்லாள கண்டராக இருந்தார் பங்காரு நாயுடு.



ஆமாம்; இப்போதுதான் அவருக்குத் தகுந்த போட்டி ஏற்பட்டிருந்தது. பங்காரு நாயுடுவுக்குச் சில பகைவர்கள் ஊரில் இருந்தனர். அவர்கள் ரொம்பவும் தேர்ந்தவர்களாக விளங்கினார்கள். அவர்கள் ஒரு முத்துக்குமாரசாமி என்பவரைப் பங்காரு நாயுடுவுக்கு எதிராக நிறுத்தி வைத்தார்கள்.

பிரசாரத்துக்காக, ஊரில் மூலை முடுக்குகளில் பிரசங்கங்கள் வேறு புரிந்தனர். அந்தப் பிரசங்கங்களில் அவர்கள் பங்காரு நாயுடுவை ஒரு மூச்சு வாயாற வைது வந்தனர்.

"பங்காரு நாயுடு நம் நகராண்மைக் கழகத்தில் பதினைந்து வருஷகாலமாக அங்கத்தினராக இருந்திருக்கிறார். சில சமயம் தலைவராகக்கூட இருந்திருக்கிறார். இருந்து என்ன பயன்? இதுவரைக்கும் நமது நகரத்துக்கு ஏதாகிலும் நன்மை செய்திருக்கிறாரா? தெருவில் விளக்குப் போட்டாரா? ரோடுகளை ரிப்பேர் செய்தாரா? இவர் காலத்தில் ஊரில் மழைதான் உண்டா? ஆகவே, பொது ஜனங்களே! இந்தத் தடவை உங்கள் மேலான வாக்கை நன்றாகச் சீர்தூக்கி யாருக்குப் போட்டால் உங்களுக்கும் நகரத்துக்கும் நன்மை பயக்குமோ, அவருக்குப் போடக் கோருகிறேன்" என்று சொல்லி முடிப்பது போல் பாவனை செய்து ஒருவர் இறங்கப் பார்ப்பார். அப்போது மேடையிலிருப்பவர்கள், "அதைச் சொல்லுங்க! அதைச் சொல்லுங்க!" என்று அவரைப் பிடரியைப் பிடித்து மேடைக்குத் தள்ளுவார்கள்.

மறுபடி அவர் ஆரம்பிப்பார். "கேளுங்களே! யாருக்கு வோட் செய்யவேண்டும் என்பதை நீங்களே சீர்தூக்கிச் செய்வீர்கள், இன்னாருக்குப் போடுங்கள் என்று சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். ஏனெனில், உங்களிடம் எனக்கு அபார நம்பிக்கை. இருந்தாலும் எனது நண்பர்கள் மிகவும் வற்புறுத்து

தால் யாருக்குப் போடவேண்டும் என்னதையும் சொல்லி விடுகிறேன்.

"முத்துக் குமாரசாமி என்று நீங்கள் கட்டுக் கூட இருக்க மாட்டீர்கள். வர் அவ்வளவு தன்னடக்கமுள்ள தசத் தொண்டர். அவர் இந்த லெக்ஷனுக்குக்கூட நிற்க மாட்டேன் ன்றார். நாங்கள்தான் வற்புறுத்தி ற்க வைத்தோம். பின்னர் இங்கு வந்து பாது ஜனங்களுக்கு நாலு வார்த்தை சால்ல வாருங்கள் என்றோம். உங்க டன் வந்து வறட்டுப் பிரசங்கம் செய்து றைக்கும் காலிகையில் தேசப் பணி சய்தால், பல பேருடைய துயரத்தைத் டைத்தவனுவேன்' என்றார். அப்படி ானல் அவருடைய தேசப்பணியின் ர்வத்தைப் பாருங்கள்! அப்படிப்பட்ட ரை நாம் பயன்படுத்திக் கொள்ள வண்டாமா? ஆகவே, உங்கள் மேலான வாட்டை அவருக்கே அளியுங்கள்!" ன்று கூறிவிட்டு உட்காருவார்.

இவ்விதம் மூலை முடுக்குகளில் எல் ாம் பிரசாரங்கள் செய்யவே, ஜனங் ளிடையே 'இந்த முத்துக் குமார மி யார்?' என்று அறிய ஆவலுண் ாகி விட்டது!

ஊரில் வேறு ஒரு பகுதியில் சிலர் ஆகா! அவர் அடக்கத்தின் உருவமல் வா! தொண்டின் அவதாரம்! முகத்தில் ான் என்ன தேஜஸ்!' என்று முத்துக் மாரசாமியைப் பார்த்துவிட்டதுபோல் பகமாறு பொய்ப் பிரசாரத்தைக் ளப்பி விட்டனர்.

மொத்தத்தில் ஊராருக்கெல்லாம் ந்த முகம் தெரியாத மனிதர் யார் ன்று பார்த்துவிட வேண்டும் என்று சை யுண்டாயிற்று! ஏன்? பங்காரு யுடுகூட "யாருடா அவன்?" என்று ம்மைத் தாமே கேட்டுக் கொண்டார்.

கடைசியில் தேர்தல் தினம் வந்தது! வாட்டுரிமை யிருந்த ஜனங்கள் யாவ ம் வோட்டுப் போட வந்திருந்தனர். ர்களிலும் சைக்கிள்களிலும், நடந்து ந்தும் வோட்டுப் போட்டனர். புதுப் ட்டணத்தின் சரித்திரத்திலேயே, க்கள் தங்கள் வோட்டுரிமையைப் பயன் டுத்திக் கொள்ள, இவ்வளவு ஆர்வம் ன்றுமே காட்டியது கிடையாது. இந் த் தடவை பொது ஜனங்களின் ந்த கடத்தை யாவருக்கும் ஒரு புதுமை ாகவே விளங்கியது.

தேர்தல் முடிவுகளை அறிய மறுநாள் ாலை நகராண்மைக் கழகத்தின் வாசலில் ஜ ஜே என்று ஜனங்கள் கூடிவிட்டனர். சரியாக நான்கு மணிக்கு முடிவுகள் அறிவிக்கப் பட்டன!

எதிர்பார்த்ததுபோல் முத்துக்குமார சாமி ஜெயித்திருந்தார். பங்காரு நாயுடு படுதோல்வி யடைந்திருந்தார்!

*   *   *

அன்று மாலை நாலரை மணிக்கு பங்காரு நாயுடு முகத்தில் கவலைக் குறி யுடன் தமது பங்களாவின் முற்றத்தில் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தார். அப்போது யாரோ தலையில் தலைப்பாகை யுடனும் கழுத்தில் ஜரிகை அங்கவஸ் திரத்துடனும் நுழைந்தார். இப்படிப் படுதோல்வி யடைந்ததைத் துக்கம் விசா ரிக்கத்தான் யாரோ வருகிறார் போலிருக் கிறது என்று கருதி யார் எனக் கூர்ந்து பார்த்தார் பங்காரு நாயுடு. ஆசாமி நெருங்கி வந்தவுடன் 'சே! இவ்வளவு தானு?' என்று எண்ணினார் பங்காரு நாயுடு. வந்த ஆசாமி கேட்கும் தூரத் தில் வந்தவுடன் "என்னடா இது? ஒரு வாரமாக ஆளைக் காணவில்லை. தோட்டமெல்லாம் தண்ணி யில்லாமே வாடிப் போவுது. நீ என்னடா என்றால் மாப்பிள்ளை கணக்கா டிரஸ் பண்ணிக் கொண்டு வந்து நிற்கிறாய்!" என்று கோபமாகக் கேட்டார் பங்காரு நாயுடு.

"ஆமாங்க; நான் வேலையை விட்டு நின்றுவிடப் போகிறேனுங்க. இந்த ஒரு வாரம் வராததுக்காகச் சம்பளத் தைப் பிடித்துக்கொண்டு மிச்சத்தைக் கணக்குப் பார்த்துக் கொடுங்க" என்றான் வந்த ஆசாமி.

"ஏன் அப்படி?"

"நான் இந்த எலெக்ஷனிலே ஜெயிச் சுட்டேனுங்களாம் அதனுல் இனிமேலே வேலை பண்ணவேண்டாம் என்று சொல்லி விட்டாங்க!" என்றான் அவன்.

"என்ன முத்து? என்ன சொன்னாய்?" என்றார் ஸ்ரீமான் பங்காரு நாயுடு.

கல்கி சந்தா விவரம்

	ஒரு வருஷம்	ஆறு மாதம்
இந்தியா, சிலோன்	ரூ. 13-0-0	6-8-0
பர்மா	ரூ. 16-4-0	8-2-0
மலேயா, வெளிநாடு	ரூ. 18-0-0	9-0-0

குறிப்பு:—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவு செய்து முன் பணம் அனுப்பவேண்டும்.

சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை

வட்ட மேஜை

★ சட்டம் எப்பொழுது வருகிறது?

ஹிந்து மத தெய்வங்கள் வேஷத்தைத் தரித்துக் கொண்டு சினிமாவில் நடிக்கக் கூடாது என்று சட்டம் இயற்ற சென்னை சர்க்கார் உத்தேசித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க விஷயமாகும்.

பக்தி செய்து பூஜிக்கக் கூடிய கடவுளை மிகவும் மட்ட ரகமான சம்பாஷணைகளைப் புகுத்தி காதல் கட்டங்களை நடிக்கும்படி செய்வதால், கடவுளே ஒரு காலத்தில் இவ்வித மட்ட ரகச் செய்கைகள் செய்திருக்கும் போது சாதாரண மானிடப் பிறவி கொண்ட நாமும் அவ்விதம் செய்தால் தவறு ஒன்றுமில்லை என்ற எண்ணம் மக்களிடை ஏற்படுகிறது.

தற்காலத்தில் சிவசக்தி நடனம், கோபிகை கோபாலன் நடனம் என்பதுபோன்ற நடனங்களைப் படம்பிடிக்க ஆரம்பித்துள்ளனர். தெய்வத்தன்மை பொருந்திய சக்திக் கடவுளை அரை நிர்வாணத்துடன் நடனம் ஆடுவது போல் சினிமாவில் காண்பிப்பது பெண்கள் குலத்தையே அவமதிப்பதாகும்.

சினிமாவில் தோன்றும் சிவபெருமான்கள், சில சமயங்களில் தாடி மீசையுடனும், சில சமயங்களில் க்ஷவரம் செய்து கொண்டு பத்துப் பதினைந்து தினங்கள் ஆனவர் போலவும், சில சமயங்களில் தினம் க்ஷவரம் செய்து கொள்பவர்கள் போலவும் காட்சியளிக்கிறார்கள்.

பார்வதி வேஷத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். தலையில் 'புரு'கடன் கூடிய கேசத்தை உடையவளாயும், 'லிப் ஸ்டிக்' பூசிய உதட்டை உடையவளாயும் காட்சியளிக்கிறாள்.

சினிமா மகாவிஷ்ணு முழுக் கை பனியன் தாரியாகவும், 'பிளாஸ்டிக்' சக்ரமேந்தி ''ப்யூஜி'' சில்க் தாரியாகவும், காட்சி அளிக்கிறார்.

இத்தகைய கோலங்களுடன் கடவுளாய் நடித்து மக்களுக்குக் கடவுள் மேல் இருக்கும் பக்தியைக் குறைப்பதைவிட, இந்தக் கோலத்துடன் தோன்றாமல் தடுக்கச் சட்டம் இயற்றுவதைப் பட முதலாளிகளைத் தவிர மற்றவர்கள் ஆதரிப்பார்கள்.

மதுரை
9—1—49 வெ. சாரங்கன்

○●○

★ ஒரு யோசனை

நமது தமிழ்ப்பட முதலாளிகளை ஒருவிதத்தில் மந்திரவாதிகள் என்றே கூறலாம். ஹிந்துமத தெய்வங்களும் புராணபுருஷர்களும் அவர்களிடம் அகப்பட்டுக்கொண்டு படும்பாடு சொல்லி முடியாது. அல்லி ராணி முதல் அனுமார் வரையில் எடுத்த படத்தையே எவ்வளவு தடவை வேண்டுமானாலும் சலியாமல் எடுத்து நமது தெய்வங்களைச் சந்தியில் இழுப்பதுடன் படம் பார்ப்பவர்கள் மறக்காமல் அமிர்தாஞ்சனத்தையும் கூடவே எடுத்துச் செல்லுமாறு செய்கிறார்கள். கடவுள்மார்களும் இந்திர ஜாலமோ மகேந்திர ஜாலமோ என்று எண்ணுமாறு படத்துக்குப் படம் வேஷ மாறுதலுடன் தோன்றுவார்கள். பீமசேனர் பஞ்சத்தில் அடிபட்டவர் போல் காணுவார். மன்மத வேஷதாரி உண்மையில் ஆஞ்சநேய வேஷத்திற்கே தகுதியாக இருப்பார். ஒரு படத்தில் 'மழ மழ'வென்ற முகத்துடன் இருக்கும் நாரதர் அடுத்த படத்தில் (தேவலோகத்தில் ஏற்படும் பிளேட் பஞ்சத்தினாலோ அல்லது வேறு என்ன காரணத்தினாலோ, தாடியுடன் காட்சி யளிப்பார். இத்தகைய தமிழ்ப் புராணப் படங்களைப் பார்க்கும் பிற மதஸ்தர்கள் இந்து தெய்வங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இம்மாதிரிப் படங்களைத்தான் சிக்ஷாக்கார முனியாண்டி முதலியவர்கள் பார்த்து Box office Hit களாகச் செய்கிறார்கள் என்று பட முதலாளிகள் பெருமையடித்துக் கொள்கிறார்கள்.

ஆனால் இதற்காகத் தெய்வங்கள் வரும் படங்களையே எடுக்கக்கூடாது எனச் சட்டமிடுவது தவறு. புராணப் படங்களையும் எடுக்கலாம். ஆனால் அதில் வரும் தெய்வங்களுக்கு ஏற்ற வேஷப்பொருத்தம் உள்ளவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். சரியான பொருத்தமின்றி, புராணங்களைத் திரித்து தெய்வங்களை இழிவுபடுத்திக் காட்டும் படங்களுக்கு சென்சார் போர்ட் அனுமதி தரக் கூடாது. இவ்வாறு செய்தால்தான் 'ராம ராஜ்யம்' போன்ற உயரிய புராணப் படங்களைக் காண முடியும்.

அண்ணாமலை
நகர்
9—1—49 ஏ. வி. ஆனந்தகுமார
சுவாமி

○●○

திரையில் தெய்வங்கள்

தமிழ்நாட்டு வெள்ளித் திரையில் தமிழ்க் கடவுள் முருகன், கீதையை உபதேசித்த கண்ணன், உண்மையை நிலை நிறுத்தப் பாடுபட்ட நாரதர் ஆகியவர்கள் படும் கஷ்டம் சொல்லி முடியாது. காமரூபர்களாகவும் கள்ளக் காதலர்களாகவும், சண்டை மூட்டும் தரகர்களாகவும் காட்டப்படுகிறார்கள். இவற்றைக் கண்ணுறும் பாமர மக்கள் தங்களது அறிவை இழப்பதோடு கடவுள்பால் கொண்டுள்ள பக்தியையும் நல்லெண்ணத்தையும் மாற்றிக் கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள்.

கடவுள் பக்தி பெருக வேண்டும்; அன்பு பரவ வேண்டும்; பக்தர்கள் முக்தி அடைய வேண்டும்; மக்கள் நல்வழியில் நடக்க வேண்டும் என்னும் நோக்கங்களுடன் அன்றோ புராணங்கள் எழுதப்பட்டன. ஆனால், அவற்றுக்கு முரணாக எவ்வளவு இழிவான முறையில் கடவுள் செயல்களைக் காட்டமுடியுமோ அவ்வளவையும், நம் பட முதலாளிகள் பணப் பெருக்கொன்றையே குறிக்கோளாக

கொண்டு, படம் பிடித்துக் காண்பித்து வருகிறார்கள்.

இத்தகைய ஆபாசங்களை ஒழித்துக் கட்டுவது ஜன நாயக சர்க்காரின் கடமைகளில் ஒன்றாகும். ஆகவே சினிமாக் காட்சியில் தெய்வங்களைக் கேவலப்படுத்திக் காட்டுவதைத் தடுக்கும் சட்டத்தை விரைவில் சர்க்கார் கொண்டு வருவார்களாக!

முசிறி
9—1—49 க. பழனியாண்டி பிள்ளை

○●○

கவனிப்பார்களா ?

படங்களில் இந்து மதத் தெய்வங்களைக் கேவலப்படுத்திக் காண்பிப்பதைத் தடுக்க சர்க்கார் முயற்சிப்பது பற்றிப் பலர் சந்தோஷமடைவர் என்பதில் சந்தேகமில்லை.

நம் அருந்தலைவரும் தீர்க்கதரிசியும் தமிழ் நாட்டின் அறிவுக் களஞ்சியமும், தன்னலங் கருதாது பிறர் நலத்திற்கே உழைப்பவருமான ஸ்ரீ ராஜாஜி ஒரு தடவை பம்பாயில் நிருபர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் பொழுது சொன்னதாவது:—

“இராமனைப் பற்றியோ நாரதரைப் பற்றியோ நம் பெரியோர்கள் கூறும் பொழுது தனிப் பெரும் ஆனந்தமடைகிறோம். ஆனால் சாதாரண மனிதன் ஒருவன் அவரைப்போல வேஷம் போட்டுக் கொண்டு வந்தால் நமக்கு ஒரு விதக் கசப்பு ஏற்படுகிறது. இதைப் பட முதலாளிகள் கவனிக்க வேண்டும்......”

இது ராஜாஜி ஒருவரின் அபிப்பிராயம் மட்டுமல்ல. இந்தியாவில் ‘கண்யமுள்ள’ ஒவ்வொருவருடைய அபிப்பிராயமும் இதுவே. சில படங்களில் நாரதருக்குத் தாடி வைத்தும் சில படங்களில் தாடி வைக்காமலும் காண்பிக்கப்படுகிறது.

இம்மாதிரியாகக் கடவுளைப் படம் பிடித்துக் காண்பிப்பதை வேறு நாட்டினன் ஒருவன் கண்டால் “இவர்களுடைய கடவுள் பட முதலாளியிடமும், ‘மேக்-அப்’ ஆசாமியிடமும் உள்ள கையாளோ?” என்று நினைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஸ்ரீ ராஜாஜியின் வாக்கு, இந்தியாவில் உள்ள மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கச் செய்யும் வாக்காகையால், பட முதலாளிகள் இதைக் கவனிப்பார்களா?

தாம்பரம்
10—1—49 எஸ். எஸ். வெங்கடராமன்

○●○

சங்கீதமும் கரகோஷமும்

சென்னையில் நடந்த சங்கீத விழாக்களை நேரில் அனுபவிக்க முடியாத ரஸிகர்களுக்குக் கிடைத்த சில ரஸமான விஷயங்களில், வித்வத் சபையில் தலைமை வகித்த பிடில் வித்வான் ஸ்ரீமான் ராஜமாணிக்கம் பிள்ளையவர்களின் தலைமைப் பிரசங்கத்தில் அடங்கிய உண்மையான சில கோரிக்கைகளையும் 9—1—49 ‘கல்கி’ இதழில் வெளியான தங்களுடைய பக்ஷபாதமற்ற விமரிசனத்தையும் எவரும் மறக்க முடியாது. விமரிசனத்தில் இடம்பெற்ற ஒவ்வொரு விஷயமும் ஒவ்வொரு அத்தியாயமாக வெளிவர வேண்டியவை என்றாலும் ரத்தினச் சுருக்கமாய் எழுதி, ரஸிகர்களின் உள்ளங்களைக்கொள்ளை கொண்டு விட்டீர்கள். சென்ற மாதத்தில் “ரேடியோ மகாதேவர்” என்ற தலைப்பில் எழுதிய அருமையான அபிப்பிராயங்களை யார் தான் மறக்க முடியும்?

சங்கீத விழாக்களுள் சில பாகங்களை ஒலி பரப்ப உதவிய விஞ்ஞானம் அதைக் கையாளத் தெரியாத அஞ்ஞானத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு, அநேக கருவிகளில் ஒரே கச்சேரி ஒலி பரப்பப் பட்டன. இதனால் ரேடியோ நிலையத்தாரும் ஒருவேளை சுருதி பேத முறையைக் கையாண்டனரோ என்று கூட எண்ணினேன்.

நம் தென்னாட்டுச் சங்கீதம், சுருதி விஷயத்தில் மட்டுமல்லாது ‘காலப்ரமாண’க் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுதலையடைந்து சுதந்திரமாய் விளங்கி வருவதை ரஸிகர்களின் சார்பில் குறிப்பிடுவது அவசியமாயிருக்கிறது. பாடகர்களும் பக்கவாத்தியக்காரர்களும் எப்பாடு பட்டாவது கேட்போரின் கரகோஷங்களைப் பெறுவதே தங்கள் வெற்றியின் அறிகுறி என்று எண்ணுவதால் அந்த வேகத்தில் காலப்ரமாணத்தை அதிகம் கவனிப்பதில்லை என்று தான் தோன்றுகிறது. “That breathless Silence which Convinces, far more than all the applause and encores in the world; is a psychic bond between the artist and his auditors.” என்ற ஒரு ரஷ்ய சங்கீத மேதாவியின் அபிப்பிராயத்தை எல்லா சங்கீத வித்வான்களும் உணர்ந்தால் நம்முடைய கர்நாடக சங்கீதம் உண்மையில் அபிவிருத்தியடையும்.

தஞ்சாவூர்
10—1—49 துரையப்ப பாகவதர்

○●○

கிரிக்கெட்டும் ரங்காச்சாரியும்

சமீபத்தில் இந்தியாவிற்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் நடக்கவிருக்கும் கிரிக்கெட் பந்தயத்தில் ஸ்ரீ ரங்காச்சாரி அவர்களின் பெயர் சேர்க்கப்படாதது கண்டு கிரிக்கெட் அன்பர்கள் அனைவருக்கும் பெரும் ஏமாற்றமாய் இருந்திருக்கும். ஏன்? அவர்களுக்கு ஆத்திரமாகவும் இருக்கும்.

சென்னை மண்ணிலே பிறந்து வளர்ந்து அங்கேயே கிரிக்கட் ஆடி, பந்தெறிவதில்-அதிலும் விரைவாகப் பந்தெறிவதில்—இந்தியாவிலேயே சிறந்தவர் என்று பெயர் பெற்றவர் ரங்காச்சாரி. சமீபத்தில் உலகத்திலேயே வேகமாகப் பந்தெறியும் நிபுணர்களில் ஒருவர் என்ற புகழையும் அவர் பெற்றார். சென்னையிலேயே, அவர் அதிகமாக ஆடிப் பழகிய மைதானத்தில் நடக்கப் போகும் பந்தயத்தில் அவரைச் சேர்க்காதது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருக்கிறது.

பம்பாய், டெல்லி முதலிய இடங்களில் உள்ளவர்கள் தமிழ்ப் புதல்வன் பந்தை லாகவமாக எறிவதைக் கண்டு களித்தனர். அவர் டெல்லியில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி அழியாப் புகழ் எய்தினர். ஆனால் அவருடைய பிரமாதமான ஆட்டத்தைச் சென்னையிலுள்ள கிரிக்கட் அபிமானிகள் பார்க்கக் கொடுத்து வைக்க வில்லை.

பாளையங்கோட்டை
8—1—49 ரா. விசுவநாதன்

புராணம் படும் பாடு

இப்போது வெளிவரும் படங்கள் சிலவற்றைப் பார்க்கும்போது, இன்னும் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு புராணப் படங்களில் சிவன் சக்தியுடன் 'ஆங்கில நடனம்' ஆடுவதை நாம் பார்க்க நேரிட்டால்கூட அவ்வளவாக ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகையால் இம்மாதிரி ஏதாவது நேரிடுவதற்கு முன்பே நம் தெய்வங்களைச் சினிமாவில் கேவலப்படுத்துவதைத் தடை செய்ய வேண்டியது அவசியம்தான்.

சினிமாவில் தெய்வங்களை எவ்வளவு கீழ்த்தரமாகக் காட்ட முடியுமோ அவ்வளவு கீழ்த்தரமாகக் காட்டிவிடுகிறார்கள். பரமசிவன் பார்வதியுடன் காதல் விளையாட்டுகள் விளையாடுவதையும் 'கன்னுபின்னு' என்று கீழ்த்தரமாக உரையாடுவதையும் பார்க்கும் பாமரர்களுக்குக் கடவுளிடம் எப்படி பக்தி உண்டாகும்? சினிமாவில் வரும் தெய்வங்கள் மக்களின் கீழ்த்தரமான காம உணர்ச்சியைக் கிளறிவிடுவதாக இருக்கிறதே தவிர பக்தியை உண்டாக்குவதாக இல்லை. தமிழ்ப் புராணப் படங்களைப் பிற மதத்தினரான கிறிஸ்தவர்கள், மகமதியர்கள் — முதலியவர்களும் பார்க்கிறார்கள். அப்படி அவர்கள் பார்க்கும் போது நம் மதத்தைப் பற்றியும் நம்முடைய தெய்வங்களைப் பற்றியும் எவ்வளவு கேவலமாக எண்ணிவிடுவார்கள்?

தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் தெய்வங்களை ஆபாசமாகக் காட்டுவதோடு நின்றுவிடவில்லை. நமது இதிகாசங்களையும், புராணக் கதைகளையும் தங்கள் மனம் போனவாறு திருத்திப் பார்ப்பவர்கள் மனதில் கடவுள் நெறிக்கு மாறான நெறிகளை உண்டாக்கிவிடுகிறார்கள். இம்மாதிரி நம் மத இதிகாசங்களைத் திருத்தி மாற்றிக் கொள்வதையும் தடை செய்யவேண்டியது அவசியம்.

கொஞ்ச நாட்களாகச் சினிமாவில் நாஸ்திகப் பிரசாரம் நடத்தி வருவதும் உண்மைதான். மக்களுக்கு ஹாஸ்யமூட்ட வேண்டும் என்பதற்காகச் சில நடிகர்கள் புராணங்களையும்—நம் தெய்வங்களையும் பழிக்கும் முறையில் பேசியும்—பாடியும் வருகிறார்கள். இம்மாதிரி நாஸ்திகத்தை மக்களிடையே வளர்த்து வருவது பெரும் ஆபத்தாக முடியும். ஆகையால் சினிமாக் கலையின் மூலம் நாஸ்திகப் பிரசாரம் நடைபெறுவதையும் தடை செய்ய வேண்டும்.

செங்கற்பட்டு
9—1—49 துரை

○●○

காந்திஜியின் அற நெறி

சினிமாக் காட்சிகளில் சில டைரக்டர்களின் சுய கற்பனையின் வாயிலாகத் தயாரிக்கப்படும் படங்களில் தெய்வங்கள் மனிதர்களிடம் கேவலமாக நடப்பதைபோல் காண்பிப்பதால் மனித சமுதாயம் மேற்கொண்டும் கேவலமாக நடக்க ஆரம்பித்திருக்கிறது.

உடனே இதைத் தடுத்துச் சீர்திருத்தத்துடனும் சத்திய நெறியுடனும் சன்மார்க்கத்துடனும் காந்திஜியின் கொள்கையாகிய ஒற்றுமை, உண்மை, அஹிம்சை முதலியவைகளை விளக்கிக் காட்டும் படங்கள் வெளிவரச் செய்ய வேண்டும். தெய்வங்களை கேவலப்படுத்திக் காட்டுவதைத் தடுத்து அதிவிரைவில் சர்க்கார் சட்டம் செய்ய வேண்டும்.

திருநெல்வேலி
9—1—49 அப்துல் ரஹ்மான்

○●○

சினிமாவில் தெய்வங்கள்

சில மாதங்களாகச் சென்னை சர்க்கார் தென்னிந்திய சினிமாப் படங்களின் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சியில் இறங்கியிருப்பது பாராட்டுவதற்குரியது. ஆனால் கடவுளின் பாகத்தை ஏற்று நடிகர்கள் நடிக்கக்கூடாது என்றால் புராணப் படங்களைத் தயாரிப்பதுதான் எப்படி? பருப்பில்லாமல் வேண்டுமானால் கல்யாணத்தை நடத்திவிடலாம். ஆனால் கடவுளில்லாது புராணப் படங்களைத் தயாரிப்பது எப்படி சாத்தியமாகும்? முருகனில்லாது வள்ளித் திருமணத்தை படமாகத் தயாரிக்க முடியுமா? ராமனில்லாத ராமாயணத்தையும், சிவபெருமானில்லாத திருவிளையாடற் புராணத்தையும் எப்படிப் படமாகத் தயாரிக்க முடியும்? சினிமாவில் தெய்வங்களின் வேஷத்தைத் தரிக்கக்கூடாது என்றால் புராணப் படங்களைத் தயாரிக்கக் கூடாது என்றுதானே அர்த்தமாகிறது?

சினிமாவில் தெய்வங்களை ஆபாசக் காட்சிகளில் கொண்டு வருவதைத் தடுக்க வேண்டியது அவசியம்தான். கடவுள் மனித நிலைக்கு மேற்பட்ட தெய்வநிலையில் உள்ளவர் என்பதைப் படத் தயாரிப்பாளர்கள் மறந்து விடுகிறார்கள். ஒரு சாதாரண மனிதனைப்



"என்ன சுவாமிகளே! நீங்கள் கூட கதர் உடுத்த ஆரம்பித்து விட்டீர்கள்! ஆச்சரியமாயிருக்கிறதே!"

"இது என்ன பிரமாதம்? இன்னும் கொஞ்ச நாளில் 'காங்கிரஸ் தியாகி' ஆகிப் பத்து ஏக்கரா நிலத்துக்குக் கூட மனுப் போட உத்தேசித்திருக்கிறேன்."

போலவே கடவுளையும் சிருஷ்டித்து விடுகிறார்கள். சிவன் சக்தியிடம் 'காம லீலைகள்' புரிவதையும், விஷ்ணு லக்ஷ்மியிடம் 'காம ரசம்' ததும்ப உரையாடுவதையும் பார்க்கும்போது "அடா! கடவுளே! நம் தெய்வங்களை இவ்வளவு கேவலமாகச் சிருஷ்டித்து விடுகிறார்களே இந்தப் படத் தயாரிப்பாளர்கள்" என்று வருந்தவேண்டியிருக்கிறது. தமிழ்ப் புராணப்படம் ஒன்றை வெளிநாட்டைச் சேர்ந்த தமிழ் கற்ற ஒருவர்—ஏன் வட இந்தியர் ஒருவர்-பார்க்கும்போது, அவர் நம்மைப் பற்றியும் நம்முடைய தெய்வங்களைப் பற்றியும் எவ்வளவு கீழ்த்தரமான அபிப்பிராயம் கொண்டு விடுவார்!

புராணப் படங்களில் தெய்வங்களை ஆபாசக் காட்சிகளில் கொண்டுவரக் கூடாது என்று சட்டம் செய்யலாம். அதற்கு மாறாக வரும் படங்களைச் 'சென்ஸார் போர்டில்' தடைசெய்து விடவேண்டும். தெய்வங்களின் வேஷத்தைத் தரிக்கக் கூடாது என்றோ புராணப் படங்களைத் தயாரிக்கக் கூடாது என்றோ தடைசெய்வது சரியல்ல.

செங்கற்பட்டு
3—1—49 எஸ். ஆர். சாமி.

○●○

வேலை தேடித் தரும் ஸ்தாபனம்

பொதுமக்களின் சௌகரியத்தை உத்தேசித்து, அவர்களுக்கு வேலை வாங்கித் தரும் பொருட்டு மத்திய சர்க்கார் 'எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்' என்று ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒரு ஆபீஸில் வேலைக்குப் போவதென்றால் இந்த ஆபீஸ் முத்திரை வேண்டுமாம். இதில் ரேஷன் ஆபீஸ்போல் பெயரைப் பதிந்து கொண்டு கார்டு வாங்கிக் கொள்ள வேண்டுமாம். இது நல்ல முறைதான். ஒரு ஆபீஸில் ஒரு ஸ்தானம் காலி என்றால் நாலுபேரை அனுப்பி ஒருவரைத் தேர்ந்தெடுக்கச் செய்தால் சரியான முறை. ஆனால் அதற்காக ஏராளமான பேரை அனுப்புவது நியாயமில்லை யல்லவா?

மதராஸ் வருமான வரி ஆபீஸில் வேலைக்காக 30—11—48 அன்று அவரவர்கள் சொந்தச் செலவில் ஆஜராகுங்கள் என்று ஒரு விளம்பரம் வந்தது. சென்னையில் வேலையாயிற்றே, உயர்ந்த ஆபீஸாயிற்றே என்று கை மோதிரத்தை அடகு வைத்து ரூ. 25 கொடுத்து அனுப்பினேன் என் மகனை. இந்த வேலைக்கு பல எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸ்கள் அனுப்பிய மொத்தம் இரண்டாயிரம்பேர் வந்திருந்தனராம். மதுரையிலிருந்து சுமார் நூற்றைம்பதுபேர் வந்திருந்தனராம். அங்கு காலி முப்பது அல்லது நாற்பது ஸ்தானம் என்று கேள்வி. இதற்காக ஆயிரக் கணக்கிலா ஆட்களை அனுப்புவது? இதிலிருந்து வேலையில்லாத் திண்டாட்ட ஆரம்பமும், எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸின் அளவில்லாமல் அனுப்பும் தன்மையும் தெரியவருகிறது. ஏழை மக்களுக்கு வேலை வாங்கி அளிக்காவிடினும் அனாவசியச் செலவாவது வைக்காதிருக்கலாம். இனியேனும் நம் மத்திய அரசாங்கத்து வேலை தேடித் தரும் ஸ்தாபனம் இவ்விதம் அளவின்றி ஆட்களை அனுப்பாதிருக்குமா?

மதுரை
24—12—48 சீதாலட்சுமி விசுவநாதன்

என் செய்வோம்?

இப்பொழுது உணவு ரேஷன் அமுலுக்கு வந்தபடியால் சர்க்கார் அலுவலகங்களிலிருந்து சுற்றறிக்கைகள் பறந்த வண்ணம் இருக்கின்றன. அவற்றில் ஒன்று இராமநாதபுரம் ஜில்லா கலெக்டரிடமிருந்து வந்தது.

"20-12-48 முதல் ரேஷன் அமுலுக்கு வருவதால் எல்லா ரைஸ் மில் சொந்தக்காரர்களும் 20-11-48 முதல் 30-11-48 வரை தங்கள் கொள்முதல் வகையறாக்களை சென்னை உத்தரவுப்படி பாரம் II இனம் 3-ன் படி மாதாந்திர வாராந்திரக் கணக்குகளைக் கலெக்டர் ஆபீஸிற்கு 10-12-48க்குள் அனுப்பவேண்டியது."

இந்த ஆர்டர் எழுந்த தேதி (கலெக்டர் ஆபீஸில்) 3-12-48; கணக்குகளை ஒப்புவிக்க வேண்டிய தேதி 10-12-48; இதை எங்களுக்குப் பட்டுவாடா செய்த தேதி 22-12-48. அது மட்டும் அல்ல. குறித்த தேதியில் கணக்கு அனுப்பாவிட்டால் லைசென்ஸ் ரத்து செய்யப்படும் என்ற எச்சரிக்கை வேறு!

இப்படியிருக்கையில் நாங்கள் எப்படி கணக்குகளை அனுப்புவோம்? எங்களுக்கு முடிவு தேதிக்குப் பின் பன்னிரண்டு நாட்கள் சென்றுதானே ஆர்டர் கிட்டியது. நாங்கள் இந்த நிலையிலே என் செய்வது?

மானாமதுரை
23—12—48 மா. கோ. கோவிந்தராஜன்

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'சட்டம் எப்பொழுது வருகிறது?' என்ற கடிதம் எழுதிய மதுரை வெ. சாரங்கனுக்கும், 'ஒரு யோசனை' என்ற கடிதம் எழுதிய அண்ணாமலை நகர் ஏ. வி. ஆனந்தகுமாரசுவாமிக்கும் ரூ. 12-8-0 விதம் பிரித்து வழங்கப்பட்டது.



அம்மா பிழைத்தாள்!

ரா. வீழிநாதன்



* * *

மணி ஐந்து அடித்தது. மருதவாணன் ஆபீஸை விட்டுப் புறப்பட்டு நேரே கடைத் தெருவுக்குச் சென்றான். 'பெங்கால் ஸில்க்' எம்போரியத்தின் கண்ணாடிக் கதவுகளுக்கு நடுவே நின்று கொண்டிருந்த சிலையும் அதன் மீது பள பள வென்று பிரகாசித்துக் கொண்டிருந்த சேலையும் அவனை வரவேற்றன. உள்ளே சென்று புடவைகளை எடுத்துப் போடச் சொன்னான். பல புடவைகளைப் பார்த்த பின் ஒரு சேலையைக் கையில் எடுத்துக் கொண்டு, "இதன் விலை என்ன?" என்று கேட்டான்.

"அதிகமில்லை, ஸார்! முப்பதே ரூபாய் தான். இந்த மாதிரி டிஸைன் நீங்கள் முன்னால் பார்த்தே இருக்க முடியாது. இன்று காலையில்தான் இருபத்தொன்பது புடவைகள் வந்தன. பாக்கி இருப்பது மூன்றே மூன்றுதான். வந்ததும் வராதது மாகப் பறந்து போய்விட்டன, ஸார்!"

"அதோ இருக்கிறதே, ஜரிகைப் பெட்டுப் போட்ட புடவை, அதை எடுங்கள், பார்க்கலாம்!"

"அது இன்னும் உயர்ந்த ரகம், ஸார்! மயிலாப்பூர் அம்மாமார்கள் எல்லாரும் மாலை டிரஸாக உடுத்திக் கொள்ளுகிறார்கள். அதில் உள்ள ஜரிகையும் ரொம்ப உயர்ந்த ஜரிகை, ஸார்!"

"ஆமாம், இதே பார்டரில் நீலப் புடவை இருக்கிறதா?"

"ஓ! இருக்கிறதே! டேய், அந்த நீலப் புடவையை எடுத்து இப்படிப் போடு"

பள பள வென்று கண்ணைப் பறிக்கும் அந்தப் புடவை மருதவாணனின் கையில் ஏறியது.

மூன்று மாதங்களுக்கு முன் அவன் ஒரு தடவை ஊருக்குப் போயிருந்தான். அப்பொழுது அவனுடைய மாமா பெண், அடுத்த வீட்டுப் பங்கஜத்தின் புடவை ஒன்றைக் கொண்டு வந்து காட்டி, "அத்தான், எனக்கும் இம்மாதிரி ஒரு புடவை வாங்கித் தருகிறாயா?" என்று கேட்டாள். அவள்தானே அவனுக்கு மனைவியாக வாய்க்கப் போகிறவள். அவள் கேட்டால் இல்லை யென்று சொல்லி விட முடியுமா? "ஆகட்டும், உனக்கில்லாமலா?" என்று அவன் சொல்லிவிட்டு வந்தான்.

தாயாரிடமிருந்து தனக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை யென்றும், பொங்கல் பண்டிகையைச் சாக்காக வைத்துக் கொண்டு மருதவாணனை ஒரு தடை ஊருக்கு வந்துவிட்டுப் போகும்படியும் ஒரு கடிதம் வந்திருந்தது. பொங்கல் விடுமுறையில் ஊருக்குப் போவது என்று நினைத்த மருதவாணன், தனக்கு மனைவியாக வாய்க்கப் போகும் மாமா பெண்ணின் நினைவு வரவே புடவை எடுப்பதற்காகக் கடைக்கு வந்தான். புடவை பிடித்துவிடவே பணம் எடுப்பதற்காகப் பையில் கையை விட்டான்.

இதென்ன, இது? பைக்குள் ஏதாவது தேன்-கீன் இருந்து கையில் கொட்டி விட்டதா என்ன? மணி பர்ஸைக் காணோம்? அதிசயமாக வல்லவா இருக்கிறது! எங்கே போய்விடும்? கோட்டுப் பைக்குள்ளே தானிருக்க வேண்டும். கோட்டின் உள் பையைப் பார்த்தான். மேல் பையையும் தடவிப் பார்த்தான். ஆனால் மணிபர்ஸை எங்குமே காணோம்.

புடவையைக் காண்பித்த பையன், "ஸார், இம்மாதிரித் துணி இந்தக் கடைத் தெருவிலேயே, கிடையாது. விலையும் கொள்ளை மலிவு, ஸார்! முப்பத்தைந்து ரூபாய்தான்" என்றான்.

கஷ்டம் வரும்பொழுது கேட்டுக் கொண்டா வருகிறது? மருதவாணன் தேடாத இடமில்லை. அவன் உடல் வியர்த்து விறு விறுத்துவிட்டது. எதிரே யிருந்த கண்ணாடி, சிரிக்கும் கண்ணாடியைப் போல அவன் முகத்தை மிகவும் விகாரப் படுத்திக் காட்டியது. அவன் பிரமை பிடித்தவன் போல நின்றான். கடைக்காரன் ஏளனம் நிறைந்த குரலில் சிரித்தது அவன் மனதை என்னவோ செய்தது.

"இதை வெளியிலேயே வைத்திருங்கள். நான் போய் என் நண்பன் ஒருவனை அழைத்து வருகிறேன்" என்று சொல்லி விட்டு வெகு வேகமாகக் கடையை விட்டு வெளியேறினான் மருதவாணன்.

அவனிடம் இருந்தது மொத்தம் ஐம்பதே ரூபாய்தான். என்ன செய்வது? அந்த மணி பர்ஸை அடித்துக் கொண்டு போன திருடன் கண்களில் அகப்பட்டால், அவன் கால்களில் விழுந்து கெஞ்சி அந்த

ரூபாயைக் கடனாகக் கேட்டுப் பார்க்கலாம் என்று கூடத் தோன்றிற்று அவனுக்கு.

பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும் என்பது முற்றிலும் உண்மை. பணம் பறி போயிற்று. படுத்த படுக்கையிலிருக்கும் தாயாரைப் பார்த்து விட்டு வரலாம். 'புடவை வாங்கிக் கொண்டு வருவேன்' என்ற ஆவலுடன் தன் வரவை எதிர்பார்த்துத் தவம் கிடக்கும் மாமா பெண்ணையும் பார்த்து விட்டு வரலாம் என்று அவன் கட்டியிருந்த மனக் கோட்டைகள் எல்லாம் தகர்ந்தன. அதோடு மட்டும் நின்றதா? சைனாபஜாரிலிருந்து மயிலாப்பூருக்கு அவன் நடையைக் கட்ட வேண்டியதாயிற்று! பஸ் சார்ஜ் ஏகத்தாறுக ஏறிக் கிடக்கும் இந்தக் காலத்தில் டிராம் சார்ஜுக்காவது கையில் காசு இருந்தால் தானே?

எப்படியோ மருதவாணன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் உள்ளத்தில் இருள் கவிந்திருந்தது போலவே வீட்டிலும் இருள் சூழ்ந்திருந்தது. வேலைக்கார வேலப்பனைக் கூப்பிட்டுப் பார்த்தான். அவன் இருந்தால்தானே பதில் சொல்லுவான்? அவன் எங்கே தொலைந்து விட்டான்? மணி பர்ஸுடன் கூடவே அவனும் தொலைந்து விட்டானா, என்ன?

மருதவாணன் வீடு வந்து சேரும் பொழுது மணி பத்தாகிவிட்டது. கிட்டத்தட்ட ஐந்து மைல் கால் கடுக்க நடந்து வந்திருந்தான். அந்தக் களைப்புடன் பசி வேறு சேர்ந்து கொண்டது. பத்து



மணிக்கு மேல் இந்தக் காலத்தில் எந்த ஹோட்டலில் சாப்பாடு போடுகிறார்கள்? அப்படியே சாப்பாடு போடுகிறார்கள் என்றாலும் கையில் காசு வேண்டாமா?

மருதவாணன் பேசாமல் படுக்கையைப் போட்டுக் கொண்டு படுத்தான். வயிற்றைக் கிள்ளிய பசி அவனைத் தூங்கவிட்டால் தானே? புரண்டு புரண்டு படுத்தான். எப்படியோ பொழுதும் விடிந்தது. ஆனால் வேலப்பன் வரவில்லை. ஒரு நாள் ஆயிற்று. இரண்டு நாள் ஆயிற்று. வேலைக்காரன் சொல்லிக் கொள்ளாமலே வேலையை விட்டு நின்று விட்டான் என்ற முடிவுக்கு வந்தான் மருதவாணன்.

மூன்றும் நாள் காலையில் பொழுது விடிந்ததும் விடியாததுமாக வேலைக்கார வேலப்பன் கையைக் கட்டிக் கொண்டு மருதவாணனின் முன்னிலையில் வந்து நின்றான். மருதவாணனுக்கு வந்த கோபத்தில் அவனை அப்படியே விழுங்கிவிடுவான்போலிருந்தது. ஆனால் வேலப்பனின் குழி விழுந்த கண்களும பரந்து கிடந்த தலை மயிரும், சோகம் பரந்த முகமும், கோபத்தை இருந்த இடம் தெரியாமல் அடித்து விட்டன. அவனுக்கு வேலப்பன் மீது அனுதாபம்தான் ஏற்பட்டது.

“எசமான், என் அம்மாளுக்கு உடம்பு சரியில்லிங்க. அவளை விட்டால் எனக்குக் கதி யாருங்க?” என்றான் வேலப்பன் கையைப் பிசைந்து கொண்டே.

“என்ன? உடம்பு சரியில்லையா? இப்பொழுது எப்படி யிருக்கிறது? சற்றுத் தேவலையா?” என்று கேள்விக்கு மேல் கேள்வியை அடுக்கினான் மருதவாணன். உடனே அவனுக்குத் தன் தாயாரின் நினைவு வந்தது. “அவளுக்கு உடம்பு என்னவோ? இப்பொழுது எப்படி யிருக்கிறதோ?” என்ற கவலையும் அவனை வாட்டியது.

“...அதனால்தான் எசமான், இரண்டு நாட்களாக வேலைக்கு வர முடியவில்லை. கைக்குச் சம்பளமும் வர வில்லை. கையில் வேறு காசும் இல்லை......” என்று ஆரம்பித்தான் வேலப்பன்.

காசு என்ற சொல்லைக் கேட்டதும், மருதவாணனின் மனத்திலே ஒரு கிளர்ச்சி எழுந்தது. அவனுடைய மணி பர்ஸை அபகரித்துச் சென்ற திருடன் இனந்தெரியாத தோற்றத்தில் அவன் முன்பு காட்சியளித்தான். அப்பப்பா! அந்த மணி பர்ஸ் பறி போனதனால் அவனுக்கு எத்தனை

சிரமங்கள்? உடல் நலம் குன்றியிருந்த தாயாரைப் பார்த்துவரப் போக முடிய வில்லை. ஆசை அலைகளைக் கிளறி விட்டுக் கொண்டிருந்த மாமா மகளுக்கு ஏமாற்றத்தை அளிக்க நேர்ந்து விட்டது. வேலைக்கார வேலப்பனுக்கும் சம்பளம் கொடுக்க முடியாமற் போய்விட்டது.

மருதவாணன் இவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். வேலைக்கார வேலப்பன், "எசமான், வீட்டில் அம்மாளின் வெள்ளிக் காப்பு இரண்டு இருந்தது. அதை அடகு வைத்துப் பணம் வாங்கிவரலாம் என்று பட்டணத்துக்குப் போனேன். ஆனால் பணம் கிடைக்கவில்லை..." என்று சொல்லிக் கொண்டே போனான்.

"அதிருக்கட்டுமடா! இப்பொழுது உன் அம்மாவின் உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டான் மருதவாணன்.

"...பணத்துக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அப்புறம் ......"

"அந்தக் கதை அப்புறம் ஆகட்டுமடா! முதலில் உன் அம்மாவுக்கு உடம்பு எப்படியிருக்கிறது என்று சொல்லு..."

"......மனம் சோர்ந்து வீடு திரும்பினேன். வழியிலே மழை பிடித்துக் கொண்டு விட்டது. ஆகவே ஓட ஆரம்பித்தேன். கொஞ்ச தூரம் ஓடுவதற்குள் கால் வழுக்கிக் கீழே விழுந்து விட்டேன். 'டிராம் வண்டியோ மோட்டார் வண்டியோ மேலே ஏறி உயிரை மாய்த்திருக்கக் கூடாதா? இப்படிக் கஷ்டப்பட்டு உயிர் வாழ்வதைக் காட்டிலும் உயிரை விடுவதே மேல்' என்று கூடத் தோன்றி விட்டது, எசமான்! ஆனால் உடம்பைத் தட்டிக் கொண்டு எழுந்திருப்பதற்குள்ளாக......

"என்ன ஆயிற்று?" என்று பரபரப்புடன் கேட்டான் மருதவாணன்.

"ஒன்றுமில்லை, எசமான். ஒரு மணி பர்ஸ் கீழே கிடந்து அகப்பட்டது......"

"என்ன? என்ன சொன்னாய்?"

"ஒரு கருப்பு மணி பர்ஸ் கீழே கிடந்து அகப்பட்டதுங்க. அதைத் திறந்து பார்த்தேன். ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. எசமான்! கடவுளுடைய கருணையே கருணை! எனக்கேற்பட்ட ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. வீட்டுக்கு ஒரே ஓட்டமாக ஓடினேன். ஒரு டாக்டரைக் கூப்பிட்டுக் காட்டினேன். டாக்டருக்குப் பீஸ் பதினைந்து ரூபாயும் மருந்துக்கு ஐந்து ரூபாயும் ஆயிற்று. பாக்கி......"

ரேடியோ நிலையத்தில்!



அறிவிப்பாளர்:—அடுத்தபடியாக ஸ்ரீமதி கான சங்கீத ராணி, தேவாமிர்தவர்ஷிணி ராகத்தை ஆலாபனம் செய்வார்.

வேலப்பன் வாக்கியத்தை முடிக்காமலே இடுப்பில் செருகியிருந்த மணி பர்ஸை வெளியில் எடுத்தான். மருதவாணன் கெட்டுப் போக்கிய அதே மணி பர்ஸ் தான் அது. அதன் காரணமாக மருதவாணன் ஊருக்குப் புறப்பட முடியவில்லை. ஆனால் வேலப்பனின் தாயார் பிழைத்துவிட்டாள்.

"எசமான், இது எந்தப் புண்ணியவானுடைய மணி பர்ஸோ! கடவுள் அவருக்கு நீண்ட ஆயுளையும் நிறையப் பொருளையும் அளிக்கவேண்டும்" என்று ஆசீர்வதித்தான் வேலப்பன்.


அதே சமயம் தபால் காரன் தபால் ஒன்றைக் கொடுத்துச் சென்றான். கடிதம் மருதவாணனின் தாயாரிடமிருந்து வந்திருந்தது! 'எனக்கு உடம்பு நன்றாகக் குணமடைந்து விட்டது. கவலைப்படவேண்டாம். இந்தத் தையிலேயே உனக்கு மாமா பெண் மரகதத்தைக் கல்யாணம் செய்து வைத்து விடுவதாகத் தீர்மானித்திருக்கிறோம். ஆகவே இன்னும் பத்து நாட்களுக்குள் பதினைந்து நாட்கள் லீவு எடுத்துக்கொண்டு வந்து சேரு' என்பதுதான் அந்தக் கடிதத்தின் சாராம்சம். மகிழ்ச்சியில் மூழ்கிய மருதவாணனுக்குத் தன்னுடைய மணி பர்ஸ் கெட்டுப்போன விஷயம் மறந்தே போய் விட்டதில் ஆச்சரியம் ஏது?


துணிகள்
துப்புரவாகவும்
வெண்மையாகவும்
சலவைசெய்யப்
பட்டுள்ளன...
...அது!
ஸன்லைட் சோப்-
பினால்தான்!
SUNLIGHT SOAP
SUNLIGHT SOAP
துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகச்
சலவை செய்கிறது

S. 105-174 TM

உங்களுக்கு எடை குறைந்து தளர்ச்சி, அதைரியம், பலவீனம்

வெறுப்பு உணர்ச்சிகள் ஏற்பட்டால்



இயற்கையில் உங்களுக்குப் போதிய அளவில் தாதுப் பொருள்களும விடாமின்களும் இல்லை என்பதை எச்சரிக்கத்தான் "தாதுவும் விடாமினும்" குறைந்து விட்டது என்று வைத்தியர்களும் கூறுகிறார்கள்.

சமைத்த உணவுப் பதார்த்தங்கள் உங்களுக்குப் போதிய தாதுக்களை அளிக்கின்றன என்று கூறமுடியாது.

இந்த விஷயத்தில் நீங்கள் வெகுவாய் சிரத்தை எடுத்துக் கொள்ளா விட்டால்—உங்கள் தேகத்தின் வியூக சக்தி குறைந்து, துன்ப மளிக்கும் வியாதிகள் வெகு சுலபமாக உண்டாகும். பிற்பாடு வாரக் கணக்கில் வைத்தியமும் மருந்தும்தான்.

மருந்துகளை உபயோகிக்காமல் உடனடியாகவே உங்கள் ஆரோக்கியத்தையும் சரீரத்தையும் திடப்படுத்துங்கள்

யோசனை செய்யாமல் விகெல்ப் சாப்பிடுங்கள். மனித வளர்ச்சி வியூகத்திற்கு, இன்றியமையாத அத்யாவசியமான 12 தாதுக்களில் — கால்ஷியம், பாஸ்பரஸ், கந்தகம், இரும்பு, மக்னீஷியம், அயோடின் ஆகாரம் போன்ற 9 தாதுக்கள் அடங்கியிருக்கின்றன.

விகெல்ப் ஒரு சாதாரண முறையில், தாதுப் பொருள்கள் அனைத்துக்கும் இருப்பிடமான கடல் மூலிகையிலிருந்து தயாரிக்கப் பட்டதுதான்—தயாரிப்பில் விடமின் B 1, D 2 வும் கொஞ்சம், இரும்பும் சேர்க்கப் பட்டிருப்பதைத் தவிர வேறு மருந்து எதுவும் சேர்க்கப்படவில்லை. இன்றே விகெல்ப் உபயோகியுங்கள் எவ்வளவு விறுவிறுப்பாகவும், சுறு சுறுப்பாகவும், ஆரோக்யத்துடனும், ஆவலுடனும் வேலை செய்ய முடிகிறது என்பதை உணர்வீர்கள்.

டானிக் ஆகாரம்

VIKELP

MINERAL-VITAMIN TABLETS

V. 37

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press.
116-119, Sladens Garden Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI ஜனவரி 23, 1949 4 அணா

REGD. NO. M. 4392



